விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144.
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 புரட்டாதி 24 சனிக்கிழமை (10.10.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 296

## சனி, ஞாயிறு ஊரடங்கு அமுலாக்கும் திட்டம் இல்லை
அஜித் ரோஹண

15ஆம் பக்கம் பார்க்க

## 10 மாதக் குழந்தைக்கு கொரோனா தொற்று

03ஆம் பக்கம் பார்க்க

## க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவனுக்கு வைரஸ் தொற்று உறுதி

03ஆம் பக்கம் பார்க்க

## பணப்பரிமாற்றத்தால் கொரோனா பரவும்
பொதுமக்களுக்கு எச்சரிக்கை

05ஆம் பக்கம் பார்க்க

## யாழ். அனலைதீவு முற்றாக முடக்கம்

06ஆம் பக்கம் பார்க்க

## கொரோனா வைரஸ்
# சமூக பரவலாக மாறவில்லையாம்!
## மூல காரணத்தை சபையில் மூடி மறைத்த சுகாதார அமைச்சர்



(கொழும்பு)

இலங்கையில் கொரோனா இன்னமும் சமூக பரவலாக மாற்றமடையவில்லை. ஆரம்பத்தில் இருந்தே நாம் ஆரோக்கியமான நிலைமையில் இருந்தோம் என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி சபையில் தெரிவித்துள்ளார்.

அதேவேளை இலங்கையில் ஏற்பட்டுள்ள கொரோனா பரவல் இரண்டாம் அலைக்கு காரணம் என்ன என்பதை சபையில் வெளிப்படுத்தாமல் மௌனம் காத்தார்.

(23ஆம் பக்கம் பார்க்க)

## சீனாவைப் போன்ற வளர்ச்சிப் பாதையில் இலங்கையை கொண்டு செல்வதே எனது குறிக்கோள் - ஜனாதிபதி

(கொழும்பு)

சீனா சிறந்த வளர்ச்சிப் பாதையை நோக்கி செல்வதனைப் போன்று இலங்கையையும் கொண்டு வருவதே எனது குறிக்கோள் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுவின் அரசியல் பணியகத்தின் உறுப்பினரும், வெளியுறவு 24

## வவுனியாவில் கிணற்றிலிருந்து புலனாய்வு அதிகாரி சடலமாக மீட்பு

(வவுனியா)

வீட்டுக் கிணறு ஒன்றிலிருந்து இராணுவப் புலனாய்வுத்துறை அதிகாரியின் சடலம் நேற்று அதிகாலை கண்டெடுக்கப்பட்டுள்ளது. 23

## கலைப்பீட விரிவுரையாளர்கள் வகுப்புக்களுக்கு செல்ல மறுப்பு
மாணவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்குள் நேற்று அட்டகாசத்தில் ஈடுபட்ட மாணவர்கள் இனங்காணப்பட்டு அவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

மாணவர்களின் 23

## யாழ். பல்கலை மோதல் விவகாரம் தொடர்பில்
விசாரணை நடத்த தனிநபர் ஆயம் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம் 23

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை நாளை

(கொழும்பு)

நாளை ஞாயிற்றுக்கிழமை திட்ட 23

உலக உளநல நாள் - 2020

உதவி வரமாகலாம்
காயங்களைச் சீர் செய்வோம்
உளம் காத்து, நலம் வளர்ப்போம்
உதவிகள் பெறுவோம் - உளத்
தயக்கங்கள் களைவோம்
உதவி வரமாகலாம்.



உளவளத்துணைசார் உதவிகளுக்கு:-
யாழ்ப்பாணம்
076 766 5151, 076 766 8080, 076 766 8585
கிளிநொச்சி - 076 766 5252
முல்லைத்தீவு - 076 766 5353

சாந்திகம் உளவளத்துணை நிலையம்
(C-493)

### கொரோனா வைரஸ் பரவல் தொடர்பான

# உண்மைத் தகவல் வழங்கிய மருத்துவர் பதவி நீக்கம்

## ராஜித சேனாரத்ன குற்றச்சாட்டு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவல் நிலைமை சம்பந்தமாக மருத்துவர் என்ற முறையில் மக்களுக்கு உண்மையை கூறியதன் காரணமாகவே அரசாங்கம், பொரள்ளை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் மருத்துவர் ஜயருவான் பண்டாரவை அந்த பதவியில் இருந்து நீக்கியதாக முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன குற்றம் சுமத்தியு ள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவல கத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் நியமித்த மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் தற்போது நீக்கப்பட்டுள்ளார்.

அந்த பணிப்பாளர் பிரதமர் மகிந்த ராஜபக்சவுடனேயே முழுமையாக அரசி யலில் ஈடுபட்டார். அவர் தனிப்பட்ட ரீதியில் நல்லவர். அவரது திறமையை பார்த்தே நான் அந்த பதவியில் நியமித்தேன். அவருக்கு நிறைவேற்று தரத்திலான தகுதி இருக்கவில்லை என்பது தான் சிறிய பிரச்சினை.

இதனால், அவரை நான் பதில் பணிப் பாளராக நியமித்தேன். மருத்துவ ஆரா ய்ச்சி நிறுவனம் மிகவும் பலவீனமாக இருந்தது. அதனை முன்னேற்றவே அவரை நியமித்தேன். அவர் அதனை முன்னேற்றினார்.

மருத்துவர் என்ற வகையில் அவர் அறிக்கைகளை வெளியிட்டார். அவர் அப்படியான அறிக்கைகளை வெளியிட் டாலும் அரசாங்கம் கொரோனா பரவல் முழுந்து விட்டது என்றே காட்டிய பி.சி.ஆர். பரிசோதனைக்கான கேள்வி மனுவை யும் அரசாங்கம் இரத்துச் செய்தது. அவர் ஆதரித்த அரசாங்கமே அவரை பணியில் இருந்து நீக்கியுள்ளது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தற்போது என்ன கூறுகிறது? என்று நான் கேட்கிறேன் என ராஜித சேனாரத்ன குறிப்பிட்டுள்ளார். (ம-03)

### வவுனியாவில் கடந்தவாரம்

# திருடப்பட்ட நகைகள் ஒரு வாரத்தில் மீட்பு

## இரு சந்தேகநபர்கள் கைது

(வவுனியா)

கடந்த வாரம் வவுனியா - மன்னார் வீதியில் திருடப்பட்ட தங்க நகைகள் ஒரு வாரத்தின் பின் நேற்று செட்டிகுளம் பகுதியில் மீட்கப்பட்டுள்ளதுடன் சந்தேக த்தில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரி விக்கையில்,

கடந்த வெள்ளிக்கிழமை மன்னார் வீதி இரண்டாம் ஒழுங்கை, வேப்பங் குளத்தில் வீடு ஒன்றில் நான்கு பவுண் தங்க நகைகள் திருடப்பட்டுள்ளதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டையடுத்து வவுனியா தலைமை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பி.ஆர்.மானமடுவவின் வழிநடத்தலில் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி சுனில் சாந்தவின் தலை மையில் சென்ற குழுவினரால் செட்டி குளம் மெனிக்பாம் பகுதியில் வவுனி யாவில் திருடப்பட்ட தங்க நகைகள் நான்கு பவுண் நேற்று மீட்கப்பட்டதுடன் செட்டிகுளம் பகுதியை சேர்ந்த 20, 23 வயதுடைய இரு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைகளின் பின்னர் நேற்றைய தினம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப் பட்ட போது 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ம-03.299)

### மன்னார் மாவட்டத்துக்கான

# போக்குவரத்து சேவைகள் வழமைக்கு திரும்பியது

(மன்னார்)

மன்னாரில் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக தடை விதிக்கப்பட்டிருந்த போக்குவரத்து சேவைகள் மீண்டும் வழமைக்கு திரும்பியுள்ளதோடு, அனை வரும் சுகாதார நடைமுறைகளை பின் பற்ற வேண்டும் என மன்னார் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ். குணபாலன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் ஏற்பட்டுள்ள கொரோனா பாதிப்பு தொடர்பாக வடமாகாண ஆளுந ரின் பணிப்புரைக்கு அமைவாக மன்னார் மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத் தில் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அவசர கலந்துரை யாடல் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத் திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன், மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலா நிதி டி.வினோதன், பிரதேசச் செயலா ளர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், செயலாளர்கள், இராணு வம்,பொலிஸ், கடற்படை அதிகாரிகள் மற்றும் அழைக்கப்பட்ட திணைக்கள அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது கருத்து தெரிவித்த மன்னார் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன்,

மன்னாரில் கொரோனாத் தொற்று நோயாளருடன் தொடர்பை கொண்ட வர்கள் என்பதன் அடிப்படையிலே 42 பேரும் அவர்களுடன் தொடர்பில் இருந்த வர்கள் என்பதன் அடிப்படையில் 51 பேரும் அடையாளப்படுத்தப்பட்டு அவர்க ளுக்கான பி.சி.ஆர். பரிசோதனைகள் இடம் பெற்று வருகின்றது.

2 ஆம் நிலையை பொறுத்த வகை யில் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கான ஏற்பாடுகளை மன்னார் பிராந்திய சுகா தார சேவைகள் பணிமனை மேற்கொ ண்டு வருகின்றது.

மேலும் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக தடை விதிக்கப்பட்டிருந்த போக்குவரத்து சேவைகள் மீண்டும் நேற்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிமுதல் வழமைக்குத் திரும்ப ஏற்பா டுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்று தடுப்பு நடவ டிக்கைகளுக்கு அமைவாகவும் சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாகவும் போக்குவரத்துச் சேவைகள் மேற்கொள் ளப்பட வேண்டும்.

அரச , தனியார் போக்குவரத்துச் சேவையின் பூரண ஒத்துழைப்பை நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

கடல் மூலமாக கடத்தல் நடவடிக் கைகளில் ஈடுபடுகின்றவர்கள், அவற்றில் இருந்து மக்களின் நலனை கருத்தில் கொண்டு குறித்த நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும்.

குறித்த விடயம் தொடர்பாக கடற்ப டையினருக்கு அறிவித்தல் வழங்கப் பட்டுள்ளது.

இனிவரும் காலங்களில் இறுக்கமான நடைமுறைகளுக்கு அமைவாக கடல் வழியான கடத்தல் செயற்பாடுகள் நிறுத் தப்படும்.

இந்தியாவில் கொரோனாத் தாக்கம் அதிகரித்துள்ளமையினால் அச்ச நிலை யில் நாம் உள்ளோம் என்றார். (ம-03)

**மணமகன் தேவை**

யாழிந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976ஆம் ஆண்டு பிறந்த குடும்பப்பாங்கான ஆசிரியையாக கடமை புரியும் மணமகளிற்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்பு (4361)

077 340 5951

e-mail : engchelvam@gmail.com

### யாழ். பல்கலையில் மோதல்

# மாணவர் ஒருவர் போதனாவில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலை மாணவர்களிடையே நடைபெற்ற மோதலின் போது, நிர்வாகத் தரப்பால் தாக்கப்பட்டதாகத் தெரிவித்து மாணவர் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இரண்டாம் வருட மாணவர்களுக்கும் மூன்றாம் வருட மாணவர்களுக்கும் இடையே நேற்று முன்தினம் இரவு மோதல் இடம்பெற்றது.

அந்த மோதலின் போது, சம்பவ இடத் திற்குச் சென்ற யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் மற்றும் விரிவுரை யாளர்கள் மோதலைக் கட்டுப்படுத்தச் சென்றபோது, அங்கு தள்ளுமுள்ளு ஏற்பட்டுள்ளது.

இதன்போது, துணைவேந்தர் நில த்தில் விழுந்துவிட்டார். அப்போது, விரிவு ரையாளர் ஒருவர் தம்மை தாக்கியதாக மாணவர்கள் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில், தாக்குதலுக்குள்ளாக் கப்பட்ட வசந் என்ற மாணவன் நேற்று முன்தினம் இரவு யாழ்.போதனா வைத் தியசாலையில் காயங்களுடன் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

குறித்த மாணவன் நிர்வாகத் தரப்பால் தான் தாக்கப்பட்டதாக பொலிஸாரின் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். (ம-03.101)

# வலி. வடக்கு மீனவர்களுக்கு பதிவு நடைமுறை அமுலானது

(குப்பிழான்)

வலி. வடக்கைச் சேர்ந்த மீனவர்கள் அனைவரும் கடலுக்கு தொழிலுக்காகச் செல்கின்ற போது செல்கின்ற நேரத் தையும் அதேநேரம் மீண்டும் கரைக்கு வருகின்ற போது அவர்கள் திரும்பி வரும் நேரத்தைப் பதிவு செய்வதுடன் அவர் களின் கையொப்பத்தையும் பெறுகின்ற பதிவு நடைமுறையை வலி. வடக்கு கடற்தொழிலாளர் சங்கங்கள் பேண வேண்டுமெனத் தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளதாக தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் ச. சிவஸ்ரீ தெரிவித்தார்.

கொவிட்-19 நோய்த் தாக்கத்திலிருந்து பொதுமக்களைப் பாதுகாப்பது தொடர்பாக ஆராயும் விசேட கூட்டம் தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் மேற்படி பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்ற போது மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

தற்போதைய கொவிட்-19 நோய்த் தாக்கத்தின் மத்தியில் கடற்தொழிலில் ஈடுபட்டு வரும் மீனவர்கள் சிலர் அனுமதி யின்றி இலங்கை கடல் எல்லையைத் தாண்டி மீன்பிடிக்கச் செல்வதுடன் இந்திய மீனவர்களுடன் தொடர்புகளைப் பேணு கின்ற நிலைமையும் சுட்டிக் காட்டப்பட் டப்பட்டுள்ளது.

தேவைக்கேற்ப குறித்த பதிவு நடைமு றையைப் பொலிஸாரும் கடற்படையி னரும் பரிசீலனை செய்ய முடியுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ம-03.18)

# இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட இந்தியாவிற்கு உரிமையில்லை

- சரத் வீரசேகர -

(கொழும்பு)

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு கேட்பதற்கு இந்தியாவுக்கு தார்மீக உரிமை இல்லை என உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.



நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் நடைபெற்ற, இலங்கையின் வெளிநாட்டு ஒப்பந்தங்கள் தொடர்பாக சபையை ஒத்திவைக்கும் நேரத்தில் நடந்த விவாதத்தில் கலந்து கொண்ட அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது, "இந்திய பிரதமர் நரேந்திர மோடி, 13 ஆவது திருத்தத்தை இந்த நாட்டின் உள்ளக விவகாரம் என்று கவனிக்காமல், செயற்படுத்துமாறு கேட்டுக் கொண்டார்.

இந்தியா தனது அரசியலமைப்பிலிருந்து 370 ஆவது பிரிவை இரத்து செய்வது குறித்து வெளிநாட்டு அரசாங்கங்கள் மோசமாக கருத்து தெரிவித்த போதும், அங்குள்ள சிக்கலான ஜம்மு- காஷ்மீர் பிராந்தியத்தில் உள்ள மக்களுக்கு வழங்கப்பட்ட சிறப்பு அந்தஸ்தை இந்தியா இரத்துச் செய்ததாக குற்றம் சாட்டிய போதும், நமது பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கருத்து கேட்கும்போது, இது இந்தியாவின் உள்ளக விவகாரம் எனக் கூறினார்.

13 ஆவது திருத்தம், இலங்கையின் உள்ளக விவகாரம் என்பதை அறிந்த பிரதமர் மோடி, அதை செயற்படுத்தக் கேட்பது ஏற்புடையதல்ல. இந்தோ-லங்கா உடன்படிக்கையின் ஆணைப்படி பிரதமர் மோடி அவ்வாறு கேட்கிறார் என்று சிலர் விளக்குகிறார்கள்.

இந்தோ-லங்கா ஒப்பந்தத்தில் இந்தியா தனது சொந்த உறுதிப்பாட்டை உண்மையாக கடைப்பிடிக்கிறதா என்ற கேள்வியை அது எழுப்புகிறது. 13ஐ ஒப்பந்தத்தில் கூட குறிப்பிடப்படவில்லை. இந்த ஒப்பந்தம் இந்தியாவால் நம்மீது கட்டாயப்படுத்தப்பட்ட ஒன்று.

48 மணி நேரத்திற்குள் வன்முறையை நிறுத்துவதையும் இலங்கையிலுள்ள பயங்கரவாத குழுக்களின் அனைத்து ஆயுதங்களும் அதிகாரிகளிடம் சரணடைவதை உறுதி செய்வதற்கான ஒப்பந்தத்தில் இந்தியா உறுதியளித்தது. விடுதலைப்புலிகள் சில துப்பாக்கிகளை சம்பிரதாயத்தின் அடிப்படையில் ஒப்படைத்ததால் இது ஒரு அடையாளமாக மட்டுமே செய்யப்பட்டுள்ளது என்பதை நாங்கள் அறிவோம்.

ஆனால் விரோதங்கள் நிறுத்தப்படவில்லை. உலகின் மிகப்பெரிய படைகளில் ஒன்றான இந்திய இராணுவத்தின் ஐ.பி.கே.எஃப் கூட பலத்த உயிரிழப்புகளுடன் இந்தியா திரும்ப வேண்டியிருந்தது.

சரியான அரசியல் தலைமையின் கீழ் இருந்த இலங்கை படைகளினாலேயே புலிகளை தோற்கடிக்க முடிந்தது. இந்த ஒப்பந்தத்தில் இந்தியா தனது பங்கை நிறைவேற்றவில்லை.

குறித்த ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டதா? அல்லது ஒப்பந்தத்தின் உள்ளடக்கங்கள் இலங்கையின் இறையாண்மையை சமரசம் செய்ததா? என்ற கேள்வியும் எழுகிறது.

இதேவேளை, உடன்படிக்கையின் உட்பிரிவுகளில் ஒன்றான வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை இணைப்பதை இலங்கை நீதிமன்றங்கள் இரத்து செய்துள்ளன.

அத்துடன் நமது உள்ளக விவகாரங்களில் தலையிட இந்தியாவுக்கு தார்மீக உரிமை இல்லை" என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-7)

## குணமடைந்தோர் 3296

(கொழும்பு)

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து நேற்று மேலும் 18 பேர் பூரண குணமடைந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அந்தவகையில் நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றில் இதுவரை 3,296 பேர் பூரண குணமடைந்துள்ளனர்.

அந்தவகையில் வெலிகந்த கொரோனா சிகிச்சை நிலையத்தில் இருந்து 9 பேரும் அம்பாந்தோட்டை மாவட்ட பொது வைத்தியசாலையில் இருந்து ஐந்து பேரும் தேசிய தொற்று நோயியல் நிலையத்தில் இருந்து 4 பேருமே இவ்வாறு தொற்றில் இருந்து பூரண குணமடைந்து வீடு சென்றுள்ளனர்.

அத்துடன் நாட்டில் உள்ள 12 வைத்தியசாலைகளில் சுமார் ஆயிரத்து 179 பேர் கொரோனாவிற்கு சிகிச்சைகள் பெற்று வருகின்ற நிலையில் 350 பேருக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டிருக்கக் கூடும் என வைத்திய கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர். தற்போதைய நிலவரத்தின்படி நாட்டில் கொரோனாத் தொற்று வேகமாக அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

## மாணவனுக்கு கொரோனா

(கொழும்பு)

க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்கு இம்முறை தோற்றவுள்ள மாணவன் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று சிலாபம் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆராச்சிக் கட்டுவைச் சேர்ந்த மாணவனுக்கே இவ்வாறு நோய்த் தொற்று ஏற்பட்டுள்ளது. மாணவனுக்குத் தொற்று ஏற்பட்ட வழி தொடர்பில் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மாணவன், கம்பஹாவில் தனியார் கல்வி நிலையங்களில் கல்வி கற்றதாகக் கூறப்படுகிறது. மாணவன் சிலாபம் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவரது குடும்ப உறுப்பினர்கள், அயலவர்கள் மற்றும் அவருடன் தொடர்பு கொண்டவர்கள் தனிமைப்படுத்தலில் வைக்கப்பட்டுள்ளனர். (ஐ-4)

## அடுத்த வாரமும் பூட்டு

(கொழும்பு)

ஆட்பதிவுத் திணைக்களத்தின் தலைமையகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களில் அடுத்த வாரமும் பொதுமக்களுக்கான சேவைகள் இடம்பெறாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் நாளை மறுதினம் 12ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை ஆட்பதிவுத் திணைக்களத்தின் சேவைகளை பொதுமக்கள் பெற்றுக் கொள்ள முடியாது.

ஆட்பதிவுத் திணைக்களத்தின் சேவைகள் கடந்த 3 தினங்கள் இடைநிறுத்தப்பட்ட நிலையில் அடுத்த வாரம் இடைநிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

## பத்து மாதக் குழந்தைக்கும் தொற்று உறுதி

(கொழும்பு)

கொழும்பு பொரளை றிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த 10 மாத குழந்தைக்கு கொரோனா வைரஸ் தொற்றி இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குழந்தைக்கு கொரோனா வைரஸ் தொற்றி இருப்பது நேற்று முன்தினம் உறுதிப்படுத்தப்பட்டதாக வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் ஜீ.வி. ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

மினுவாங்கொடையை சேர்ந்த குழந்தைக்கு இவ்வாறு கொரோனா தொற்றியுள்ளது. குழந்தை தற்போது ஐ.டி.எச் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

குழந்தையின் தாய் மற்றும் தந்தை ஆகியோர் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட உள்ளதாகவும் வைத்தியசாலைப்பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார். (நி-7)

## பரீட்சார்த்திகள் தரவுகளை இணையத்தில் பதிவிட வசதி

(கொழும்பு)

இந்த ஆண்டு கல்வி பொதுத் தராதர உயர்தர மற்றும் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைகளுக்கு தோற்றவுள்ள பரீட்சார்த்திகள் தங்களது தகவல்களை கல்வி அமைச்சின் இணையப் பக்கத்தில் உள்ளிடுமாறு கோரப்பட்டுள்ளது.

இதற்கமைய பரீட்சார்த்திகள் தங்களது தரவுகளை WWW.INFO.MOE.GOV.LK என்ற இணையப் பக்கத்தில் பதிவிட முடியும் எனக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.


இணையம் ஊடாக தகவல்களை வழங்க முடியாத பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு தோற்றவுள்ள மத்திய நிலையத்தில் தங்களது தகவல்களை வழங்க முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் கொவிட்-19 தொற்று பரவும் நிலையில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு அமைய இவ்வாறு தகவல்கள் சேகரிக்கப்படுவதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (நி-7)

## வெடி பொருட்கள் மீட்பு

(சாவகச்சேரி)

தென்மராட்சி-வரணி வடக்கு பகுதியில் உள்ள கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றின் கிணற்றில் இருந்து எறிகணைகள் மற்றும் வெடி குண்டுகள் நேற்று வெள்ளிக்கிழமை மாலை மீட்கப்பட்டுள்ளன. தேவாலய கிணற்றை இறைக்கும் போது குறித்த வெடிபொருட்கள் மீட்கப்பட்டன. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ-4-30)



## 52 பேர் சொந்த இடங்களுக்கு

(முறிகண்டி)

கிளிநொச்சி முழங்காவில் தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து 52 பேர் இன்று சொந்த இடங்களிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

டுபாயிலிருந்து நாடு திரும்பியிருந்த நிலையில் 14 நாட்கள் தனிமைப்படுத்தலை நிறைவு செய்த 52 பேர் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (5-4-100)

## முன்னறிவிப்பின்றி நிறுத்தப்பட்ட கொடுப்பனவு
# பொதுமக்கள் விசனம்

(குருமன்காடு)

வவுனியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் எவ்வித முன்னறிவித்தலுமின்றி நிறுத்தப்பட்ட சிறுநீரக நோயாளர்களுக்கான 1000 ரூபாய் கொடுப்பனவினால் பொதுமக்கள், அக் கொடுப்பனவைப் பெற தபாலகம் வந்து ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றனர்.

சிறுநீரக நோயாளர்களுக்கு மத்திய சமூக சேவைகள் அமைச்சினால் 5000 ரூபா கொடுப்பனவும் மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் 1000 ரூபா கொடுப்பனவும் தபால் நிலையங்கள் ஊடாக வழங்கப்பட்டு வந்தன.

இந்நிலையில் மத்திய சமூக சேவைகள் அமைச்சினால் 5000 ரூபா கொடுப்பனவு வழங்கப்படுவதினால், மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்டு வந்த 1000 ரூபா கொடுப்பனவு நிறுத்தப்பட்டுள்ளது.

எனினும், பொதுமக்களுக்கு எவ்வித முன்னறிவித்தலும் வழங்காது வவுனியா பிரதேச செயலகம் கொடுப்பனவினை நிறுத்தியமையினால், அப்பணத்தைப் பெறுவதற்கு தபால் நிலையங்களுக்கு வருகை தந்த முதியவர்கள் உள்ளிட்ட சிறுநீரக நோயாளிகள் அனைவரும் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

இதேவேளை, கொவிட் -19 நோய்த்தாக்கம் நாட்டில் அதிகரித்து வருகின்ற சமயத்தில் பொதுமக்களை அசௌகரியத்திற்கு உள்ளாக்கிய செயற்பாட்டிற்கு பாதிக்கப்பட்ட பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (நி-4-250)

## முகக்கவசம் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவும் தெல்லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கமும் இணைந்து நடத்திய கொரோனா விழிப்புணர்வு முகக்கவசம் வழங்கல் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை காலை தெல்லிப்பழை சந்தியில் இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு காங்கேசன்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி கமல் அபேசிறி கலந்து கொண்டார்.(5-4-110)

# ஆவணம் மாற்றி கார் விற்பனை; இருவருக்கு தொடர்ந்தும் விளக்கமறியல்

(கரணவாய்)

உடைமை மாற்றம் செய்யப்பட்ட காரினை விற்க முயன்றவரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி சைலவன் காயத்திரி உத்தரவிட்டார்.

கடந்த மாதம் 25 ஆம் திகதி சட்டவிரோதமான முறையில் ஆவணம் மாற்றம் செய்யப்பட்ட கார் ஒன்று நெல்லியடி பகுதியில் விற்பனை செய்யப்படுவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து அதனை விற்பனை செய்ய முற்பட்டவரும் சாரதியும் கைது செய்யப்பட்டனர்.

இருவரும் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை அவ் வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது மேற்படி நபர்கள் கொழும்பு, குருநாகல், வவுனியா ஆகிய இடங்களில் இவ்வாறு சட்டவிரோதமான முறையில் ஆவண மாற்றம் செய்து கார்களை விற்றமை தெரிய வந்துள்ளது.

எனவே அவர்களை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு பொலிஸார் கோரினர். இதனையடுத்து அவரை எதிர்வரும் 20ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (5-4-60)



புலமைப்பரிசில் பரீட்சையை முன்னிட்டு வவுனியா பாடசாலைகள் தொற்று நீக்கம் செய்யப்பட்டன. (படம்:- வசந்தரூபன்)

# பாடசாலையில் திருட்டு

(கரணவாய்)

கரணவாய் கிழக்கு வேதாரணியேஸ்வரா வித்தியாலயம் உடைக்கப்பட்டு அங்கிருந்த பொருட்கள் களவாடப்பட்டுள்ளதாக நெல்லியடி பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு மேற்படி பாடசாலை உடைக்கப்பட்டு அங்கிருந்த பல்லூடகம் மற்றும் டி.வி.டி. பிளேயர் என்பன களவாடப்பட்டுள்ளன.

மேற்படி பாடசாலையில் காவலாளி இல்லாத நிலையில் இக் களவு இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. ஏற்கனவே இரண்டு தடவை இங்கு களவு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-4-60)

## அரசாங்கத்தின் பொய்ப்பிரசாரம் 2ம் அலைக்கு வழி வகுத்துள்ளது

(கொழும்பு)

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று அச்சம் இல்லையென அரசாங்கம் பிரசாரம் செய்து வந்ததாலேயே மக்கள் அது தொடர்பாக அலட்சியமாக இருந்தனர் என எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை தனிப்பட்ட தெளிவுபடுத்தல் கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவிக்கையில், "நாட்டில் தற்போது கொரோனா வைரஸ் தொற்றின் இரண்டாம் அலைக்கு நாங்கள் அனைவரும் முகங்கொடுத்து வருகின்றோம்.

கொரோனாத் தொற்று சம்பூரணமாக கட்டுப்பாட்டுக்குள் வரவில்லை எனவும் தொடர்ந்து மக்கள் சுகாதார வழிமுறைகளைப் பேணி செயற்பட வேண்டும் எனவும் வைத்திய அதிகாரிகள் சங்கம் மற்றும் சுகாதார மேம்பாட்டுப் பணியகம் என்பன தொடர்ந்து எச்சரிக்கை விடுத்து வந்திருந்தன.

இருந்தபோதும், அரசாங்கம் தேர்தலை நடத்துவதற்காக கொரோனாத் தொற்று கட்டுப்படுத்தப்பட்டிருப்பதாக பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டு வந்தது.

அதனால்தான், மக்களும் கொரோனா தொடர்பாக அலட்சியமாகச் செயற்பட்டு வந்தனர். அதன் விளைவாகவே தற்போது நாங்கள் இரண்டாம் அலைக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றோம்" என்றார். (நி-7)

# அச்சுவேலியில் திருட்டு நெல்லியடியில் விற்பனை முறையாக மாட்டிய திருடன்

(கரணவாய்)

அச்சுவேலி பகுதியிலுள்ள வீடு ஒன்றில் இருந்த பொருட்களை களவாடி அதனை விற்பனை செய்த நபர் ஒருவர் நெல்லியடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு அச்சுவேலிப் பொலிஸில் பாரப்படுத்தப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு நெல்லியடி பொலிஸார் வீதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் நின்ற நபரை விசாரணை செய்ய முற்பட்ட போது அவர் தப்பிச் சென்ற நிலையில் அவரை பொலிஸார் பிடித்துள்ளனர்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் அச்சுவேலி பகுதியில் வீடு ஒன்றை உடைத்து அங்கிருந்த உடைமைகளைத் திருடி 6 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவுக்கு நெல்லியடிப் பகுதியில் உள்ள தளபாட விற்பனை நிலையத்தில் விற்றமை தெரிய வந்தது.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட நபர் நெல்லியடி பொலிஸாரால் அச்சுவேலி பொலிஸில் பாரப்படுத்தப்பட்டுள்ளார். பொருட்களை கொள்வனவு செய்த தளபாடக்கடை உரிமையாளரும் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். (5-4-60)

# சட்டவிரோத போதைப்பொருள் விற்பனை 4 இலட்சத்து 70 ஆயிரத்து 201 பேர் கைது

(கொழும்பு)

கடந்த 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இந்த ஆண்டு செப்டெம்பர் வரையில் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 4 இலட்சத்து 70 ஆயிரத்து 201 பேர் சட்டவிரோத போதைப்பொருள் விற்பனை மற்றும் பயன்பாடு சம்பந்தமாக கைது செய்யப்பட்டுள்ளதுடன், இந்த காலத்தில் 46 ஆயிரத்து 824.98 கிலோ கிராம் போதைப்பொருளும் ஒருகோடியே 86 இலட்சத்து ஆயிரத்து 786 போதை வில்லைகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான வினாக்கள் நேரத்தில் நாட்டின் போதைப்பொருள் பயன்பாட்டுடன் தொடர்புபட்ட கைதுகள், சுற்றி வளைப்புகள் குறித்து எதிர்க்கட்சி உறுப்பினர்களான ஹேஷா விதானகே, சமிந்த விஜயசிறி, புத்திக பத்திரண ஆகியோர் எழுப்பிய கேள்விக்கு பதில் தெரிவிக்கும் போது அமைச்சர் சமல் ராஜபக்ஷ இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் வரையில் 4 இலட்சத்து 70 ஆயிரத்து 201 பேர் சட்டவிரோத போதைப் பொருள் விற்பனை மற்றும் பயன்பாடு தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை பொலிஸ், சுங்கத் திணைக்களம், இலங்கை கடற்படை, இலங்கை விமானப் படை, இலங்கை இராணுவம், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு திணைக்களம் மூலமாக இந்த கைதுகள் இடம்பெற்றுள்ளன.

இந்த செயற்பாடுகளை தடுக்கும் விதமாக பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றது. மக்களின் ஒத்துழைப்புடன் இந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதேபோல் நாட்டின் கடல் எல்லைகள் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என தெரிவித்தார். (ஐ-4)

1 ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர் லோகநாதன் சிலோன்மணி



மண்ணில் 03 . 05 . 1954

விண்ணில் 22 . 09 . 2019

ஆண்டு ஒன்று ஆனாலும் ஆறவில்லை – அம்மா எங்கள் மனம்
ஆலமரமாய் நின்று அனைவருக்கும நிழல் கொடுத்தாய்
அந்தமரம் வேரோடு சாய்ந்ததம்மா ஆயிரம் விழுதுகள் இருந்தாலும் அடிமரம்
இல்லையம்மா ஆயிரம் உறவுகள் இருந்தாலும் உன்னொருத்தியைப் போல்
இல்லையம்மா கடல் நீர் வற்றினாலும் உன்னினைவு எம்
மனதை விட்டு போகாது– உன் நினைவுகளால் கண்ணீர் சிந்துகின்றோம்...
உன் ஆத்மா சாந்திக்காக இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

10.10.2020 இன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(C-495)

வண்ணாங்கேணி,
பளை.

கணவன், பிள்ளைகள், மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.



# பணப் பரிமாற்றங்களின் போது கொரோனா பரவ வாய்ப்பு அதிகம்

## இது தொடர்பில் பொதுமக்களுக்கு மிகுந்த அவதானம் தேவை

**(கொழும்பு) நாட்டில் 18 பொலிஸ் பிரிவுகளுக்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள போதும் நாட்டில் அனைத்து மாவட்டங்களுக்கும் கொரோனா வைரஸ் தொற்று அவதான நிலைமை காணப்படுவதாகவும் பணப்பரிவர்த்தனையின் போது கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவும் அபாயம் காணப்படுவதாகவும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.**

இதன் காரணமாக பணபரிவர்த்தனையின் போது மிகவும் கவனமாக செயற்படுமாறு பிரதிப் பொலிஸ் மா அதிபர் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை, கொரோனா தொற்று தனக்கு ஏற்பட்டுள்ளது என சந்தேகம் இருந்தால் அது தொடர்பில் அச்சம் கொள்ளாமல் உடனடியாக சுகாதார பிரிவினருக்கு அறிவிக்குமாறு கொரோனா வைரஸ் தொற்று நோய் விஞ்ஞான பிரிவின் விசேட வைத்திய நிபுணர் தெரிவித்துள்ளார். (நி-7)




31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மாணிக்கம் ஆனந்தராசா



மலர்வு 21 . 11 . 1962

உதிர்வு 10 . 09 . 2020

எங்கள் குடும்பத்தலைவன் எம்மை மீளாத் துயரத்தில் ஆழ்த்திவிட்டு பிரிந்து 31 நாட்கள் ஆகியும் உங்கள் நினைவுகள் எங்கள் எல்லோரையும்விட்டு நீங்காது. உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

10.10.2020 இன்று 7.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் அஸ்தி கரைக்கப்பட்டு பின் அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(C-496)

இலந்தைக்காடு, இமையாணன், உடுப்பிட்டி.

0768346970

தகவல்: மனைவி, பிள்ளைகள், மருமகன், பேரப்பிள்ளைகள்.

# பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட 186 பேரில் ஒருவருக்கு தொற்று உறுதி

(யாழ்ப்பாணம்)

**மன்னாரைச் சேர்ந்த ஒருவருக்கு கொவிட்-19 தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.**

இதன்படி நேற்று முன்தினம் வடமாகாணத்தைச் சேர்ந்த 186 பேருக்கு கொவிட்-19 பரிசோதனைகள் யாழ். போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்டன.

இந்தப் பரிசோதனை முடிவில் ஒருவருக்கு மாத்திரம் தொற்று உறுதி செய்யப்படுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக நேற்று மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் டி.வினோதன் தெரிவிக்கையில், வென்னப்புவ பகுதியில் இருந்து மன்னார் பட்டித் தோட்டம் பகுதியில் கட்டடப் பணிக்கு



வந்த நபர் ஒருவருக்கே கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவருடன் தொடர்புகளைப் பேணிய மேலும் 93 பேர் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் பட்டித்தோட்டம் என்ற பகுதியில் கட்டடப் பணியில் ஈடுபட்ட தொழிலாளர்களில் ஒருவர் காய்ச்சல் மற்றும் இருமல் காரணமாக கடந்த புதன்கிழமை வைத்தியசாலைக்குச் சென்றுள்ளார். குறித்த நபருக்கு பி.சி.ஆர். பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டது.

அதன் முடிவு நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு கிடைக்கப் பெற்றது. அதற்கமைவாக குறித்த நபருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த நபர் வென்னப்புவ பகுதியைச் சேர்ந்தவர். இவருடன் கட்டட நிர்மாணப் பணியில் ஈடுபட்டு தங்கி இருந்த 32 பேர்களும் இவருடன் வேலை செய்ய வந்த மேலும் 3 பேரும் உடனடியாக அந்த பகுதிகளிலேயே சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் இவர்கள் மன்னார் மாவட்டத்தில் சென்ற இடங்கள் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மன்னார் நகரப் பகுதியில் சில வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டுள்ளன.

மேலும் கம்பஹா, சிலாபம், மாரவில பகுதிகளில் இருந்து மன்னார் மாவட்டத்திற்கு வேலை நிமித்தமாக வந்து தங்கி இருக்கக் கூடிய அனைவரையும் அருகில் இருக்கின்ற பொலிஸ் நிலையங்களில் தங்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கின்றோம் எனவும் தெரிவித்தார். (5-4-18-285)

## நுணாவிலில் 'ஷெல்' மீட்பு



(சாவகச்சேரி)

சாவகச்சேரி-நுணாவில் கல்டி மூட்டு ஒழுங்கைப் பகுதியில் உள்ள காணியொன்றில் இருந்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை மோட்டார் ஷெல் ஒன்று இனங்காணப்பட்டுள்ளது.

மதில் கட்டுவதற்காக அத்திபாரம் வெட்டிய போதே குறித்த ஷெல் அவதானிக்கப்பட்டது.

இது தொடர்பாக காணி உரிமையாளரால் சாவகச்சேரி பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியதனை அடுத்து பொலிஸார் குறித்த மோட்டார் ஷெலினை மீட்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (5-4-30)

## நுளம்பு கட்டுப்பாட்டு களத்தரிசிப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் விசேட நுளம்புக்கட்டுப்பாட்டு நிகழ்வுகள் எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளன.

எனவே அனைவரும் தங்கள் சூழலை டெங்கு பரவாதவாறு சுத்தமாக வைத்திருப்பதுடன் வீடுகளுக்கு களத்தரிசிப்பிற்காக வருபவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

அந்த வகையில்,

எதிர்வரும் 14 ஆம் திகதி புதன்கிழமை ஜே/73, ஜே/75, ஜே/78 ஆகிய பிரிவுகளிலும் 15 ஆம் திகதி வியாழக்கிழமை ஜே/103, ஜே/106, ஜே/109 பிரிவுகளிலும் ,16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாநகர சபைக்குட்பட்ட கட்டட நிர்மாண வேலைப் பகுதிகளிலும் 17 ஆம் திகதி சனிக்கிழமை ஜே/100, ஜே/102, ஜே/104 ஆகிய பிரிவுகளிலும் இடம்பெறும்.

18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சிரமதான பிரசாரம் இடம்பெறும். 19 ஆம் திகதி திங்கட்கிழமை ஜே/62, ஜே/64, ஜே/66 பிரிவுகளிலும் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஜே/85, ஜே/87, ஜே/ 88 ஆகிய பிரிவுகளிலும் களத்தரிசிப்பு இடம்பெறவுள்ளது. (5-4)

## அனலைதீவுப் பகுதி முடக்கம் யாழ்.அரச அதிபர் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.அனலைதீவுப் பகுதி மறு அறிவித்தல் வரை சுகாதாரப் பிரிவினரால் முடக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார். யாழில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை அனலைதீவு பகுதியைச் சேர்ந்த மஞ்சள் கடத்தலில் ஈடுபட்ட இருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டதை அடுத்து, கைது செய்யப்பட்ட நபர்கள் அனலைதீவுப் பிரதேசத்தில் நடமாடியதாக கருதப்படுவதன் காரணமாக அனலைதீவு பிரதேசம் சுகாதாரப் பிரிவினரால் மறு அறிவித்தல் வரை முடக்கப்பட்டுள்ளது. அத்தோடு கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் காரைநகர் பிரதேசத்தில் நடமாடியதன் காரணமாக காரைநகர் பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்ட ஐந்துக்கும் மேற்பட்ட வீடுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்பொழுது கொரோனாத் தொற்று ஒருவருக்கு மாத்திரமே உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் முற்பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

யாழ்.மாவட்ட சுகாதார மேம்பாட்டுக் குழுவினுடைய தீர்மானத்தின்படி சகல பிரதேச செயலகங்களின் ஊடாக கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் ஊடாகவும் அதே நேரத்தில் மாகாண சுகாதாரப் பணிப்பாளர், சுகாதார வைத்திய அதிகாரிகள், பிராந்தியப் பணிப்பாளர்கள் ஆகியோரது அறிவுறுத்தலின்படி சில முற்பாதுகாப்பு ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தும்படி வேண்டியிருக்கின்றோம்.

தற்பொழுது யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தவரை வெளியூரில் இருந்து வருகை தந்து இங்கே தொழில் புரிகின்றவர்களை இனங்கண்டு அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை செய்வதற்குரிய நடவடிக்கைகளை சுகாதாரத் திணைக்களத்தினர் மேற்கொண்டுள்ளார்கள்.

இந்நிலையில் வடக்கு மாகாண ஆளுநர் ஒரு அறிவுறுத்தலினை வெளியிட்டுள்ளார். மாகாண சுகாதார



சேவைகள் திணைக்களத்தினர் வடக்கு மாகாணத்திற்கு மேற்கு மாகாணங்களிலிருந்து இரு வாரங்களுக்குள் வருகை தந்தோர் தொடர்பான விபரங்களைச் சேகரித்து அவர்களுக்குரிய பி.சி.ஆர். பரிசோதனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளார்.

நேற்றுக் காலையில் அனலைதீவு பகுதியில் இரண்டு நபர்கள் மஞ்சள் கடத்தலில் தொடர்புபட்ட வகையிலே கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் கட்டாய தனிமைப்படுத்தலுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்கள். அவர்கள் சென்ற இடங்கள் ஆராயப்பட்டு வருகின்றது. அதேநேரத்திலே தற்காலிகமாக தீவகத்துக்கான போக்குவரத்து இடைநிறுத்தப்பட்டுள்ளது.

புங்குடுதீவு பகுதியில் கொரோனாத் தொற்றுக்குள்ளான நபர் பயணம் செய்த பேருந்தில் பயணித்தவர்கள் தொடர்பில் விபரங்களைக் கோரியிருந்தோம். ஆனால் 15 பேர் மாத்திரமே தமது பதிவுகளை சுகாதாரப் பிரிவினரிடம் மேற்கொண்டுள்ளார்கள்.

எனவே ஏனையவர்களும் தாமாக முன் வந்து தமது விபரங்களை பதிவு செய்ய வேண்டும் எனவும் தெரிவித்தார். (5-4-33)



உலக அஞ்சல் தின நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம் பிரதம தபாலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தேசிய கொடியினை பிரதம தபாலதிபர் சஜித் பெரேரா ஏற்றி வைக்க அஞ்சல் கொடியினை பிரதி பிரதம தபாலதிபர் திருமதி.பிரபாகரன் சாந்தகுமாரி ஏற்றி வைத்தார். அத்துடன் தபால் உத்தியோகத்தர்களின் அஞ்சல் சத்தியப்பிரமாண நிகழ்வும் இடம் பெற்றது. (படங்கள்-சிவசாந்தன்)

PEOPLE'S BANK

# தங்கநகை ஏலவிற்பனை அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.03.2019 வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் - 24.10.2020 (சனிக்கிழமை), 25.10.2020 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய திகதிகளில் காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ்.ஸ்ரான்லி வீதி கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் | நகை மீளெடுப்பதற்கான இறுதி திகதி | ஏலவிற்பனை நடைபெறும் இடமும் திகதியும் |
|---|---|---|---|
| யாழ்.ஸ்ரான்லி வீதி | கொக்குவில் (நாவலர் வீதி) | 23.10.2020 | 24.10.2020 (சனிக்கிழமை) 25.10.2020 (ஞாயிற்றுக்கிழமை) யாழ்.ஸ்ரான்லி வீதி கிளை |
| | மானிப்பாய் | | |
| தெல்லிப்பளை | மல்லாகம் | | |
| | காங்கேசன்துறை | | |
| யாழ்.பிரதான வீதி | உரும்பிராய் | | |
| ஊர்காவற்றுறை | — | | |
| நெல்லியடி | — | | |
| அச்சுவேலி | புத்தூர் | | |
| சங்கானை | பண்டத்தரிப்பு | | |
| சுன்னாகம் | கோப்பாய் | | |
| | அளவெட்டி | | |
| சாவகச்சேரி | கைதடி | | |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி | | |
| யாழ்.பல்கலைக்கழகம் | திருநெல்வேலி | | |
| | கல்வியங்காடு | | |
| யாழ்.கன்னாதிட்டி | இணுவில் | | |
| பருத்தித்துறை | புலோலி | | |
| கொடிகாமம் | — | | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப்போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

(சி-491)

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி,
பிராந்திய தலைமையகம்,
இல:82, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

தொ.பே.இல.: 021222 2601/ 021222 8602
தொலை நகல்: 021 222 2602
ஈ.மெயில்: jafrho@peoplebank.lk


# கொரோனாவைத் தடுப்பதற்கு தேசிய ஔடதங்கள் தயாரிப்பு



(கொழும்பு)

தேசிய வைத்திய அமைச்சின் மூலம் பாதிக்கப்பட்ட நபர்களையும் வைரஸ் பாதிப்புக்குள்ளாகும் நபர்களையும் இலக்காகக் கொண்டு தேசிய ஔடதங்கள் பல இதுவரையில் தயாரிக்கப்பட்டுள்ளதாக சுதேச மருத்துவ இராஜாங்க அமைச்சர் சிசிரஜெயக்கொடி தெரிவித்தார்.

ஆயுர்வேத திணைக்களம் மற்றும் ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து நோய்த்தடுப்பு பானம் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருந்துக் குளிகைகள் ஆகியவற்றை அறிமுகப்படுத்தியுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இந்த மருந்துகள் அனைத்தும் நூறு சதவீதம் உள்ளூர் மூலிகைகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்படுகின்றன என்றும் அவை 'சதங்கா' பானம் மற்றும் 'சுவதரணி' நோயெதிர்ப்புபானம் என பெயரிடப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார்.

இந்த மருந்துகள் நாளை மறுதினம் 12 ஆம் திகதி முதல் அறிமுகப்படுத்த தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் மேற்கத்தேய மருத்துவத்தால் இதுவரையிலும் கொவிட் -19 வைரஸ் தொற்றை குணப்படுத்த முடியவில்லை. எனவே மேற்கத்தேய மருத்துவம் இன்று கடுமையான பின்னடைவை சந்தித்துள்ளது என்றும் இதன் போது அமைச்சர் சுட்டிக்காட்டினார். (ஜ-4)


## பெயர் மாற்றம்

மாவை கலட்டி தெல்லிப்பழையை வசிப்பிடமாகக் கொண்ட இரத்தினராசா இலகமணி ஆகிய எனது பெயரை இன்று முதல் இரத்தினராசா தில்லைமலர் என மாற்றம் செய்து இனிவரும் காலங்களில் என் சார்ந்த சகல ஆவணங்களிலும் இப்பெயரையே பயன்படுத்துவேன் என இத்தால் அறியத் தருகின்றேன்.

உண்மையுள்ள
இரத்தினராசா தில்லைமலர்

(சி-492)



# பொது அமைப்புக்களுக்கான அறிவித்தல்

தங்கள் அமைப்புக்களால்

**வலம்புரி - சங்குநாதம்**

நாளிதழுக்கு அனுப்பி வைக்கின்ற அறிக்கைகள், செய்திக் குறிப்புகள், கட்டுரைகள், புகைப்படங்கள் ஆகியவற்றை

**E-mail : Valampurii@yahoo.com**
**Viber : 076 636 3378**

என்பவற்றுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தனிப்பட்டவர்கள் ஊடாக அனுப்பி வைக்கப்படும் எந்த விடயமும் உறுதிப்படுத்தப்படாதவையாகவே கருதப்படும் என்பதால், குறித்த அமைப்புக்களின் அங்கீகரிக்கப்பட்ட தகவல் பரிமாற்றத்தினூடாக அனுப்பப்படுகின்ற விடயங்களே கவனத்தில் எடுத்துப் பிரசுரிக்கப்படும்.

நிர்வாகம் - வலம்புரி

மேலதிக தொடர்புகளுக்கு

**076 097 3128, 021 222 3378**



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 2
கி.பா: சூரி, செவ் 3 இல் உயரம்: 5'6"
தகைமை/தொழில்: பட்டதாரி, பட்டதாரி பயிலுநர்
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகமுள்ள பெண்
தொ.இ: B/11288

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 9 செவ் 5 இல் உயரம்: 5'8"
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. ஆசிரியர் (கல்வியியற் கல்லூரி)
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகமுள்ள பெண்
தொ.இ: B/11290

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: செவ் 6 இல் உயரம்: 5'7"
தகைமை/தொழில்: க.பொ.த.சா/த. பிரான்ஸில் வேலை செய்கின்றார்
எதிர்பார்ப்பு: வெளிநாட்டுப் பெண்
தொ.இ: B/11291

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: செவ் 11 இல் உயரம்: 5'6"
தகைமை/தொழில்: B.Sc, Software Engineer (Singapore)
எதிர்பார்ப்பு: பட்டதாரி, தகுந்த அரச, தனியார் உத்தியோகமுள்ள பெண்
தொ.இ: B/11292

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1973 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 1
கி.பா: 24 1/4 செவ் 3 இல் உயரம்: 5'6"
தகைமை/தொழில்: பட்டதாரி I.T Manager
எதிர்பார்ப்பு: வைத்தியர், பொறியியலாளர், விரிவுரையாளர் போன்றோர்
தொ.இ: G/739

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: அனுசம் 4
கி.பா: 69 செவ் 7 இல் உயரம்: 5'5"
தகைமை/தொழில்: பட்டதாரி Instructor
எதிர்பார்ப்பு: தகுந்த மணமகன்
தொ.இ: G/760

பிறப்பு: 1977 கிறிஸ்தவம்
நட்சத்திரம்: அத்தம் உயரம்: 5'5"
தகைமை/தொழில்: பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகத்தர்
தொ.இ: G/827

பிறப்பு: 1969 இந்து
நட்சத்திரம்: ரேவதி 4
கி.பா: 20 1/4 செவ் 6 இல் உயரம்: 5'2"
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த.
எதிர்பார்ப்பு: சொந்தத் தொழில் உள்ள மணமகன்
தொ.இ: G/875

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# புகையிரதத்தில் மோதுண்டு இறந்த நபரின் இறப்பில் சந்தேகம்

(மன்னார்)

மன்னார் சௌத்பார் புகையிரத நிலையத்திற்கு சற்று தொலைவில் நபர் ஒருவர் புகையிரதத்தில் மோதுண்ட நிலையில் மீட்கப்பட்ட சடலம் அடையாளப்படுத்தப்படாத நிலையில் மன்னார் பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டது.

இந் நிலையில் நேற்று குறித்த நபர் மன்னார் எமில் நகர் பகுதியை சேர்ந்தவர் எனக் கண்டறியப்பட்டுள்ளதுடன் குறித்த நபர் தனிமையில் வசித்த நிலையில், வீட்டில் பல்வேறு சந்தேகத்தை ஏற்படுத்தக் கூடிய தடயப் பொருட்கள் மீட்கப்பட்டன.

குறித்த நபரை வழமை போன்று காலை கடற்றொழிலுக்கு அழைப்பதற்கு சக தொழிலாளர்கள் சென்ற பொழுது வீட்டில் அவர் இல்லாத நிலையில் அவர் உறங்கும் இடத்தில் இரத்தம் சிந்திக் காணப்பட்டது.

குறித்த விடயம் மன்னார் பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து மன்னார் பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகை தந்ததுடன் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த நபர் கொலை செய்யப்பட்ட பின்னர் புகையிரதத்தின் மீது வீசப்பட்டாரா? அல்லது வீட்டில் வைத்து கொலை செய்யப்பட்டுள்ளாரா? இல்லை தற்கொலையா? என்ற பல்வேறு கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (5-4-285)

# விபத்தில் ஒருவர் காயம் 3 வாகனங்கள் சேதம்



(நெளுக்குளம்)

வவுனியா நொச்சிமோட்டை பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற விபத்தில் மூன்று வாகனங்கள் சேதமடைந்துள்ளன.

இவ் விபத்து தொடர்பாக மேலும் தெரியவருகையில், வவுனியாவில் இருந்து யாழ். நோக்கி வந்த பிக்கப் எதிர் திசையில் வந்த காருடன் மோதியதாகவும் பின்னர் பார ஊர்தியுடனும் மோதுண்டு விபத்துக்குள்ளானது எனவும் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ் விபத்தில் ஒருவர் காயமடைந்ததாகத் தெரிவித்த ஓமந்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(5-4-299)

# வெடுக்குநாறி ஆலய வழக்கு நிர்வாகத்தினர் பிணையில் விடுவிப்பு

(நெளுக்குளம்)

வெடுக்குநாறி மலை ஆலய நிர்வாகத்தினருக்கு எதிராக நெடுங்கேணி பொலிஸாரால் வவுனியா நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் நிர்வாகத்தினர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

நெடுங்கேணி வெடுக்குநாறி மலை மற்றும் அதனை அண்டிய பகுதிகள் தொல்பொருள் திணைக்களத்திற்குச் சொந்தமானது என தெரிவித்து ஆலயத்தில் பொதுமக்கள் வழிபடுவதற்கு தடை ஏற்படுத்தப்பட்டது.

பொதுமக்களின் முயற்சியால் வழிபடுவதற்கு விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டது.

எனினும் ஆலய வளாகத்தில் கட்டுமானங்களை ஏற்படுத்துவதற்கும் பூசை வழிபாடுகளை முன்னெடுப்பதற்கும் நெடுங்கேணி பொலிஸாரால் தொடர்ந்தும் தடைவிதிக்கப்பட்டு வந்தது.

குறித்த வழக்கு வவுனியா நீதிமன்றில் நேற்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட போது 50 ஆயிரம் ரூபாய் சரீரப் பிணையில் ஆலய நிர்வாகத்தினர் விடுவிக்கப்பட்டதுடன் இம்மாதம் 23 ஆம் திகதிக்கு வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (நி-4-299)




# மன்னார் ஆயர் இல்லம் முழுமையாக முடக்கம்

(மன்னார்)

மன்னார் ஆயர் இல்லம் கொரோன அச்சம் காரணமாக முழுமையாக மூடப்பட்டுள்ளது ஆயர் இல்லத்திற்கான உட்செல்லும் மற்றும் வெளிசெல்லும் அனுமதி அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில், நேற்றைய தினம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனை முடிவில் வென்னப்புவ பகுதியை சேர்ந்த மன்னார் ஆயர் இல்ல பகுதியில் கட்டட நிர்மாண வேலையில் ஈடுபட்டிருந்த நபர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் குறித்த நபர் பணியாற்றிய மற்றும் தொடர்புகளை பேணிய நபர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

குறிப்பாக கட்டட நிர்மாண பணிகளை மேற்கொண்ட ஆயர் இல்லத்தில் கொரோனாத் தொற்று காணப்படலாம் என்ற அச்சத்தில் முழுப்பகுதியும் முடக்கப்பட்டுள்ளதுடன் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதே நேரத்தில் சம்பந்தப்பட்ட நபருடன் தொடர்புபட்டவர்கள் மற்றும் கொரோனா அச்சம் எனச் சந்தேகிக்கப்படுகின்ற பலருக்கு நேற்று மேலதிக பி.சி.ஆர்.பரிசோதனைகள் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-4-285)

# 2323 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் தேவை

(கண்டாவளை)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் 2 ஆயிரத்து 322 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் தேவைப்படுவதாக பிரதேச செயலக தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள 27 கிராம அலுவலர் பிரிவுகளில் 6 ஆயிரத்து 657 குடும்பங்களைச் சேர்ந்த 20 ஆயிரத்து 700 பேர் இதுவரையில் குடியேறியுள்ளனர்.

இந்த நிலையில் கடந்த 2009ஆம் ஆண்டு இறுதியில் இருந்து மீள் குடியேறிய குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவித் திட்டங்கள். வீட்டுத் திட்டங்கள் மலசலகூடங்கள் கிணறுகளில் இலவச மின்சார இணைப்புகள் உள்ளிட்ட பல்வேறு உதவிகள் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் நிதி மூலம் வழங்கப்பட்டுள்ளன.

இருந்தபோதிலும் மீள்குடியேறிய குடும்பங்களுக்கு பல்வேறு குறைபாடுகள் காணப்படுவதாக பிரதேச செயலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த வகையிலேயே 2322 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் தேவைப்படுவதாகவும் இதே வேளை 624 குடும்பங்களுக்கு மின்சார இணைப்புகள் வழங்க வேண்டியிருப்பதாகவும் பிரதேச செயலக தகவல்கள் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.(5-4-315)



கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தினால் இளம் தொழில் முயற்சியாளர்களுக்கான மூன்று நாட்கள் பயிற்சிப்பட்டறை அண்மையில் நிறுவன மண்டபத்தில் நடைபெற்றது. (படம்:- யதுபாஸ்கரன்)

# 70 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவி



(மன்னார்)

மன்னார் சமூக, பொருளாதார மேம்பாட்டிற்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் கடந்த காலங்களில் காலநிலை மாற்றம் மற்றும் இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்த மன்னார் மாவட்ட மீனவர்களுக்கான மீன்பிடிவலைகள் மற்றும் வாழ்வாதார உதவிகள் அண்மையில் வழங்கப்பட்டன.

இவ் உதவி வழங்கும் நிகழ்வு நிறுனத் தின் தலைவர் ஜாட்சன் பிகிறாடோ தலைமையில் கடற்றொழில் மற்றும் நீரியல் வள திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இவ் ஆண்டின் ஆரம்ப பகுதியில் ஏற்பட்ட சூறாவளி கடும் மழை காரணமாக வாழ்வாதாரத்தை இழந்த மன்னார் மாவட்டத்தை சேர்ந்த பேசாலை, நடுக்குடா, பள்ளிமுனை, தாழ்வுபாடு பகுதிகளை சேர்ந்த 70 மீனவர்களுக்கான மீன்பிடி வலைகள் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த நிகழ்வில் மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை உதவிப்பனிப்பாளர் ஐ.எம்.சி. சரத் சந்திரநாயக்க, மன்னார் மாவட்ட கடற்றொழில் பரிசோதகர் எஸ்.பவாநிதி, மன்னார் நகர் கடற்றொழில் பரிசோதகர் ஏ.எம்.எம். பதீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.(5-4-285)

# இராசிபலன்

10.10.2020
புரட்டாதி 24, சனிக்கிழமை
அட்டமி பிற்பகல் 1.19 மணிவரை
புனர்பூசம் முன்னிரவு 9.24 மணிவரை
சுபநேரம் 3.02-4.32 மணிவரை
இராகுகாலம் 9.02-10.32 மணிவரை
சந்திராஷ்டமம்-மூலம்,பூராடம்
அட்டமி,நவமி

வளவன்


மேஷம்

நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு, காரிய அனுகூலமுண்டு, புதிய பொருட்களை வாங்குவதில் பிரியப்படுவீர்கள்.


ரிஷபம்

உறவினர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.


மிதுனம்

பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், உள்ளத்திலும் இல்லத்திலும் அமைதி கூடும் நாள்.


கடகம்

எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படலாம், குடும்ப காரியங்களை அனுசரித்துச் செல்வது நல்லது, வெளியூர் பயணமொன்று இடம் பெறும் வாய்ப்புண்டு, சுபசெலவுகள் கூடும்.


சிம்மம்

பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் கூடும் நாள்,பெரிய மனிதர்களின் சந்திப்பால் விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, புதிய பொருட்களின் சேர்க்கையுண்டு.


கன்னி

அன்பு நண்பர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, தூரதேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம்.


துலாம்

தொழில் வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் விலகுவர், புதிய திட்டங்கள் முன்னேற்றம் தரும், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.


விருச்சிகம்

மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், விரயங்கள் மேலோங்கும் நாள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.


தனுசு

வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம் பெற லாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.


மகரம்

செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள் நன்மைகள் நடைபெறும் நாள்,பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.


கும்பம்

வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், புதிய முயற்சிகள் கைகூடும், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், தாழ்ந்த சுபாவமுண்டு.


மீனம்

நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வார்கள், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறி ஆனந்தம் பெறுவீர்கள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

கொடிபோல தவழ்ந்து பூபோல கமழ்ந்து வாழக் கற்றுக்கொள்

# அனைத்து தொழிலாளர்களுக்கும் ஓய்வூதியம்



(கொழும்பு)

ஓய்வூதிய நடைமுறையிலான பலன்களை நாட்டில் உள்ள உழைக்கும் அனைத்து மக்களுக்கும் உரித்தாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

செமட்ட விக்ரம என்ற தலைப்பில் - அனைவருக்கும் ஓய்வூதியம் என்ற திட்டத்தை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இந்த நிகழ்வில் வெகுஜன ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல, அரச சேவை மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன், அரச சேவை, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சின் செயலாளர் ஜெ.ஜெ. ரத்னஶ்ரீ தபால்மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன, அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளர் நாயகம் நாலக கலுவெவ, ஓய்வூதிய திணைக்கள பணிப்பாளர் நாயகம் ஏ.ஜகத் டி டயஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய ஓய்வூதிய திணைக்கள மேலதிக பணிப்பாளர் நாயகம் கே.ஆர்.பத்மப்பிரிய தெரிவிக்கையில், தேசிய ஓய்வூதிய தினத்தில் அனைத்து உழைக்கும் மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி அவர்களது பிரதிநிதிகளுடன் இது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தி திருத்த சட்டமூலமாக அரசாங்கத்திடம் ஒப்படைப்பதற்காக திட்டமிடப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

தற்போதுள்ள கொவிட் - 19 நெருக்கடி நிலைக்கு மத்தியில் பிரதிநிதிகள் ஒன்றுகூடி கலந்துரையாடுவதற்கு வாய்ப்பில்லை.

இதனால் இது தொடர்பாக பொது மக்களின் கருத்துக்களை மின்னஞ்சல் மூலம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

இந்தப் புதிய திட்டத்திற்கமைவாக அரச மற்றும் தனியார் துறையில் உள்ள ஓய்வூதியம் பெறும் வயதை நீடிப்பதற்கும் தனியார் துறைக்கு ஓய்வூதிய முறையை அறிமுகப்படுத்துவதற்கும், அரச சேவை ஓய்வூதிய முறையை பாதுகாப்பதற்கும், ஓய்வூதிய முறைக்கு உட்படாத அனைவருக்கும் ஓய்வூதிய பயன்கள் கிடைப்பதை உறுதி செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான விபரங்கள் ஓய்வூதிய திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்த இணையத்தளத்தின் samatawishrama@pensions.gov.lk முகவரியூடாக கருத்துக்களையும் ஆலோசனைகளையும் முன்வைக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ)

# தேங்காய் விலை அதிகரிக்கும்



(கொழும்பு)

தற்போதுள்ள சூழ்நிலையில் இறக்குமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெய் மீதான வரி அதிகரிப்பு தொடர்பான வர்த்தமானி வெளியிடப்பட்டால் எதிர்வரும் காலங்களில் தேங்காய் ஒன்றின் விலை 200 ரூபா முதல் 250 ரூபா வரை உயரும் அபாய நிலை உருவாகும் என்று நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்புக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் ரஞ்சித் விதானகே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது பேசிய அவர், உண்மையில், இது எந்த விதத்திலும் நாட்டுக்கு நன்மை பயக்காத ஒரு விடயமாகும். ஏனெனில், இறக்குமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெய் மீதான வரி அதிகரிப்பின் முன்னணியில் மறைமுகமாக குளறுபடிகள் உள்ளன.

தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் எனக்கூறிக் கொண்டுள்ள இந்தக் கும்பல் பாம் எண்ணெயுடன் தேங்காய் எண்ணெயைக் கலந்து சந்தைப்படுத்தும் வேலையில் ஈடுபட்டு வருகின்றது.

'பொல் குருட்ட' என்ற தேங்காயின் ஒரு பகுதியைப் பயன்படுத்தி அதனுடன் எண்ணெய்த் தன்மையான பதார்த்தமொன்றைக் கலந்து பாம் எண்ணெயுடன் கலவை செய்து விற்பனை செய்வதே இந்த மோசடிக்கும்பலின் கள்ளத்தனமாம். இதனால் பாவனையாளர்களுக்கு சுத்தமான தேங்காய் எண்ணெய் கிடைக்காது போகும்.

இந்த நடவடிக்கையால் சந்தையில் தேங்காய் ஒன்றின் விலை 200 ரூபா முதல் 250 ரூபா வரை அதிகரிக்கும் அபாய நிலை உருவாகும்.

அதேவேளை, நுகர்வோருக்கு சுத்தமான தேங்காய் எண்ணெயைப் பயன்படுத்த முடியாமல் போகும் என்றும் அவர் எச்சரித்துள்ளார். (ஜ-4)

# இரு தாதியருக்கு கொரோனா

(கொழும்பு)

ஹொரணை வைத்திய சாலையில் சேவையாற்றும் இரண்டு தாதிமாருக்கு கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது கண்டறியப்பட்டுள்ளது.

இதன் காரணமாக அந்த வைத்தியசாலையின் 5 மற்றும் 9 ஆம் விடுதிகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

இந்த இரண்டு தாதியரில் ஒருவரின் கணவர் மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலையில் சேவையாற்றும் நபர் எனவும் அவருக்கும் அவரது குடும்பத்தை சேர்ந்த மற்றுமொரு நபருக்கும் கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது என ஹொரணை வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் என அடையாளம் காணப்பட்டு தாதியர் உட்பட நால்வரும் நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலை மற்றும் ஐ.டி.எச்.வைத்தியசாலை ஆகியவற்றில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# பாராளுமன்றத் தேர்தலில் வாக்கெண்ணல் எவ்வாறு நடைபெறுகிறது?

## (நீங்களும் அறிந்து கொள்ளுங்கள்)

06

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.




### இரண்டாம் கட்டம் சம்பந்தமான விளக்கம்

இரண்டாம் கட்டத்திற்கு மேசையைத்தயார் செய்தல். பெரிய பெட்டியிலிருந்து வாக்குச்சீட்டுகளை மேசைக்கு மாற்றும் முறை, முதலாவது உப கட்டத்தில் வாக்குச் சீட்டுகளை கட்சி / சுயேட்சைக் குழு ரீதியாக பிரிக்கும் முறை, அலுவலர்களின் கடமைகள், இரண்டாவது உப கட்டத்தில் வாக்குச்சீட்டுகளை திருப்பி பிரிக்கும் முறை, எண்ணுதல், சரி பார்ப்பு, மீண்டும் சரிபார்ப்பு மற்றும் சீரற்ற முறையில் மேலும் மீள் சரி பார்ப்பு, தீர்மானிக்கப்படமுடியாத வாக்குகளும் நிராகரிப்பும் வாக்குச்சீட்டுகளை 50 மற்றும் 500 ஆகக் கட்டுதல் போன்ற விடயங்கள் பற்றி தலைமை வாக்கெண்ணும் அலுவலர் வாக்கெண்ணும் மண்டபத்தில் இருப்பவர்களுக்கு விளங்கப் படுத்துவார்.

வாக்கெண்ணலின் இரண்டாம் கட்டத்தின் முதலாம் உபகட்டம். (கட்சி ரீதியாக வாக்குச் சீட்டுக்களைப் பிரித்தல்)

வாக்கெண்ணலின் இரண்டாம் கட்டத்தின் முதலாம் உபகட்டத்திற்கு வாக்கெண்ணும் அறையை ஒழுங்குபடுத்தும் முறையைப் படம் -3 காட்டுகிறது.


கட்சி ரீதியாக வாக்குச் சீட்டுகள்




படம்-3
*வாக்கெண்ணலின்*
*2ம் கட்டத்தில் 1ம் உப கட்டத்தின் ஒழுங்குமுறை*

பிரிக்கப்படும் முறையைப் படம் -4 காட்டுகிறது.

**வாக்கெண்ணலின் இரண்டாம் கட்டத்தின் முதலாம் உபகட்டம் வாக்குச் சீட்டுக்களை கட்சி ரீதியாகப் பிரித்தல் (படம்-4)**




**கேள்வி 14 :-** வாக்கெண்ணலின் இரண்டாம் கட்டத்தின் முதலாம் உப கட்டத்தில் வாக்குகள் தெரிவு செய்யப் படும் நடபடிகள் என்ன?

**பதில்:-** உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களின் மிக நெருங்கிய மேற்பார்வையின் கீழ் மொத்த வாக்கெண்ணல் பணியாட் குழுவினர்களும் வாக்குச் சீட்டுக்களைத் தெரிவதற்காக ஈடுபடுத்தப்படுவர். உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களால் வாக்குச் சீட்டுக்கள் வைக்கப்பட்டுள்ள பெரிய பெட்டியிலிருந்து வாக்குச் சீட்டுகள் அதற்குப் பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலரிடமிருந்து அடிக்கடி போதியளவில் பெறப்பட்டு வாக்கெண்ணல் மேசைக்கு மாற்றப்படும். இச் சந்தர்ப்பத்தில் தெரிவில் ஈடுபட்டுள்ள குழுவினர்களின் முன்னால் ஒவ்வொரு கட்சிக்கு / சுயேட்சைக் குழுவுக்கு உரிய தேர்தல் சின்னாங்கேளாடு கூடிய சிறு பெட்டிகளும் சந்தேகத்திற்குரிய (தீர்மானிக்க முடியாத) வாக்குச்சீட்டுக்களை இடுவதற்காக ஒரு பெட்டியும் மேசை மீது வைக்கப்படும்.

**வாக்கெண்ணலின் இரண்டாம் கட்டத்தின் முதலாம் உப கட்டம் என்னவென்றால் வாக்குச் சீட்டுக்களை கட்சி ரீதியாக தெரிவு செய்தலும் நிராகரிக்கப்படுகின்ற வாக்குச் சீட்டுக்களை வேறுபடுத்தலுமாகும்.**

உதவித்தெரிவத்தாட்சி அலுவலர்களினால் வாக்கெண்ணல் மேசை மீது வைக்கப்படுகின்ற வாக்குச் சீட்டுக்களை அடையாளமிடப்பட்டுள்ள விதத்திற்கேற்ப தெரிவு செய்து அந்தந்த கட்சிக்கு/சுயேட்சைக் குழுவிற்குரிய சிறிய பெட்டிகளிலும் வாக்குகள் அளிக்கப்பட்டு அடையாளமிடப்பட்டுள்ள விதம் சந்தேகத்திற்குரியதாயின் அல்லது எவருக்கும் வாக்களிக்கப்படவில்லையாயின் சந்தேகத்திற்குரிய வாக்குச் சீட்டுக்களின் பெட்டியினுள் இடப்படும்.

**அளிக்கப்பட்ட வாக்குகளில் அடையாளமிடப்பட்டுள்ள விதம் சந்தேகத்திற்குரியதாயின் அல்லது எவருக்கும் அடையாளமிடப்படவில்லையாயின் அவை நிராகரிக்கப்பட்ட வாக்குச் சீட்டுக்களாகக் கருதப்படும்.**

வாக்குச்சீட்டுக்களின் தெரிவு மேற்கொள்ளப்படுகையில் கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாக பணியாட் குழுவினர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்கும். அவ்வாறு தெளிவுபடுத்தப்படும் விடயங்கள் சில கீழே தரப்படுகின்றன.

- வாக்குச் சீட்டுக்களின் தெரிவின் போது (கட்சிகளுக்கு) வாக்களிக்கப்பட்டுள்ள விதம் பற்றி மாத்திரமே கருத்திற்கொள்ளப்படும். அதாவது விருப்பு வாக்குகள் அடையாளமிடப்பட்டுள்ளமை பற்றி கருத்திற்கொள்ளப்படமாட்டா.
- சரியாக தெரிவு செய்தலை உறுதிப்படுத்திக் கொள்ள வாக்குச் சீட்டுக்களிலுள்ள கட்சிகள் / சுயேட்சைக் குழுக்களின் பெயர்கள் (தேவைப்படுமிடத்து குழுக்களின் இலக்கங்கள்) மற்றும் உரிய சின்னங்கள் காணப்படுகின்ற முழுப்பகுதியும் அதாவது மேலிருந்து கீழ் நோக்கி அல்லது கீழிருந்து மேல் நோக்கி நன்றாகப் பரிசீலிக்கப்படும்.
- ஒரு கட்சிக்கு அல்லது ஒரு சுயேட்சைகுழுவிற்கு மாத்திரம் குறிப்பாக வாக்களிக்கப்பட்டுள்ளதென தெளிவாகத் தெரிகின்ற வாக்குச் சீட்டுக்களை மாத்திரம் அந்தந்தக் கட்சிக்கு / சுயேட்சை குழுவிற்குரிய சிறிய பெட்டிகளில் இடப்படும். அவ்வாறன வாக்குச்சீட்டுகள் அக்கட்சியின் அல்லது குழுவின் பெட்டியிலேயே இடப்படுகின்றனவென்பதை உறுதிப்படுத்திக் கொள்ளப்படும். இதன்போது உதவித்தெரிவத்தாட்சி அலுவலர்கள் அருகிலிருந்து மேற்பார்வை செய்வார்கள்.

இவ் உதவித்தெரிவத்தாட்சி அலுவலர்கள் வாக்கெண்ணல் பணியாட் குழுவினர்களுக்குப் பின்னால் நின்ற வண்ணம்இருப்பார்கள். இது போலவே கட்சிகளின் வாக்கெண்ணல் முகவர்களும் வாக்கெண்ணல் பணியாட் குழுவினர்களுக்குப் பின்னால் நின்று நடைபெறும் வாக்கெண்ணலை அவதானித்துக் கொண்டிருப்பார்கள்.

- வாக்குச்சீட்டில் ஒரு கட்சிக்கு அல்லது குழுவிற்கு வாக்கினை அளித்து விட்டு மேலும் வாக்குச் சீட்டின் கீழ் பகுதியிலுள்ள ஒரு கட்சிக்கு/சுயேட்சைக் குழுவுக்கு புள்ளடி அடை யாளமிடப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் இருக்குமாயின் அவ்வாக்குச் சீட்டு சந் தேகத்திற்கிடமான வாக்குச் சீட்டுப்பெட்டியில் இடப்படும் (உதாரணம்-படம் 5அ)

நிராகரிக்கப்பட்ட வாக்குச் சீட்டு படம்-5அ

| | | |
|---|---|---|
| பசுமைக்கட்சி | Π | |
| நீதிக்கட்சி | + | X |
| நேர்மைக் கட்சி | μ | |
| சுயேட்சைக்குழு -1 | Ý | |
| சுயேட்சைகுழு -2 | 8 | X |
| சுயேட்சைக்குழு -3 | Σ | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |

(தொடரும்)

# தன்னிறைவான பொருளாதாரத்தை நோக்கி பயணிப்பதே அரசாங்கத்தின் நோக்கம்

(கொழும்பு)

**நா**ட்டில் தன்னிறைவான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதே அரசாங்கத்தின் நோக்கம் என அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

பொருள் இறக்குமதி நிறுத்தப்பட்டுள்ளதனால் கொவிட்-19 நெருக்கடி நிலையிலும் அரசாங்கத்தினால் அமெரிக்க டொலரின் பெறுமதியை ஸ்திரமாக பேண முடிந்தது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றிய போது அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

மத்திய தர வியாபாரிகள் மீது கடந்த அரசாங்கம் வரி விதித்தது எனவும் பொருளாதாரத்தை வலுப்படுத்த தொடங்



கிய தருணத்தில் கொரோனா இரண்டாம் அலை ஏற்பட்டது எனவும் அவர் தெரிவித்தார்.

எவ்வாறெனினும் பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்யும் ஆற்றல் அரசாங்கத்திடம் உண்டு என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இன்னும் மூன்று ஆண்டுகளில் இலங்கையில் கிழங்கு, வெங்காயம் போன்ற பொருட்கள் இறக்குமதி செய்வது முற்றாக தடை செய்ய முடியும் என அவர் குறிப்பிட்டார்.

விதை உற்பத்தி கிராமங்களை உருவாக்கி நாட்டின் விவசாய பொருளாதாரத்தை பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் சுட்டிக்காட்டினார். (நி-7)

# சீனக்குழு இலங்கைக்கு இரு நாட்கள் விஜயம்

(கொழும்பு)

இலங்கைக்கு இரண்டு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை சீன கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த 26 பேர் கொண்ட சீன தூதுக்குழுவும் பல உயர் மட்ட அரசாங்க அதிகாரிகளும் நேற்று நாட்டை வந்தடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

உலகளாவிய கொரோனாத் தொற்றுப் பரவலுக்குப் பின் தெற்காசிய பிராந்தியத்தில் இது முதல் சீன விஜயம் என்பதால், இந்த பயணம் இலங்கைக்கு சிறந்த மறுமலர்ச்சியாக அமைவதோடு, இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும் கொரோனாத் தொற்று பரவலில் வெளிநாடுகளில் இருந்து இலங்கை வருகின்ற அனைவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு 14 நாட்கள் தன்மைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவது கட்டாயமானது.

அந்தவகையில் இலங்கை வருகின்ற சீன பிரஜைகளும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவார்களா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

வருகை தரும் சீனக் குழு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோரை சந்திக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (நி-7)


# கொரோனாத் தொற்றை சமாளிக்க 14 வைத்தியசாலைகள் தயார் நிலையில்

(கம்பஹா)

கம்பஹா கொத்தணி கொரோனாத் தொற்று பெருந்தொற்றாக மாறியுள்ள நிலையைச் சமாளிக்கும் வகையில் 14 வைத்தியசாலைகள் தயார் நிலையில் உள்ளதாக தொற்று நோய் தடுப்பு பிரிவின் பிரதானி விசேட மருத்துவர் சுதத் சமரவீர இதனைத் தெரிவித்தார்.

ஐ.டி.எச், வெலிகந்த, மினுவாங்கொட, தெல்தெனிய உள்ளிட்ட 14 வைத்தியசாலைகள் இதற்கென ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (நி-7)

# கொரோனா தொற்றும் வீதம்




# 20 ரூபாவிற்கு தரமான முகக்கவசம்

## ஒப்பந்தம் கைச்சாத்து


(கொழும்பு)

தரமான முகக்கவசங்களை 20 ரூபாவிற்கு விற்பனை செய்யும் திட்டத்தை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

இது தொடர்பாக ஒரு ஒப்பந்தம் நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டது.

ஒப்பந்தப்படி ஒரு முன்னணி தனியார் நிறுவனம் முகக்கவசங்களைத் தயாரித்து அவற்றை சதொச விற்பனை நிலையங்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் மக்களிற்குக் கிடைக்கச் செய்யும் என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவிதார்.

கடந்த காலங்களில் முகக்கவசங்கள் மாறுபட்ட விலையில் விற்கப்பட்டன. இதனால் நுகர்வோருக்கு சிரமமாக இருந்தது. இந்த நடவடிக்கையின் மூலம் முகக்கவசங்களுக்கான கறுப்பு சந்தை விலை நீக்கப்படும். சில நிறுவனங்கள் குறைந்த தரம் வாய்ந்த முகக்கவசங்களை



ரூ.45-50 இற்கு இடையில் விற்றதாகவும் தெரிவித்தார்.

இனிமேல் ரூ.20 இற்கு பாதுகாப்பான முகக்கவசங்களை மக்கள் கொள்வனவு செய்ய முடியும். அதேநேரத்தில் அரச நிறுவனங்களிற்கு ரூ.17.50 இற்கு முகக்கவசங்கள் விநியோகிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-7)

# கோட்டாபய அரசை உருவாக்கப் பாடுபட்டவர்கள் தற்போது கடும் அதிருப்தியில் - தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டு வந்தவர்கள் தற்போது கடும் அதிருப்தியில் இருப்பதாக மாகல்கந்தே சுதத்த தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போது பேசிய அவர்,

அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டு வருவதற்காக விசேடமாக பாடுபட்டவர்கள் பௌத்த பிக்குமார் உட்பட சிங்கள தேசிய அமைப்பினரே. எனினும் தற்போது இவர்கள் மிகவும் வெறுப்படைந்துள்ளனர்.

குறிப்பாக உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பந்தமாக கைது செய்யப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீன் சகோதரர், சட்டமா அதிபரின்



ஆலோசனையின்றியும் நீதிமன்ற செயற்பாடுகள் இன்றியும் பொலிஸார் விடுதலை செய்தமையானது அந்த தாக்குதலில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு செய்துள்ள பெரிய அநீதி.

அத்துடன் 20 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தில் உள்ள பாரதூரமான விடயமான இரட்டைக் குடியுரிமை தொடர்பாக கடும் விமர்சனங்கள் காணப்படுவதாகவும் ஒருவருக்கு தேவையானால் இரட்டை குடியுரிமையில் இருந்து விலகி, மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டு பாராளுமன்றத்திற்குச் செல்ல முடியும் எனவும் சுதத்த தேரர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலையின் கொரோனா கொத்தணி தொடர்பாக நிலவும் முரண்பாடுகள் குறித்து சரியான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்.

அதேபோல் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளராக இருந்த வைத்தியர் ஜயருவான் பண்டார, அந்த பதவியில் இருந்து நீக்கப்பட்டமை அதிருப்தியளிப்பதாகவும் இப்படியான தன்னிச்சையான நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் மாகல்கந்தே சுதத்த தேரர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-7)

# சுயதனிமைப்படுத்தலிலிருந்த ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

கொரோனா நோயாளியுடன் பேருந்தில் தனது புதல்வி பயணித்ததால், சந்தேகத்தின் பேரில் மொனராகலை மெதகம பிரதேசத்தில் உள்ள வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தவர் நேற்று உயிரிழந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

மொனராகலை பொல்கல்ல-வல்கொல்ல பிரதேசத்தை சேர்ந்த 70 வயதான நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக மொனராகலை வைத்தியசாலைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் இருந்து மொனராகலை வரை தனியார் பேருந்தில் பயணித்த பெண்ணொருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்றி இருப்பது கடந்த 4 ஆம் திகதி அடையாளம் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)


# பாரதம்

## 70 இலட்சத்தை நெருங்கியது இந்தியாவில் கொரோனா பாதிப்பு

**(சென்னை)**

**இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை 70 ஆயிரத்து 824 தொற்றாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர். இதனை யடுத்து பாதிக்கப்பட்டுள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 69 இலட்சத்து 3 ஆயிரத்து 884 ஆக அதிகரித்துள்ளது.**

அத்துடன் 967 பேர் உயிரிழந்துள்ள நிலையில் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 6 ஆயிரத்து 521 ஆக அதிகரித்துள்ளது.



மேலும் வைரஸ் தொற்றில் இருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 59 இலட்சத்து 3 ஆயிரமாக அதிகரித்துள்ள அதேவேளை 8 இலட்சத்து 94 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். (நி)

## தொல்லியல் துறை பட்டயப்படிப்பில் தமிழ் மொழி உள்ளடக்கம்

### மத்திய அரசு அறிவிப்பு

(டில்லி)

தொல்லியல் துறை பட்டயப்படிப்பில் செம்மொழியான தமிழ் மொழி சேர்க்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

உத்தர பிரதேச மாநிலம் கிரேட்டர் நொய்டாவில் மத்திய அரசின் தொல்லியல்துறை சார்பில் பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா தொல்லியல் கல்லூரி இயங்கி வருகிறது. அங்கு தொல்லியல் துறை சார்ந்த 2 ஆண்டு முதுகலை பட்டயப் படிப்புக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அந்த அறிவிப்பில் தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டு சமஸ்கிருதம், பாளி, அரபு ஆகிய மொழிகளில் முதுகலைப் பட்டம் பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.



இந்த அறிவிப்பு வெளியானதில் இருந்து தமிழ் மொழி ஆர்வலர்கள், தமிழக அரசியல் தலைவர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் இதற்கு கடும் கண்டனம் தெரிவித்திருந்தனர்.

இதனையடுத்து இந்த அறிவிப்பை இரத்துச் செய்யக் கோரி உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் சட்டத்தரணி அழகுமணி முறைப்பாடு பதிவு செய்திருந்தார். இந்த முறைப்பாடு அவசர வழக்காக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அத்துடன் தமிழ் மொழியின் செம்மொழி அந்தஸ்து தொன்மையான வரலாறு உள்ளிட்டவற்றை சிறப்பிக்கும் வகையில் தொல்லியல் பட்டயப் படிப்புக்கான தகுதியில் தமிழ் மொழியையும் சேர்க்குமாறு பிரதமர் மோடிக்கு முதல்வர் பழனிசாமி கோரிக்கை விடுத்து கடிதம் எழுதினார்.

இதனையடுத்து தொல்லியல் பட்டயப்படிப்புக்கான தகுதிப்பட்டியலில் செம்மொழியான தமிழ் மொழியும் சேர்க்கப்பட்டுள்ளது. மத்திய தொல்லியல் துறை பட்டயப் படிப்பில் செம்மொழியான தமிழை சேர்த்து மத்திய அரசு அறிவிப்பு வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## கொரோனா...

## சீனாவின் ஒப்புதலு...

**(ஜெனிவா)**

**கொரோனாவின் தோற்றம் குறித்த வி... எனவும் அதற்காக காத்திருப்பதாகவும் ... இயக்குநர் மைக் ரியான் தெரிவித்தார்.**

உலகையே அச்சுறுத்தி வரும் கொரோனாவின் பிறப்பிடம் சீனாவாக இருக்கும் நிலையில், அந்த வைரஸின் தோற்றம் குறித்து அங்கு சென்று விசாரணை நடத்த உலக சுகாதார அமைப்பு முடிவு செய்துள்ளது.

இந்த விசாரணைக்காக சர்வதேச நாடுகளைச் சேர்ந்த நிபுணர் குழு ஒன்றை உலக சுகாதார அமைப்பு அமைத்து உள்ளது.

## ரஷ்ய ஆயுதக் கிடங்கில் ... மக்கள் வெளியேற்றம்



(மொஸ்கோ)

ரஷ்ய ஆயுதக்கிடங்கில் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக 5 கி.மீ. சுற்றளவில் அமைந்துள்ள 14 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் உடனடியாக, முன் எச்சரிக்கை நடவடிக்கையாக வெளியேற்றப்பட்டனர்.

ரஷ்யாவின் தலைநகர் மொஸ்கோவில் இருந்து தென்கிழக்கில் ரியாசான் என்ற இடத்துக்கு அருகே இராணுவ தளத்தில் ஆயுதக்கிடங்கு செயற்பட்டு வந்தது. இங்கு ஏவுகணைகளும் பிறபீரங்கி ஆயுதங்களும் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் அந்த ஆயுதக் கிடங்கில் கடந்த புதன்கிழமை திடீரென தீப்பிடித்தது. அந்த தீ மளமளவென பரவியதால் அந்தப் ... புகை மண்டலமாக மாறியது. ...டியாக அந்தப் பகுதியில் அவ... நிலை அமுல்படுத்தப்பட்டது.

அந்த ஆயுதக்கிடங்கில் இரு... கி.மீ.சுற்றளவில் அமைந்து... கிராமங்களைச் சேர்ந்த மக்கள்... டியாக, முன் எச்சரிக்கை ந... கையாக வெளியேற்றப்பட்டனர்.

70 தீயணைப்பு படை வீ... தீயணைப்பு வாகனங்களுடன் ... பல மணிநேரம் போராடி தீயை... ப்பாட்டுக்குள் கொண்டு வந்த... மோசமான தருணம் முடிவுக்கு... ள்ளதாக பிராந்திய ஆளுநர் ... தார். இந்தத் தீவிபத்துக்கான கா... உடனடியாகத் தெரிய வரவில்லை...

## காரணத்தை எழுதி வைத்துவிட்டு திருடிய விநோத திருடன்

(சென்னை)

"குடும்பம் ஏழ்மையில் வாழ்வதால் கடையில் பொருட்களை திருடிச் செல்கிறேன்" என காரணத்தை எழுதி வைத்து விட்டு பொருட்களை திருடிச் சென்றது தொடர்பாக பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி-மதுரை ரோட்டில் கவுண்டன்பட்டியைச் சேர்ந்தவர் ராஜாங்கம். இவரது மகன் ராம்பிரகாஷ் சுப்பர் மார்க்கெட் கடை நடத்தி வருகிறார்.

நேற்று முன்தினம் இரவு இவர் கடையை மூடிவிட்டு சென்ற பின்னர் அந்தக் கடையின் மேற் கூரை பிரிக்கப்பட்டு பொருட்கள் திருட்டுப் போனது தெரியவந்தது.

இதை தொடர்ந்து பொலிஸார் திருட்டுப் போன அந்தக் கடைக்கு வந்து விசாரணை செய்தனர். அப்போது அந்த கடைக்குள் கிடந்த ஒரு துண்டு சீட்டை எடுத்து பொலிஸார் படித்துப் பார்த்தனர். அதில் பொருட்களை திருடிச் சென்ற திருடன் சீட்டில் எழுதி இருந்தான்.

நான் திருடிச்சென்று உள்ள பொருட்கள் எனது குடும்பத்திற்கு 3 மாத உணவுக்கு பயன்படும். ஆனால் இந்த பொருட்கள் உங்கள் சம்பா



த்தியத்தில் ஒரு நாள் வரவு தான். எனவே ஏழ்மையில் வாழும் நான் உங்கள் கடையில் திருடியதற்கு மன்னிக்கவும் என்று அந்தக் கடிதத்தில் எழுதியிருந்தது.

கடையில் சுமார் 70 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் திருட்டுப் போனது தெரியவந்தது. இந்த நூதன திருட்டு சம்பந்தமாக உசிலம்பட்டி பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (நி)

சா...

# வெளிநாடு

# ...வின் தோற்றம் குறித்த விசாரணை

## ...ுக்கு காத்திருக்கும் உலக சுகாதார அமைப்பு



**...சாரணையில் சீனா ஒப்புதல் அளிக்கவில்லை**
**... உலக சுகாதார அமைப்பின் திட்ட நிர்வாக**

இந்த குழுவில் இடம்பெற்றுள்ள நிபுணர்களின் பெயர்ப்பட்டியலை சீனாவிடம் உலக சுகாதார அமைப்பு அளித்துள்ளது.

எனினும் இதற்கு இன்னும் சீனா ஒப்புதல் அளிக்கவில்லை எனவும்,

அதற்காக காத்திருப்பதாகவும் அந்த அமைப்பின் சுகாதார அவசர கால திட்ட நிர்வாக இயக்குநர் மைக்ரியான் கூறியுள்ளார். (நி)

## தீ...




...பகுதியே .... உடன ...வசரகால

...ிருந்து 5 ...ுள்ள 14 ...ள் உடன ...நடவடிக் ...ார்.

...வீரர்கள், ...ன் சென்று ...யக் கட்டு ...னர். மிக ...கு வந்து ... தெரிவித் ...காரணம் ...லை. (நி)

## ரஷ்யா தடுப்பு மருந்து
## மட்டுப்படுத்தப்பட்ட பரிசோதனைக்கு அனுமதி




(டில்லி)

கொரோனாவைக் குணப்படுத்த ரஷ்யா தயாரித்துள்ள ஸ்புட்னிக் தடுப்பு மருந்தைப் பெரும் எண்ணிக்கையிலான நபர்களுக்குச் செலுத்திச் சோதிக்க இந்திய மருந்துக் கட்டுப்பாட்டுத் துறை அனுமதி மறுத்துள்ளது.

இந்தியாவில் ரஷ்யாவின் ஸ்புட்னிக் தடுப்பு மருந்தின் மூன்றாம் கட்டச் சோதனையை நடத்தவும் மருந்தை விநியோகிக்கவும் டாக்டர் ரெட்டிஸ் லேபரட்டரீஸ் நிறுவனம் உடன்பாடு செய்துள்ளது.

இதையடுத்துப் பெரும் எண்ணிக்கையிலான நபர்களுக்கு மருந்தைச் செலுத்தி மூன்றாம் கட்ட சோதனையை மேற்கொள்ள இந்திய மருந்துக் கட்டுப்பாட்டுத் துறையிடம் விண்ணப்பித்திருந்தது.


அதற்கு அனுமதி மறுத்துள்ள மருந்துக் கட்டுப்பாட்டுத் துறை, குறைந்த எண்ணிக்கையிலானோரிடம் சோதனை செய்யுமாறு அறிவுறுத்தியுள்ளது. (நி)

## இலக்கியத்துக்கான நோபல் பரிசு அமெரிக்கப் பெண்ணுக்கு

(வோஷிங்டன்)

2020 ஆம் ஆண்டின் இலக்கியத்துக்கான நோபல் பரிசு அமெரிக்க கவிஞர் லூயிஸ் க்ளுக்கிற்கு நேற்று வழங்கப்பட்டது. இலக்கிய நோபல் பரிசு பெற்ற லூயிஸ் க்ளுக் அமெரிக்க சமகால இலக்கியத்தில் மிக முக்கியமான கவிஞர்களில் ஒருவராக பாராட்டப்பட்டார்.

பிழையில்லா கவித்துவக் குரலும், அழகும் பொருந்திய கவிதைகளுக்காக லீயிஸ் க்ளுக்கிற்கு நோபல் பரிசு வழங்கப்படுவதாக நோபல் தேர்வுக் குழு தெரிவித்துள்ளது. (நி)




## பின்லாந்தில் ஒரு நாள் பிரதமராக 16 வயது சிறுமி




(ஹெல்சிங்கி)

16 வயது சிறுமியை 'ஒரு நாள்' பிரதமர் ஆக்கி, பிரதமர் நாற்காலியில் உட்கார வைத்து அழகு பார்த்து பரபரப்பை ஏற்படுத்தி உள்ளார் பின்லாந்தின் பிரதமர்.

ஐரோப்பிய நாடான பின்லாந்தில் சன்னா மரின் (வயது-34) என்ற பெண் பிரதமர் பதவி வகிக்கிறார்.

இங்கு அவர் ஆண், பெண் பாலின இடைவெளியை முடிவுக்குக் கொண்டு வரும் போராட்டத்தை கையில் எடுத்துள்ளார்.


அந்த வகையில் 16 வயது சிறுமியான ஆவா முர்டோ என்பவரை நேற்று முன்தினம் 'ஒரு நாள்' பிரதமர் ஆக்கி, பிரதமர் நாற்காலியில் உட்கார வைத்து அழகு பார்த்து பரபரப்பை ஏற்படுத்தி உள்ளார்.

ஆவா முர்டோவுக்கு சட்டம் இயற்றும் அதிகாரம் வழங்கப்படாதபோதும், அவர் அந்த ஒரு நாளில் தொழில் நுட்பத்தில் பெண்களின் உரிமைகளை முன்னிலைப்படுத்த பல்வேறு அரசியல்வாதிகளை சந்தித்தார்.

சர்வதேச பெண் குழந்தைகள் தினத்தையொட்டி, பிளான் இன்டர்நஷனல் அமைப்பு பெண் குழந்தைகளுக்கு அதிகாரம் என்ற திட்டத்தின் கீழ், உலகம் முழுவதும் ஒரு நாள் அரசியல் மற்றும் பிற துறைகளின் தலைமைப்பதவிக்கு பெண் குழந்தைகள் வருவதற்கு அனுமதித்துள்ளது.

அந்த வகையில் பின்லாந்தில் 4 ஆவது ஆண்டாக இது பின்பற்றப்பட்டுள்ளது. (நி-4)

## ...சமாதானத்துக்கான நோபல் பரிசு உலக உணவுத் திட்டத்திற்கு




(ஜெனிவா)

2020 ஆம் ஆண்டுக்கான அமைதிக்கான நோபல் பரிசு ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத் திட்டத்திற்கு (WFP) வழங்கப்பட்டுள்ளது.

உலகளாவிய பசியை எதிர்த்துப் போராடுவதற்கான முயற்சிகளுக்காக உல்க உணவுத் திட்டத்திற்கு இந்த ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது. (நி)

# சஹ்ரான் தப்பிச் செல்ல றிசாத்தின் சகோதரர் உதவினார்



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் முக்கிய சூத்திரதாரியான சஹ்ரான் ஹாசீம், பாராளுமன்ற உறுப்பினர் றிசாத் பதியுதீனின் சகோதரரின் ஆதரவோடு, படகொன்றின் ஊடாக இந்தியாவுக்கு தப்பிச் சென்றதாக உளவுத்துறைத் தெரிவித்ததாக முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் மகேஷ் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் தற்போது வசித்து வரும் ஜெனரல் சேனநாயக்க, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக இணைய காணொளி வாயிலாக ஜனாதிபதி விசாரணை ஆணையத்தில் சாட்சியம் அளித்திருந்தார்.

இதன்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். "யாழ்ப்பாணத்தில் பாதுகாப்புப் படைத் தளபதியாக பணியாற்றிய காலப்பகுதியில் சஹ்ரான் பற்றித் தெரிந்து கொண்டேன்.

சஹ்ரான் பற்றிய கூடுதல் விபரங்களைக் கண்டறியும் திறன் இராணுவ புலனாய்வுப் பிரிவுக்கு இருக்கின்றது.

ஆனால் இது குறித்து விசாரணைகளை நடத்திய நிறுவனங்கள், இராணுவப் புலனாய்வு பிரிவின் ஆதரவைப் பெறவில்லை" என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-7)

# சிற்றூர்தி-பேருந்து மோதல் 13 பேர் காயம்

(கொழும்பு)

கொக்கல்ல பகுதியில் உள்ள ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களை அழைத்துச் சென்ற சிற்றூர்தி பேருந்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளாகியது. குறித்த விபத்து நேற்றுக்காலை வேளையில் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்த 12 ஊழியர்களும் சிற்றூர்தி சாரதியும் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பில் இருந்து மாத்தறை நோக்கி பயணித்த பேருந்து, பேருந்து தரிப்பிடம் ஒன்றில் நின்ற வேளையில் பின்னால் வந்த மேற் குறிப்பிடப்பட்ட சிற்றூர்தி வேகக்கட்டுப்பாட்டை இழந்து பேருந்தின் பின்புறம் மோதியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. வாகன சாரதியின் நிலை மோசமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-7)

# அதிக தொழிலாளர்களைக் கொண்ட தொழிற்சாலைகளில் பி.சி.ஆர்.சோதனை

(கொழும்பு)

அதிகளவான தொழிலாளர்களைக் கொண்ட அனைத்துத் தொழிற்சாலைகளிலும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.

தொற்றுநோய் தடுப்பு பிரிவின் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர இதனைத் தெரிவித்துள்ளார்.

மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலையில் ஏற்பட்ட கொரோனாத் தொற்று பரவலினைத் தொடர்ந்து அதிகளவான தொழிலாளர்களைக் கொண்ட அனைத்து தொழிற்சாலைகளிலும் பி.சி.ஆர்.பரிசோதனைகளை நடத்த அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னெச்சரிக்கையாக பி.சி.ஆர்.பரிசோதனையைத் தொடர்ச்சியாக நடத்த அதிகளவான தொழிலாளர்களை கொண்ட அனைத்து தொழிற்சாலைகளுக்கும் தகவல் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி-7)

## இனி தொழுகைகளில் 50 பேர் மட்டுமே

(கொழும்பு)

பள்ளிவாசல்களில் வெள்ளிக்கிழமை தொழுகையில் கலந்து கொள்ளக்கூடியவர்களின் எண்ணிக்கையைக் குறைக்க முஸ்லிம் மத விவகார திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

அதன்படி, பள்ளிவாசல்களில் நடைபெறும் மத நடவடிக்கைகளில் 50 பேர் மட்டுமே பங்கேற்க முடியும் என்று முஸ்லிம் மத மற்றும் கலாசார திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டில் கொவிட்-19 தொற்று நோய் காரணமாக இந்த அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது.

இதேவேளை முடிந்தவரை வீட்டிலிருந்து பிரார்த்தனை செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-7)

# தாதியருக்கான நேர்முகப்பரீட்சை ஒத்திவைப்பு



(கொழும்பு)

தாதி மாணவர் பயிற்சிக்காக இணைத்துக் கொள்ளப்படவுள்ளவர்களுக்கான தகுதிகளை பரிசோதனை செய்வதற்கான நேர்முகப் பரீட்சை தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த நேர்முகப் பரீட்சை மீண்டும் அறிவிக்கும் வரையில் ஒத்தி வைக்கப்பட்டிருப்பதாக சுகாதார அமைச்சின் ஊடகப் பிரிவு நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# அடிமைகள்

அலுவலகப் பணியாளர்கள் சிலரைப் பாருங்கள்... எப்போது பார்த்தாலும் வேலை... வேலை என்று அங்கும் இங்கும் ஓடிக்கொண்டு இருப்பார்கள். பார்த்தால் அவர்கள் வாழ்க்கையையே அந்த வேலைக்கு அர்ப்பணித்த மாதிரித் தெரியும்!

உண்மையிலே அது ஒரு "போதைக் கோளாறு" என்று சொல்கிறார்கள் உளவியல் நிபுணர்கள்.

வேலை போதை – என்று அதற்கு பெயர் கொடுக்கிறார்கள்! தவறாகப் புரிந்து கொள்ளப்பட்ட போதைகளில் இதுவும் ஒன்று என்று கூறுகிறார்கள் அவர்கள்.

இப்படி ஓடி ஆடிக் கொண்டிருப்பவர்களைப் பார்த்து தவறாகப் புரிந்து கொள்கிறார்களாம்.

சேர் ரொம்ப திறமைசாலி... கடினமாக உழைக்கக் கூடிய சாமர்த்தியம் உள்ளவர் என்று நினைக்கிறார்கள்.

சேருக்கு தொழில் மேலே எவ்வளவு பக்தி... மதிப்பு... என்றெல்லாம் அதற்கு புறச்சாயம் பூசுறார்கள். ஆனால் உண்மையிலே அது ஒரு போதைக் கோளாறு. இதுதான் உளவியல் நிபுணர்களின் முடிவு. சரி இந்தக் கோளாறு உள்ளவர்கள் ஏன் இவ்வாறு வேலை வேலை என்று அலைகிறார்கள் தெரியுமா? தாங்க முடியாத குற்ற உணர்வு... இயலாமை...தாழ்வு மனப்பான்மை... பாதுகாப்பின்மை...இதையெல்லாம் மூடி மறைப்பதற்காகத்தான் அவ்வாறு நடந்து கொள்கிறார்களாம்! இதனால் என்ன நடக்குது? அதிக உழைப்பு... அதிக சாதனைகளை உருவாக்க வேண்டும் என்கிற தணியாத தாகம்... தனது தேவைகளுக்காக தன்னை வருத்திக் கொள்வது... இவையெல்லாம் அதனோடு சேர்ந்துள்ளது.

அலுவலகத்தில் வேலை பார்ப்பவர்கள் மட்டும்தான் என்று இல்லை. பல தனிப்பட்ட மனிதர்கள்... நிர்வாகிகள்... விற்பனையாளர்கள்.:. குடும்பத் தலைவிகள்... பள்ளி செல்லும் பிள்ளைகள்... இவர்கள் எல்லாம் கூட வேலை போதை அடிமைத்தனத்துக்கு ஆளாகியுள்ளனர். அதற்கான நோய் அறிகுறிகளை அவர்களிடம் பார்க்க முடிகிறதாம்.

ஆனால் ஒன்று... இப்படிப்பட்டவர்களுக்கு அலுவலகங்களில் மேலதிகாரிகளிடம் நல்ல பெயர் கிடைக்கும்... பள்ளிப் பிள்ளைகளுக்கு பாராட்டு கிடைக்கும்... பரிசு கிடைக்கும். வகுப்பில் மதிப்பெண்கள் அதிகம் கிடைக்கும். அலுவலகங்களில் சம்பள உயர்வு... பதவி உயர்வு... கிடைக்கும். அந்த வகையில் அவர்கள் சாதனையாளர்கள்தான்! ஆனாலும் மருத்துவர்கள் அவர்களைப் பார்க்கும் பார்வை வேறு. என்ன சொல்கிறார்கள் தெரியுமா அவர்களைப் பற்றி? இவர்கள்... தங்கள் மீது கொள்ளும் அக்கறை குறித்த எதிர்மன உணர்களின் பழக்க போதையர்கள் – அடிமைகள்! என்று சொல்கிறார்கள்.

பிறரைச் சார்ந்து வாழ்தல் என்று சொல்கிறோமே... அதுவும் ஒரு போதை அடிமைத்தனம் தானாம்.

ஆனால் இதற்கான அறிகுறிகள் வேறு மாதிரி இருக்கும். பிறரைச் சார்ந்து வாழ்கிற மனிதர்கள் பாதுகாப்பு உணர்வு பற்றிய இயல்புக்கு மாறான விறைப்பு நிலையில் இருப்பார்கள்.

ஆக்கிரமிப்பு மனப்பான்மைகளையும் பிறரின் வாழ்வில் ஒவ்வொரு காட்சியையும் கட்டுப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் இருக்க வேண்டியவர்களாகவும் இருக்கிறார்கள்.

பிறரைச் சார்ந்து ஒட்டி வாழ்வதிலிருந்து வெளியேறவோ பிரித்துக் கொள்ளவோ இவர்களால் முடியாது! எங்கும் எவரிடத்திலும் அதிகாரம் செலுத்த முற்படுவதை இவர்களால் கட்டுப்படுத்த முடியாது.

இதுவும் ஒரு வகை போதை அல்லது அடிமைத்தனம் என்கிறார்கள் நிபுணர்கள். வாழ்க்கையை உள்ளபடியே எதிர்கொள்ள இயலாமையின் விளைவுதான் பொதுவாக பல கோளாறுகளுக்கும் காரணம்.

ஒரு சிக்கல் குறித்து தனது இயலாமையை ஒப்புக் கொள்ளும் போது அடிமைத்தனத்திலிருந்து மீட்சி கிடைக்கும். அப்படிப்பட்ட ஒரு விடுதலை தான் இன்று பல பேருக்கு தேவைப்படுகிறது!

அலுவலகப் பணியாளர் ஒருவருக்குத் திடீரென்று உடம்பு சுகமில்லாமல் போனது..மெடிக்கல் லீவு (மருத்துவ விடுப்பு) போட்டுவிட்டு வைத்தியசாலையில் படுத்திருந்தார். அலுவலகத்தில் இருந்த சக ஊழியர்கள் எல்லோரும் சேர்ந்து சென்று அவரை வைத்தியசாலையில் பார்த்தனர். இவர்களைப் பார்த்ததும் அவர் ஓ... என்று கண்ணீர் விட்டு அழ ஆரம்பித்தார்.

"அழாதீங்க சேர்... சீக்கிரம் குணமாயிடுவீங்க!" என்று ஆறுதல் கூறினார்கள். "நான் என் உடம்பைப் பற்றி நினைத்து அழவில்லை... அலுவலகத்தில் நான் பார்த்துக் கொண்டிருந்த வேலையெல்லாம் அப்படி அப்படியே இருக்குமே...அதை நினைத்து அழுகிறேன்!" என்றார்.

இவர் இப்படிச் சொன்னவுடன் வந்தவர்கள் எல்லோரும் அழ ஆரம்பித்தார்கள்! "நீங்க ஏன் அழுகிறீர்கள்?" என்று கேட்டார் இவர்.

"அலுவலகத்தில் உங்க வேலை எதுவாக இருந்தாலும் அதையெல்லாம் செய்து முடிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆனால் இதுவரைக்கும் அலுவலகத்தில் நீங்கள் என்ன வேலை செய்து கொண்டிருந்தீர்கள் என்பது எங்கள் யாருக்குமே தெரியாது... அதனால் தான் அழுகிறோம்!" என்றார்கள்!

# சனி, ஞாயிறு ஊரடங்கு அமுலாக்கும் திட்டம் இதுவரை இல்லை

## தொற்று எண்ணிக்கையைப் பொறுத்து மாறலாம்



(கொழும்பு)
சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் நாடு முழுவதும் மக்களைத் தனிமைப்படுத்தும் வகையில் ஊரடங்கு சட்டத்தை பிறப்பிக்கும் திட்டம் தற்போதைக்கு இல்லை என பிரதி பொலிஸ்மா அதிபரும் பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில்,

அவ்வாறானதொரு எண்ணம் தற்போதைக்கு இல்லை. பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. முடிவுகளை அடிப்படையாகக்கொண்டே முடிவு எடுக்கப்படும்.

சிலவேளை மேலும் சில பொலிஸ் பிரிவுகளில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தை அமுல்படுத்த வேண்டி வந்தாலும் முழு நாட்டிலும் நடைமுறைப்படுத்தும் எண்ணம் இல்லை.

அத்துடன் கம்பஹா மாவட்டத்தில் 18 பொலிஸ் பிரிவுகளில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு தொடரும். நேற்றுக் காலை 8 மணி முதல் இரவு 8 மணிவரை சுகாதார கட்டுப்பாடுகளுடன் சில வர்த்தக நிலையங்களை திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய தேவைகளின் நிமித்தம் மாத்திரமே வெளியில் செல்லுங்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-7)

# பரீட்சை ஒன்றிணைந்த செயற்பாட்டு மத்திய நிலையம் ஸ்தாபிப்பு!

(கொழும்பு)
அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் பரீட்சைத் திணைக்களம் என்பன இணைந்து பரீட்சை ஒன்றிணைந்த செயற்பாட்டு மத்திய நிலையம் ஒன்றை ஸ்தாபித்துள்ளன.

க.பொ.த. உயர்தரம் மற்றும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை என்பவற்றுக்குத் தோற்றும் மாணவர்களுக்கான வசதிகளை ஒழுங்குபடுத்தும் நோக்கில் இந்த நிலையம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

அனர்த்த முகாமைத்துவ நிலையம், பரீட்சைகள் திணைக்களம், முப்படை மற்றும் பொலிஸார் உள்ளிட்டவர்களுக்கிடையில் தொடர்பாடலை மேம்படுத்தும் வகையில் இந்த செயற்பாட்டு மையம் இயங்கவுள்ளது.

எதிர்வரும் 11 ஆம் திகதி முதல் நவம்பர் 6 ஆம் திகதி வரை இந்த ஒருங்கிணைந்த செயற்பாட்டு மையம் செயற்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காலப்பகுதிக்குள் ஏதேனும் ஒரு விபத்து அல்லது அனர்த்தம் காரணமாக பரீட்சைக்கு தோற்ற முடியாத தடை ஏற்படும் பட்சத்தில் குறித்த நிலையத்தை அணுக முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

117 மற்றும் பரீட்சைத் திணைக்களத்தின் தொலைபேசி இலக்கம் ஆகியவற்றின் ஊடாக 24 மணிநேரமும் அழைப்பை ஏற்படுத்தி தொடர்பு கொள்ள முடியும் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

அத்துடன், அனர்த்தம் ஒன்றின் போது முகம்கொடுக்க தேவையான வழிகாட்டல்களை இந்த மத்திய நிலையம் வெளியிட்டுள்ளது. (நி-7)

# சமுத்திர பல்கலையின் வளத்தை விரிவாக்க பிரதமர் அறிவுறுத்தல்



(கொழும்பு)
இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தில் மீனவ, சமுத்திர மற்றும் கடற்படை பொறியியல் துறைகளில் தொழில்சார் மற்றும் கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அறிவுறுத்தியுள்ளார்.

சமுத்திர பல்கலைக்கழகத்தின் பௌதீக மற்றும் மனித வள மேம்பாடு தொடர்பாக அலரி மாளிகையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற சந்திப்பொன்றின்போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இலங்கை சமுத்திர பல்கலைக்கழகம், அம்பாந்தோட்டை மாவட்டத்தின் கலமெடியான பிரதேசத்தில் நிறுவி, அபிவிருத்தி செய்வதற்கு அறிவுறுத்திய பிரதமர், அதன் தொழில்நுட்ப பீடத்தை தற்போது இயங்கி வரும் மட்டக்குளிய பிரதேசத்தில் அப்பிரதேசத்தை மையமாகக் கொண்டு அபிவிருத்தி செய்யுமாறும் பிரதமர் அறிவுறுத்தினார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ வின் எண்ணக்கருவிற்கு அமையவே இலங்கை சமுத்திர பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது. அவரினால் ஆரம்பிக்கப்பட்ட தேசிய மீனவ மற்றும் கடற்படை பொறியியல் நிறுவனம் 2014 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க சட்டத்திற்கமைய உத்தியோகபூர்வ பல்கலைக்கழகமாக அறிவிக்கப்பட்டது.

வரையறுக்கப்பட்ட இட வசதிகளின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வரும் பட்டப்படிப்பு மற்றும் தொழிற்கல்வி கற்கை நெறிகள் தொடர்பில் அவதானம் செலுத்திய பிரதமர், அந்த சிரமங்களை குறைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு இதன்போது அறிவுறுத்தினார்.

அரசாங்கத்தின் புதிய நோக்கின் கீழ் மீனவ, சமுத்திர விவகார, கடற்படை பொறியியல் மற்றும் கடற்படை அறிவியல் துறைசார் நிபுணர்கள் மற்றும் தொழில் வல்லுநர்கள், உள்ளூர் மற்றும் சர்வதேச சந்தைக்கான விநியோகத்தை இலக்காகக் கொண்டு செயற்பட வேண்டும் எனவும் பிரதமர் இதன்போது குறிப்பிட்டார். (நி-7)

# கம்பஹாவில் சுகாதார கட்டுப்பாடுகளுடன் சில வர்த்தக நிலையங்களை திறக்க அனுமதி

(கம்பஹா)
கம்பஹாவில் நேற்று வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் இரவு 8 மணிவரை சுகாதாரக் கட்டுப்பாடுகளுடன் சில வர்த்தக நிலையங்களை திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண இதுகுறித்த தகவலினை வெளியிட்டுள்ளார். அத்தியாவசிய தேவைகளின் நிமித்தம் மாத்திரமே வெளியில் செல்லுமாறும் பொது மக்களிடம் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

கம்பஹா மாவட்டங்களில் ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள இடங்களில் மருந்தகங்கள், சுப்பர் மார்க்கெட்கள், மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தின் மீன் விற்பனை நிலையங்கள், சதொச விற்பனை நிலையங்கள் என்பன காலை 8 மணி முதல் இரவு 8 மணிவரை திறந்திருக்குமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-7)

# பாராளுமன்ற அமர்வுகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கு தீர்மானம்

(கொழும்பு)
பாராளுமன்ற அமர்வுகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கூடிய பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 20 ஆம் திகதி ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழான 3 ஒழுங்கு விதிகளை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அன்றையதினம் பிற்பகல் 4.30 முதல் 5.30 மணிவரை ஆளும் கட்சியினால் முன்வைக்கப்படும் சபை ஒத்திவைப்புப் பிரேரணை மீதான விவாதம் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

அன்றையதினம் பிற்பகல் 4.30 மணி முதல் 5.30 வரை எதிர்க்கட்சியினால் முன்வைக்கப்படும் சபை ஒத்திவைப்புப் பிரேரணை விவாதம் நடைபெறவுள்ளது.

அத்துடன், எதிர்வரும் 22 ஆம் திகதி முற்பகல் 10 மணி முதல் 4.30 மணிவரை ஆளும் கட்சியினால் முன்வைக்கப்படும் தற்போதைய சுகாதார நிலைமைகள் பற்றி சபை ஒத்திவைப்புப் பிரேரணை மீதான விவாதம் நடைபெறவுள்ளது.

மேலும், 20 ஆவது திருத்தம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்மானம் சபாநாயகர் ஊடாக சபைக்கு அறிவிக்கப்பட்டால் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவை மீண்டும் கூட்டி 20 ஆவது திருத்தத்தை விவாதிக்கும் வகையில் தற்பொழுது தீர்மானிக்கப்பட்டுள்ள விடயங்களில் மாற்றம் செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (நி-7)

# 7 மணி நேரம் சாட்சியமளித்த பிள்ளையான்

(கொழும்பு)
உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினர் பிள்ளையான் என்றழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன நேற்று முன்தினம் சாட்சியமளித்தார்.



நேற்று முன்தினம் முற்பகல் 10.30 அளவில் ஆணைக்குழு முன்பாக சாட்சியமளிக்கத் தொடங்கிய அவர் சுமார் 7 மணிநேரத்திற்குப் பின்னர் வெளியே வந்தார்.

தனது சாட்சியமளிப்பு தொடர்பான விடயங்களை ஊடகங்களில் பகிரங்கப்படுத்த வேண்டாம் எனவும் அவர் நீதிபதிகள் குழாத்திடம் கோரியிருந்தார்.

பின்னர் அவர் சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். (நி-7)

# பட்டதாரி பயிலுநர் பயிற்சி தற்காலிகமாக நிறுத்தம்

(கொழும்பு)
பட்டதாரி பயிலுநர் பயிற்சியின் இரண்டாம் கட்டம் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 12 ஆம் திகதி ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததாகவும் தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு பயிற்சியின் ஆரம்பத்தை பிற்போடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பயிற்சி ஆரம்பமாகும் புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (நி-7)

# கடல் புறா

## ஸ்ரீவிஜய சாம்ராச்சியம்

காலத்தின் பதிவு 15



சாண்டில்யன்

காட்டுமிராண்டிகளே ஆதியில் நிரம்பிக் கிடந்த சொர்ணபூமி, பௌத்த, சைவ, வைணவத் துறவிகளின் வருகையால் நாகரிகத்தையும் பல நாடுகளும் கண்டு வியக்கும் தன்மையையும் அடைந்தது. அப்படி ஏற்பட்ட நாகரிகத்தின் விளைவாகத்தான் மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னால் ஸ்ரீவிஜய சாம்ராச்சியம் சொர்ணத்தீவில் எழுந்தது"

இந்த இடத்தில் கதையைச் சற்றே நிறுத்திய குணவர்மன்? "இனி மிக்க கவனமாகக் கேளுங்கள் இளைபல்லவரே!" என்று எச்சரித்துக் கொண்டும் அறையில் அங்குமிங்கும் கனவில் நடப்பவன் போல் உலாவிக் கொண்டும் கதையைச் சொல்லிக் கொண்டு போனான்.

"சுமார் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னால் சாவகத் தீவின் மத்தியிலிருந்த சிற்றரசில் ஸஞ்சயன் என்ற அரசன் தோன்றினான். அவன் சைவ சமயத்தவன். அவன் ஆட்சியில் அந்த சிற்றரசு பேரரசாக விரிந்தது. ஸஞ்சயன் பெரும்படை திரட்டி பொன் பெரிதும் விளையும் சொர்ணத்தீவைத் தன்வசப்படுத்திக் கொண்டான். அதற்கு ஸ்ரீவிஜயம் என்ற பெயரையும் சூட்டினான்.

அவன் காலத்திலும் அவனுக்குப் பின் வந்த ஆறு மன்னர்களின் காலத்திலும் ஸ்ரீவிஜயம் சொர்ணத்தீவையும் சாவகத்தையும் இன்னும் பல தீவுகளையும் கொண்ட பெரும் சாம்ராச்சியமாக விரிந்தது. அதில் சைவம் பெரிதும் தழைத்தது.

ஸஞ்சயன் ஸ்தாபித்த ஸ்ரீவிஜய சாம்ராச்சியம் மதத்தை அதிகமாக வற்புறுத்தாது இருந்திருக்குமானால் அந்தச் சாம்ராச்சியம் இன்னும் நிலைத்திருக்கும். ஆனால் ஸஞ்சய வம்சத்தின் ஆட்சி சைவ ஆட்சியாக இருந்தது. ஆகவே மஹாயன பௌத்தம் கிளைத்த சாவகத்தில் அதற்கு எதிர்ப்பு ஏற்பட்டது.

அந்த எதிர்த்த ஒரு சிறு அரச பரம்பரைதான் சைலேந்திர அரச பரம்பரை. இந்தப் பரம்பரையின் ஆதிகர்த்தாவான பானுவர்மனும் ஸஞ்சயன் உதித்த அதே சாவகத்தின் நடுவிடத்தில் தோன்றினான். சைலேந்திரர்கள் வம்சம் முதல் மூன்று தலைமுறைகளிலேயே பெரிதும் வலுவுற்றது.

ஆறாவது தலைமுறையில் ஸ்ரீவிஜய மன்னன் பிகாதனுக்கும் சைலேந்திர ராஜகுமாரி பிரமோதவர்த்தினிக்கும் திருமணம் நடந்தது. அந்தத் திருமணத்துடன் ஸஞ்சயன் பரம்பரை ஆட்சியும் முடிந்தது. பிகாதனுக்குப் பிறகு அவன் மைத்துனனும் சைலேந்திரர்கள். காலத்தில் ஸ்ரீவிஜயம் கிழக்குத் தீவுகளையெல்லாம் கொண்ட பெரும் சாம்ராச்சியமாகிச் சீரும் சிறப்பும் பெற்றது. பாலபுத்திரனுக்குப் பிறகு மூன்று தலைமுறைகளில் அதன் புகழ் உலகெங்கும் பரவியது.

பட்டு நெய்யும் சீனாவுக்கும் முத்துக் குளிக்கும் தமிழகத்துக்கும் இடையே இருந்ததன் விளைவாக அதன் வாணிபமும் வாணிபத்தைக் கட்டுப்படுத்துவதில் அதற்கு இருந்த சக்தியும் பெரிதும் வளர்ந்தது. இந்தக் காலத்தில் தான் சூளாமணிவர்மனும் அவனுக்குப் பிறகு ஸ்ரீமார விஜயதுங்கவர்மனும் ஸ்ரீவிஜய சாம்ராச்சியப் பேரரசர்களாய் விளங்கினார்கள்.

பின்னவர் காலத்தில்தான் சோழர்களுக்கும் ஸ்ரீவிஜயத்துக்கும் நட்பு வலுப்பட்டு நாகப்பட்டிணத்தில் புத்த விஹாரமான சூளாமணி விஹாரத்தைக் கட்ட ராஜேந்திரசோழ தேவர் ஸ்ரீ விஜயப் பேரரசருக்கு நில தானம் கொடுத்தார். இந்த நட்பு நீண்டிருந்தால் தமிழகத்திற்கும் ஸ்ரீவிஜயத்திற்கும் போர் நிகழ்ந்திராது. ஆனால் வர்த்தகப் போட்டி போரில் வந்து முடிந்தது"

இந்தச் சமயத்தில் குறுக்கே புகுந்து ஒரு கேள்வியைக் கேட்டான். இளைய பல்லவன், "வர்த்தகப் போட்டியா?" என்று.

"ஆமாம்" என்பதைச் சுட்டிக்காட்டும் பாவனையில் தலையை அசைத்த குணவர்மன் மேலும் சொன்னான். "ஆமாம் இளைய பல்லவரே! ஸ்ரீமார விஜயதுங்கவர்மனுக்குப் பிறகு அரச பதவிக்கு வந்த ஸங்க்ரம விஜயதுங்க வர்மன் பாரதத்திலிருந்து வரும் பொருள்களுக்குப் பலமான சுங்க வரிகளை விதித்தார்.

இதனால் வெகுண்ட ராஜேந்திர சோழ தேவர் ஸ்ரீவிஜயத்தை நோக்கித் தமது கடற்படையை ஏவினார். எந்தக் கடலைத் தாண்டிப் பெருவாரியான தமிழர் படை வர முடியாதென்ற தைரியத்தால் ஸங்க்ரம விஜயதுங்கர் சுங்க வரிகளை விதித்தாரோ அந்தக் கடலைத் தாண்டித் தமிழர் பெரும் படை வந்தது.

கடாரத்தையும் ஸ்ரீவிஜயத்தையும் சூறையாடியது. ஸங்க்ரம விஜயதுங்கவர்மனையும் சிறைபிடித்துச் சென்றது. பிறகு ராஜேந்திர சோழ தேவரின் கருணையால் ஸங்க்ரம விஜய துங்கவர்மன் விடுதலையடைந்தார். அவர் காலமுதல் ஸ்ரீவிஜயம் வலிமை குன்றியது.

என் தந்தையின் காலத்தில் அரியணைப் போட்டிச் சண்டையும் கிளம்பியது. என் சகோதரன் அரசைப் பறித்துக்கொள்ள விரும்பினான். அதன் விளைவாக என்னைச் சொர்ணத்தீவிலிருந்து கடாரத்துக்கு அனுப்பி அங்கு என்னை இளவரசனாக்கினார் என் தந்தை. எனக்கு அதில் இஷ்டமில்லை"

"ஏன்?" என்று குறுக்கிட்டான் இளைய பல்லவன். "சிறு வயதிலேயே நான் பௌத்தமதகுரு ஒருவரிடம் பாடம் பயின்றேன். அவருடைய சீடர்களிடம் பழகினேன். இருபது வயதுவரை பௌத்த விஹாரங்களிலும் பௌத்தத் துறவிகளுடனும் காலம் கழித்தேன். ஆகவே இக வாழ்க்கையில் மனம் செல்லவில்லை. புத்தத் துறவியாவதிலேயே மனம் சென்றது.

இதைக் கவனித்த என் தந்தை எனக்குப் பலவந்தமாகத் திருமணம் செய்வித்தார். அதன் பலன்தான் இவள்" என்று காஞ்சனாதேவியைக் காட்டினான் குணவர்மன்.

இளையபல்லவன் காஞ்சனாதேவியை நோக்கிப் புன்முறுவல் செய்தான். "கட்டாய விவாகத்தின் கனி காதல் விவாகத்தில் கிடைக்கும் கனிக்கு எந்த விதத்திலும் குறைந்ததல்ல" என்று எண்ணினான்.

குணவர்மன் மேலும் சொன்னான், "இவளுக்கு வயது வருமுன்பே இவள் தாய் இறந்துவிட்டாள். மீண்டும் என் மனம் துறவற வாழ்வை நாடியது. இகவாழ்வை வெறுத்தது. ஆனால் நாளுக்கு நாள் ஏற்பட்ட மாறுதல்கள் என் மனத்தை மாற்றவே செய்தன. ஜெயவர்மன் ஆட்சி ஸ்ரீவிஜயத்துக்குப் பெரும் சாபக்கேடாக முடிந்தது.

மக்கள் துன்புறுத்தப்பட்டார்கள். சாதாரணக் குற்றங்களுக்குப் பெரும் தண்டனைகள் விதிக்கப்பட்டன. ஜெயவர்மனுக்குப் புத்தி சொல்ல முற்பட்ட அமைச்சர்களின் தலைகள் துண்டிக்கப்பட்டன. ஸ்ரீவிஜய சாம்ராச்சியம் மெள்ள மெள்ளச் சீரழியத் தொடங்கியது. அக்கம் பக்கத்து அரசாங்கங்களின் விரோதமும் வந்து சம்பவித்தது.

இப்படியே போனால் மக்கள் தவிப்பார்கள். நாடு அழிந்துவிடும் என்ற முடிவுக்கு வந்தேன். ஆகவே கடாரத்தைத் தன்வசம் ஒப்புவிக்கும்படி ஜெயவர்மன் அனுப்பிய ஓலையைத் திருப்பியனுப்பினேன். முடிந்தால் ஜெயவர்மன் கடாரத்தை அழித்திருப்பான். ஆனால் மக்களின் பெருவாரியான ஆதரவு எனக்கிருப்பதைக் கண்டு அஞ்சியிருக்கிறான்.

அவன் அச்சம் குலையும் முன்பு சோழர் உதவியை நாடி சைலேந்திரர் ஆட்சியை மீண்டும் நிலை நிறுத்தவும் என் நாட்டு மக்களின் துன்பத்தைப் போக்கவும் இந்நாடு வந்திருக்கிறேன். துறவு மனப்பான்மை இருந்தும் அரசுக்காக அயல் நாடு வந்து உதவி நாடும் விபரீத நிலை எனக்கு ஏற்பட்டிருக்கிறது.

(தொடரும்)

# அஞ்சல் சேவையால் ஆற்றப்படும் சேவை அளப்பரியதாகும்

## அஞ்சல் தின வாழ்த்துச் செய்தியில் பிரதமர்

(கொழும்பு)

தொழில்நுட்ப மற்றும் நிதி வரையறைகள் இன்றி மிகவும் நெருங்கிய மற்றும்மலிவு விலையில் தகவல் தொடர்பு சேவைகளை வழங்கும்அஞ்சல்சேவை குறித்து இன்னும் பெரும்பான்மையான மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். இலங்கை அஞ்சல் சேவையால் மக்களுக்கு ஆற்றப்படும் சேவை அளப்பரியதாகும் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று உலக அஞ்சல் தின வாழ்த்துச் செய்தியில் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 1874ஆம் ஆண்டு ஒக்டோபர் 09ஆம் திகதி வரலாற்று சிறப்புமிக்க பேர்ன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் ஊடாக ஆரம்பிக்கப்பட்ட ஜெனரல் போஸ்டல் யூனியன் **(General Postal Union)** அமைப்பு, 1878இல் அனைத்துலக அஞ்சல் ஒன்றியமாக **(Universal Postal Union-UPU)** மாற்றப்பட்டது.

சர்வதேச மாநாட்டில் 1874 ஆம் ஆண்டு தபால் ஒன்றியம் நிறுவப்பட்டதுடன், அதற்கான உரிய திகதியொன்று இல்லாமை வெளிப்படையானது. அதனால் பேர்ன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட ஒக்டோபர் 09ஆம் திகதியை அனைத்துலக அஞ்சல் தினமாக பிரகடனப்படுத்துவதற்கு, 1969ஆம் ஆண்டு டோக்கியோவில் இடம்பெற்ற சர்வதேச மாநாட்டின் போது தீர்மானிக்கப்பட்டது. 1984ஆம் ஆண்டு ஹெம்பேர்க் மாநாட்டில் அனைத்துலக அஞ்சல் தினம், உலக அஞ்சல் தினமாக **(World Post Day)** பிரகடனப்படுத்தப்பட்டது.

1798இல் ஒல்லாந்தர்கள் தமது ஆட்சிக் காலத்தில் கடலோர பகுதிகளில் முதலாவது அஞ்சல் அலுவலகம் அமைத்தல் மற்றும் 1799இல் முதன் முறையாக அஞ்சல் விதி முறைகளை வெளியிடுதலுடன் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை அஞ்சல் சேவைக்கு இரண்டு நூற்றாண்டுகளுக்கும் மேலான நீண்ட வரலாறு காணப்படுகிறது.

ஆண்டுகள் தோறும் விரிவாக்கப்படும் அஞ்சல் சேவையினூடாக உலகின் பல்வேறு பிரதேசங்களில் வசிக்கும் மக்களிடையே தொடர்பாடல் மாத்திரமின்றி பொருள் கொடுக்கல்-வாங்கல்களும் இடம்பெறுகின்றன. பல்வேறு நிறுவனங்களுடன் இணைந்து மக்களுக்கான சேவையை அஞ்சல் மூலம் வழங்குவதுடன், நவீன தொழில்நுட்பத்தினூடாக மிகவும் பயனுள்ள பல சேவைகளை மக்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளமை காலத்திற்கு உகந்ததாகும்.

இணைய வர்த்தகம் **(e-commerce), B- Post** ஆகிய முறைகளின் ஊடாக வெளிநாடுகளிலிருந்து பொருட்களை பாதுகாப்பாக இந்நாட்டிற்கு கொண்டு வருதல், சிறு மற்றும் நடுத்தர வர்க்க வர்த்தகர்களின் உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல் ஆகியவற்றின் மூலம் உள்நாட்டு தொழில் முனைவோருக்கு ஆற்றும் சேவை விசாலமானதாகும்.

இத்தகைய சூழலில் இலங்கை அஞ்சல், உலகளாவிய போக்குகள் மற்றும் மக்களின் தேவைகளை மிகவும் திருப்திகரமான முறையில் மேம்படுத் துவதற்கும், நவீனத்துவத்திற்கு ஏற்ப பல்வகைப்படுத்தப்படுவதற்கும் இந்த உலக அஞ்சல் தினத்தில் பிரார்த்திக்கிறேன் என தெரிவித்துள்ளார். (ஜ-4)

## நாட்டில் தீவிரமாகும் கொரோனா

### 3 ஆடைத் தொழிற்சாலைகள் மூடல்

(கொழும்பு)

ஊழியர்களிற்கு கொரோனா தொற்று பரவியிலிருக்கலாமென்ற சந்தேகத்தில் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்திலுள்ள மூன்று ஆடைத்தொழிற்சாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. அதன் ஊழியர்கள் தமது விடுதிகளில் தங்கியிருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. கொரோனா நோய்த் தொற்றுகள் உள்ளதா? என்ற சந்தேகத்தின் பேரில் நிர்வாகத்தால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக ஆடைத் தொழிற்சாலைகளின் நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (ஜ-4)

### கண்காட்சிக்கு சென்றவருக்கு கொரோனா

(கொழும்பு)

கொழும்பு சர்வதேச புத்தகக் கண்காட்சியை பார்வையிடச் சென்றிருந்த ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அடையாளம் காணப்பட்ட தொற்று நோயாளி சிலாபத்தில் வசிக்கும் 36 வயதுடையவராவார். இவர் செப்டெம்பர் 23 ஆம் திகதியன்று புத்தக கண்காட்சியை பார்வையிட்டுள்ளதாக கொரோனா தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது. அத்துடன், அதே நாளில் கொழும்பு - கோட்டை பஸ் டிப்போவுக்கும் அவர் பயணம் செய்ததாகவும் தெரிவித்துள்ளது. (ஜ-4)

### பல்கலை. ஊழியர்கள் இருவருக்கு கொரோனா

(கொழும்பு)

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக பணியாளர்கள் இருவர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளமை நேற்று வெள்ளிக்கிழமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனையடுத்து பல்கலைக்கழகத்துக்கு ஏற்படக்கூடிய ஆபத்து குறித்து சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு மதிப்பீடு செய்துள்ளது. உறுதிப்படுத்தப்பட்ட தொற்று நோயாளிகளுடன் நெருங்கிப் பழகிய 27 பணியாளர்கள் அடையாளம் காணப்பட்டுத் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (ஜ-4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2138

### தீபனா

உன்னோடு தான் என் வாழ்க்கை என்றால்
மரணம் இல்லா வாழ்க்கை வேண்டும்!!!
நீ இல்லாத வாழ்க்கையை ஒரு நொடி
கூட வாழ மறுக்கிறது... என் இதயம்!!!



### சந்தியா



ஏமாந்து போறதுக்கு முட்டாளா இருக்கனும்
என்று இல்லை அன்புக்கு ஏங்குறவங்களா
இருந்தாலே போதும்...

### வில்மன்

இந்த உலகத்துல இருக்கிற மிருகங்களை
விட ஆபத்தானது மனிதன் தான்...
யாரு எப்போ எப்படி மாறுவாங்கன்னு
யாருக்குமே தெரியாது...



### சுரேகா

உங்கள் வாழ்க்கை துணைக்கு அழகான உடலைத்
தேடாதீர்கள்... அறிவுள்ள மனதை தேடுங்கள்...
எதிர்காலத்தில் அழகைவிட, அறிவுதான்
உங்களுக்கு கைகொடுக்கும்..!!



### தர்ஷன்

ஆயிரம் நினைவுகளும் அழகான கனவுகளும்
வந்தாலும்... என் மனதிற்குள் நீ வந்த
அந்த ஒரு நிமிடத்திற்கு ஈடாகாது...



### ராகுலன்

வாழ்க்கையில் கிளியாக இருக்காதீர்கள்
கழுகாக இருங்கள்...
கிளி அதிகமாக பேசும்
ஆனால் அதனால் உயரத்திற்கு
பறக்க முடியாது...
ஆனால் கழுகு அமைதியானது...
அதோடு வானத்தை தொடும் அளவிற்கு
அதற்கு சக்தி உண்டு....

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# பெருந்தொற்றுக்கால மன ஆரோக்கியம்

உளநல தினம் ஐப்பசி மாதம் 10 ஆம் திகதி உலகளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்படுகின்றது. இந்த வருடத் தொனிப்பொருளாக "அனைவருக்கும் உள நலம்" என அமைகின்றது. இத் தொனிப்பொருள் இன்றைய கொவிட்-19 காலத்தில் அதன் முக்கியத்துவம் கருதி உள ஆரோக்கியத்தில் முதலீடு செய்வதை குறிக்கின்றது.

ஒரு நாட்டினதும் தனி மனிதனதும் ஆரோக்கியத்திற்கும் வளர்ச்சிக்கும் உளநலம் என்பது மிக முக்கியமான பங்கினை வகிக்கின்றது. உள ஆரோக்கியம் அல்லது மன நலம் என்னும் சொல்லை விட மனச் சுகம் என்னும் சொல் மிகவும் பொருத்தமாயிருக்கும்.

மனச்சுகம் என்னும் போது பொதுவாக எங்களுடைய சமூகத்தில் சாதாரண உரையாடலின் போது எப்படி இருக்கின்றார்? சுகமாக இருக்கின்றாயா? சுகம் எப்படி? என்கின்ற சொல்லாடல்களை நாம் நித்தமும் காண்கின்றோம். சுகம் என்ற சொல் மிக ஆழமானதும் பல பரிமாணங்களைக் கொண்டதாகவும் அமைந்துள்ளது. சுகம் என்ற சொல் ஒற்றைப் பரிமாணத்தில் உடல் நலத்தினை குறித்து நிற்கின்ற போதிலும் அதன் உண்மையான பொருள் உளநலம், குடும்ப நலம், சமூகநலம்என்ற பல் பரிமாண தளத்தில் விரிகின்றது.

இன்றைய பெருந் தொற்று காலப் பகுதியில் மனச் சுகத்தின் முக்கியத்துவத்தை உலகம் முழுவதும் உணரத் தலைப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. மனச்சுகம் என்பது நுண்ணுயிர்களின் தாக்கத்திலிருந்து பாதுகாத்து கொள்வதில் பெரும் பங்காற்றுகின்றமை மீள நிரூபிக்கப்பட்டுள்ளதுடன் பெருந் தொற்று காலத்தின் விளைவாக ஏற்படுகின்ற சமூக பொருளாதார பாதிப்பினை எதிர்கொள்வதிலும் பெரும் பங்காற்றுகின்றது.

மனச்சுகம் என்பது உடற் சுகத்தில் பெருமளவு தாக்கத்தினை ஏற்படுத்துகின்றமை பல காலமாக அவதானிக்கப்பட்ட ஒன்றாகும். இன்றைய காலகட்டத்தில் அதன் முக்கியத்துவம் குறைந்து செல்வதனால் அதன் முக்கியத்துவத்தை மீள வலியுறுத்த வேண்டியுள்ளது. பல வருடங்களுக்கு முன்பு மனிதன் தனது உடல் சுகத்தைப் பேணும் பொழுது இயல்பாகவே மனச் சுகமும் பேணப்பட்டது.

அதற்கு மிக முக்கியமான காரணமாக வாழ்க்கையில் பல கூறுகள் மனச் சுகத்துடன் சம்பந்தப்பட்டதாக காணப்பட்டமையைக் குறிப்பிடலாம். இப்பொழுது அந்த மனச் சுகம் சார்ந்த கூறுகள் வாழ்வியலில் அருகி வருவதனால் எமது உடல் ஆரோக்கிய செயற்பாடுகள் மன ஆரோக்கியத்தை ஏற்படுத்துவதில் குறைந்தளவே பங்கு வகிக்கின்றன. அதனாலேயே நாம் மனச் சுகம் பற்றி அதிகம் கதைக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

பல தாசாப்தங்களுக்கு முன்பு பல் விளக்கி, முகம் கழுவி, குளித்து உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதில் செலவாகும் நேரத்தை விட பூஜை அறைக்குச் சென்று இறை வழிபாட்டில் ஈடுபட்டு மன ஆரோக்கியத்தை மேம்படுத்தும் செயற்பாட்டில் அதிக நேரத்தை செலவழித்து வ்ந்துள்ளோம். பொதுவாக 5 தொடக்கம் 10 நிமிடங்கள் உடல் சுகம் சார்ந்த விடயங்கள் நிறைவு பெற்றதன் பின்னர் 20 நிமிடங்கள் மனச் சுகம் சார்ந்த விடயங்களில் ஈடுபாட்டுடன் செயலாற்றுவதனை நாம் கண்டுள்ளோம்.

ஆனால் இன்றைய உலகில் இந் நடத்தையினை பார்ப்போமானால் உடல் ஆரோக்கியம் சார்ந்த விடயங்களான பல் விளக்கி, முகம் கழுவுதலுடன் வாசனைப்பொருட்களைப் பாவித்துக் குளிப்பதிலும் அழகினை மேம்படுத்துவதிலும் சுமார் 20-25 நிமிடங்கள் செலவழிக்கின்றோம். ஆனால் உள ஆரோக்கியத்தை மேம்படுத்துகின்ற ஆன்மீக செயற்பாட்டில் ஓரிரு நிமிடங்கள் செலவழிப்பது கூட அரிதாகவே காணப்படுகின்றது.

இத்தகைய செயற்பாடு எமது மனச் சுகத்தினை மெல்ல மெல்ல இல்லாதொழித்து விடுகின்றது. இத்தகைய செயற்பாடுகளை நாம் சிகிச்சை நிலையங்களில் வலிந்து உருவாக்க வேண்டியவர்களாகக் காணப்படுகின்றோம். இதனையே நாம் சற்று மாற்றி அமைத்து எமது அன்றாட வாழ்க்கையிலே மனச் சுகத்தினை மேம்படுத்துகின்ற காரியங்களில் ஈடுபடலாம்.

மனச் சுகம் என்பது எமது சுகத்தில் பெருமளவு பங்கினை வகிக்கின்றது என்பதை நாம் மறுதலிக்க முடியாது.



உலக உளநல நாள் இன்று

பலருடைய உடற் பருமன் மிக அதிகரித்துக் காணப்படுவதனை நாம் இன்று பெருமளவில் காண்கின்றோம். இத்தகைய ஆரோக்கிய குறைபாட்டினை கொண்டுள்ள பலரிடம் அவர்களது உடற் பருமன் பற்றி உரையாடும் போது பலருக்கு இந்த உடற்பருமனைக் கட்டுப்படுத்துகின்ற முறைகள் யாவும் தெரிந்திருக்கின்றன.

உதாரணமாக உணவு உட்கொள்வதனைக் குறைப்பதனையும் அல்லது உடற் பயிற்ச்சியினை அதிகரிக்கச் செய்வதன் மூலமும் இந்த உடற்பருமனைக் கட்டுப்படுத்த முடியும் போன்றன பெரும்பாலானவர்களுக்குத் தெரிகின்றது. ஆனால் ஏன் அதனை அவர்கள் செய்கின்றார்கள் இல்லை என்றால் அவர்களிடம் மனக் கட்டுப்பாடு இல்லை.

மனக்கட்டுப்பாடு என்பது மனச் சுகத்தின் மிக முக்கியமான ஒரு காரணியாகும். கடைசியில் இந்த உடற் பருமனாக இருக்கின்ற விடயம் கூட மனச் சுகத்தில் தான் தங்கியிருக்கின்றது என்ற உண்மை எமக்கு புரிகின்றது. மனச் சுகம் என்பது எல்லாவற்றுக்குமான அடிப்படையாக அமைகின்றது. ஆகவே இந்த மனச் சுகத்தை நாம் எல்லோரும் மேம்படுத்த வேண்டும் என்பதே இந்த ஆண்டின் கருப்பொருளாகின்றது.

இங்கு நாங்கள் செய்ய வேண்டியது என்னவொன்றால் நாங்கள் தற்போதுள்ள மன ஆரோக்கிய நிலையிலிருந்து மேம்பட நித்தமும் கரிசனை கொள்ள வேண்டும். ஆகவே தீவிரமான மன நோய்க்குட்பட்டவர்களாக இருக்கலாம். அல்லது மிதமான மன நோய்க்குட்பட்டவர்களாக இருக்கலாம். ஏன் மன நோய்க்குட்படாதவர்களாக்கூட இருக்கலாம். ஆனாலும் எல்லோரும் மன ஆரோக்கியத்தை மேம்படுத்த வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

இன்றைய கொவிட்-19 பெருந்தொற்றுக் காலத்தில் மனச்சுகத்தின் முக்கியத்துவம் முன் எப்போதையும் விட அதிகமாக உணரப்படுகின்றது.

தொற்று நோய்கள் உலகில் மிகப் பழைமையான நூற்றாண்டுகள் கண்ட ஒரு நோய் ஆகும். ஆரம்பத்தில் முன்னாயத்தமின்றி இருக்கும் போது அதிக பாதிப்பினைத் தந்து பின்னர் மனித குலத்திடம் சரணடைவதே அதன் வழக்கமாகும். இந்த கொரோனாத் தொற்றும் விரைவில் கட்டுக்குள் வந்துவிடும் என்பது வரலாறு தந்த பாடமாகும். எமது நாட்டில் மீண்டும் கொரானாவின் தாக்கம் அதிகரித்துச் செல்கின்றமை பலரின் சுகத்தை பாதிக்கவே செய்துள்ளது. ஒரு சிலர் உடற் சுகத்தினை இழந்த போதிலும் பெருமளவானோர் மனச்சுகத்தினை இழந்து நிற்பதனை காணக்கூடியாக உள்ளது.

ஒரு நல்ல போசாக்குள்ள மனிதரைக் கொரோனா தாக்கத்திலிருந்து இலகுவாக பாதுகாத்துவிட முடியும் என்பது எவ்வாறு உண்மையோ அதுபோலவே தொற்று ஏற்படும் போது நல்ல மன ஆரோக்கியத்தோடு இருப்பதும் நோயின் தாக்கத்தைப் பெருமளவு குறைத்து விரைவாகக் குணமாகிச் செல்வதற்கு வழிகோலுகின்றது என்பதும் உண்மையே. இதனை ஆய்வுகள் நிரூபித்துள்ளன.

எனவே குடும்ப அங்கத்தவர்கள் எல்லோரும் இவ்விடயம் சார்ந்து வெறுமனே தொடர்ந்து மேலெழுந்த வாரியாகக் கதைத்துக் கொண்டிருப்பதைவிட ஒருவர் இவ்விடயத்தினைச் சரியான முறையில் புரிந்து கொண்டு மற்றவர்களுக்கு விளக்குவது நல்லது. மற்றையவர்கள் தமக்கு விருப்பமான காரியங்களில் வீட்டில் இருந்தவாறே ஈடுபடலாம்.

**இன்று நாம் கற்றுக் கொள்ள வேண் டியவை,**

1. ஒரு நெருக்கடி நிலையில் நாம் பதற்றப்படுவதென்பது இயல்பானதே. ஆதியில் மனிதன் வனாங்களில் பதற்றப்படாமல் இருந்திருந்தால் எப்பவோ அழிந்து போயிருப்பான். நாம் இன்று எதிர்நோக்கும் சவால் என்பது அசாதாரணமானதே. நாம் அதற்குப் பதற்றப்படுவது என்பது சாதாரணமானதே. சில சந்தர்ப்பங்களில் தேவையற்று மிகையாகப் பதற்றப்படுவதே இங்கு பிரச்சினையாகும். அதனை நாம் கணித்து நிதானமாகச் செயற்பட்டால் எல்லாமே சரியாகிவிடும்.

2. நிலைமைகளை எண்ணி கவலைப்படுவதென்பதும் சாதாரண மனித இயல்பேயாகும். தனது வாழ்வு பற்றியும் அதன் எதிர்காலம் பற்றியும் மனிதன் கவலைப்படுவதொன்றும் தவறில்லையே. அவனது வளர்ச்சி கூட இந்தக் கவலைகளிலிருந்து தான் ஆரம்பமானது. சதா கவலைப்பட்டுக்கொண்டு இருப்போமேயானால் எமது வாழ்க்கையை நாம் தொலைக்க நேரிடும். எனவே தான் குறிப்பிட்ட நேரத்தைக் கவலைப்படுவதற்காக ஒதுக்கிக் கொண்டு மற்றைய நேரங்களில் அதனைத் தவிர்த்து மகிழ்வுடன் இருந்திட முடியும். ஆக்கபூர்வமான காரியங்களில் ஈடுபட முடியும்.

3. கால ஓட்டத்தில், இயந்திரமயமான வாழ்க்கை ஓட்டத்தில் நாம் எமது விருப்புக்கள் பலவற்றைத் தொலைத்து விட்டோம். இயற்கையோடு இருந்த பிணைப்பினையும் மறந்துவிட்டோம். மிகவும் வாஞ்சையோடு செய்கின்ற பல விடயங்களைத் தவிர்த்துப் பல நாட்கள் ஆகிவிட்டன. இவற்றை நாம் மீளச் செய்வதற்கும் அனுபவிப்பதற்கும் இந்த சந்தர்ப்பம் எமக்குக் கிடைத்துள்ள வரப்பிரசாதமாகும்.

4. நாம் எமது நெருங்கியவர்களுக்கு பல வழிகளில் கடமைப்பட்டுள்ளோம். அவர்களது பல செயற்பாடுகளுக்கு நாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். வேலைப்பளு காரணமாக நாம் சுகம் விசாரிக்கவும் ஆறுதல் சொல்லவும் மறந்து போய்விட்டோம். அவர்களது தேவைகளைக் கவனிக்காது அசட்டையாகச் சென்றுவிட்டோம். இந்தச் சந்தர்ப்பத்தில் இவற்றையெல்லாம் செய்து உணர்வுபூர்வமாக உறவினை மேம்படுத்திட முடியும். உறவுகளுக்கிடையிலான நெருக்கத்தில் உண்மை முகத்தினையும் கண்டிட முடியும்.

5. முன் எப்போதையும் விட நாம் பொறுப்புள்ளவர்களாக நடந்துகொள்ள வேண்டிய மிகமுக்கியமான காலப்பகுதியாக இது அமைந்துள்ளது. எமது பழக்கவழக்கங்களுக்கு நாமே பொறுப்பானவர்கள் என்பதைக் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். நாம் கற்றுக்கொண்ட விரும்பத்தகாத நடத்தைகளை மாற்றிக் கொள்வதற்கு இது ஒரு உகந்த காலமாகும். அத்துடன் புதிய நல்ல பழக்கங்களைக் கற்றுக்கொள்வதும் கூட இக்காலப்பகுதியில் சாத்தியமானதே. முக்கியமாக உடற்பருமனைக் குறைத்துக் கொள்வதற்கு முயற்சி செய்தல் இக்காலப்பகுதியில் இலகுவாக அமைந்துவிடும். ஒரு கிரமமான ஒழுங்கு முறையில் எமது நடத்தைகளை அமைத்துக் கொள்வதன் மூலம் மாற்றங்களை ஏற்படுத்தலாம்.

**அவநம்பிக்கைகளை மெல்ல விலத்தி**

**புதுநம்பிக்கைகளை ஆழ விதைப் போம்**

**நன்றி: சாந்திகம் உளவளத்துணை நிலையம்**

சி.சிவதாஸ்,
உள மருத்துவ நிபுணர்
யாழ்.போதனா
வைத்தியசாலை,



# தமிழர்களின் பிரச்சினைகளை அரசியலாக்க வேண்டாம்

## பாராளுமன்றில் வியாழேந்திரன்

(கொழும்பு)

தமிழ் மக்களின் பிரச்சினைகளை வைத்துக்கொண்டு அரசியல் செய்ய வேண்டாமென இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவ்வாறு செயற்பட்டவர்களால் கல்முனை நகரசபை பிரச்சினையைக் கூட தீர்த்து வைக்கமுடியாமல் போனதாகவும் அவர் சபையில் குறிப்பிட்டார்.


பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் சர்வதேச உடன்படிக்கைகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச ஒப்பந்தங்கள் எமது நாட்டின் பௌதீக வளத்தையும் மனித வளத்தையும் பாதுகாப்பதாக அமைய வேண்டும். அவற்றைப் பாதிக்கும் வகையில் எந்த ஒப்பந்தங்களையும் ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் தெரிவித்தார். (நி-7)



# ஆன்மீகம்

## பண்பில் ஒளிர்வோம், பணிவால் நிமிர்வோம்!



'முக்கனிகள்' என்று சிறப்பிக்கப் பெறுபவை வாழை, மா, பலா. பழங்கள் மூன்றையும் வாங்கிய ஒருவர் அவற்றைத் துண்டாக்கினார். அனைத்தையும் சாறு பிழிந்து அந்த முப்பழச் சாற்றோடு சர்க்கரை, தேன், பால், அனைத்தையும் சேர்த்தார். 'தனித்தனி முக்கனி பிழிந்து வடித்து ஒன்றாய்க் கூட்டி சர்க்கரையும், கற்கண்டின் பொடியும் மிகக் கலந்தே தனித்த நறும் தேன் பெய்து, பசும்பாலும் சேர்த்து...' என்று திருவருட்பா தெரிவிப்பது போல் தித்திக்கும் பானம் தயார் செய்தார். அவரும் நண்பர்களும் சேர்ந்து பருகத் தொடங்கினர். "ஏதோ வாடை வருகிறதே!" என்றார் ஒரு நண்பர். "ஆமாம் சரியில்லை," என்று கோப்பையைக் கீழே வைத்தார் இன்னொருவர். என்ன காரணம்?

இனிப்பிற் சிறந்த அனைத்தையும் ஒன்றாக்கியவர் அதைச் சரியாகக் கழுவாத, கறைபடிந்த பாத்திரத்தில் ஊற்றினால் இப்படித்தான் ஆகிவிடும்! சிறந்த செல்வம், கல்வி, ஆற்றல் என அனைத்தும் ஒருவரிடம் சேர்ந்திருந்தாலும் நல்ல பண்புகள் இல்லையேல் அவரால் வாழ்வில் பளிச்சிட முடியாது. சமுதாயம் அவரை உயர் நிலையில் வைத்து ஒருபோதும் போற்றாது. 'பண்பிலான் பெற்ற பெருஞ் செல்வம் நன்பால் கலம் தீமையில் திரிந்தற்று. - பாத்திரத்தின் அசுத்தத்தால் பால் திரிந்து விடுவது போல பண்பிலாத்வரிடத்தில் செல்வமும், ஆற்றலும், கல்வியும் சேர்ந்து என்ன பயன் என்கிறார் திருவள்ளுவர். பண்புகளில் முதலிடம் வகிப்பது பணிவுடமை. பதவியிலோ, செல்வத்திலோ, கல்வியிலோ உயர் நிலை பெற்றவர்கள் ஆணவத்தால் தலைநிமிராது அடக்கத்தால் பணிவுடன் நடந்து கொள்வது மிகவும் அவசியம்.

வாழ்வில் பணிவுடன் தலை வணங்கிய சான்றோர்கள் தான் வரலாற்றில் தலைநிமிர்ந்து நடக்கிறார்கள். மக்கள் சமுதாயம் அவர்களுக்குத்தான் மகுடம் சூட்டுகிறது. ராவணனால் சிறை பிடிக்கப்பட்ட சீதை எந்த திசையில் எவ்விடத்தில் வைக்கப்பட்டிருக்கிறாள் என்று அறிந்து வரவானரர் குழாம் ஏவப்பட்டது. திசைகள் பலவற்றிலும் தேடிய குரங்குகளால் சீதாதேவி இருக்குமிடத்தைக் கண்டு பிடிக்க இயலவில்லை. கடைசியில் சம்பாதி என்னும் பறவை மூலம் இலங்கையில் அசோகவனத்தில் சீதாதேவி இருக்கிறாள். கடலைத் தாண்டி மறுபுறம் சென்றால் சீதையை மீட்டு வரமுடியும் என்ற தகவல் கிடைக்கிறது.

கடலைத் தாண்டும் வலிமை வேண்டும். கட்டுக் காவல் நிறைந்த இலங்கைக்குள் தனி ஒருவனாகச் செல்ல வேண்டும். சீதையைப் பார்த்து ராமர் தந்த கணையாழியைக் கொடுத்து அவள் அச்சம் தீர்க்க வேண்டும். பின் மீண்டும் இப்பக்கம் வந்து ராமரிடம் செய்தி உரைக்க வேண்டும். இவை அனைத்தும் எத்தனை அசாதரணமான காரியங்கள்! ஆனால், வல்லமை நிறைந்த வாயுபுத்திரனான அனுமார் இத்தனை செயல்களையும் சிறப்பாக முடித்தார். அது மட்டுமன்றி அங்கு அவரை எதிர்த்த கிங்கரர், பஞ்ச சேனாதிபதி, அட்சயகுமாரன் அனைவரையும் வதைத்தார். இலங்கை மாநகரத்தை தீக்கிரையாக்கினார். மீண்டு வந்து ராமரின் திருவடிகளைப் பணிந்தார்.

'கண்டேன் சீதையை! இதோ அவர்கள் தந்த அடையாளம் சூளாமணி! என்றார். மகிழ்ந்த ராமபிரான் மாருதியை மார்புறத் தழுவினார். அனுமார் தன் வீரதீர செயல்களையும் இலங்கை நகருக்கு எரியூட்டியதையும் அங்கு சந்தித்த சவால்களை முறியடித்ததையும் பற்றி மூச்சுவிடவில்லை. (தொடரும்)

# செய்தித்துளிகள்

## ஊரடங்கை மீறிய 91 பேர் கைது

(கொழும்பு)

பொலிஸ் ஊரடங்கு சட்டத்தை மீறிய குற்றச்சாட்டுக்காக 91 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேநேரம் 23 வாகனங்களும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


மேல் மாகாணத்தில் நேற்று முன்தினம் மாலை 6 மணி முதல் நேற்று அதிகாலை 5 மணிவரையான காலப் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது 226 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுள் பெரும்பாலானோர் ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டுக்கு அமைவாக கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேநேரம் கஞ்சாவுடன் 61 பேரும் சட்டவிராத மதுபானத்துடன் 54 பேரும் ஏனைய போதைப்பொருட்களுடன் 12 பேரும் வேறு பல குற்றச் செயலுக்காக 12 பேரும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (நி-7)

## மஸ்கெலியாவைச் சேர்ந்த 15 பேர் தனிமைப்படுத்தலில்

(மஸ்கெலியா)



மஸ்கெலியா மொக்கா தோட்டத்தில் 15 பேர் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர்.

ஒரு தம்பதியினரும் ஆண் ஒருவரும் கம்பஹாவில் உள்ள விற்பனையகம் ஒன்றில் பணிபுரிந்த நிலையில் கொரோனாத் தொற்று பரவலை அடுத்து மஸ்கெலியாவில் உள்ள தமது வீட்டுக்கு வந்துள்ளனர்.

இவர்கள் புகையிரதம் மூலம் ஹற்றனுக்கு வந்து - பின்னர் பேருந்து மூலம் மஸ்கெலியாவை சென்றடைந்துள்ளனர். இதனையடுத்து இவர்களுடன் தொடர்புடைய மூன்று குடும்பங்களும் சுயதனிமைப்படுத்தலுக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு பீ.சீ.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 100-120 | 100 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 | 140 | 140 |
| பச்சைமிளகாய் | 180 | 150 | 200 | 160 |
| தக்காளி | 160 | 180 | 160 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 70 | 200 | 80 |
| கோவா | 120 | 130 | 120 | 120 |
| கரட் | 180 | 180 | 180 | 200 |
| பூசணி | 40 | 80 | 70 | 100 |
| புடோல் | 80 | 120 | 80 | 100 |
| வாழைக்காய் | 50 | 80 | 60-80 | 100 |
| சின்ன வெங்காயம் | 200 | 200 | 200-220 | 240 |
| பெரிய வெங்காயம் | 180 | 200 | 200 | 280 |
| பாகற்காய் | 200 | 260 | 200 | 280 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 100-120 | 100 |
| பயற்றங்காய் | 100 | 120 | 70-80 | 120 |
| லீக்ஸ் | 100 | 100 | 100 | 100 |
| பீற்றூட் | 80 | 90 | 100 | 100 |
| கறிமிளகாய் | 200 | 260 | 240 | 280 |
| முருங்கைக்காய் | 150 | 150 | 100-120 | 80 |
| போஞ்சி | 200 | 260 | 220 | 250 |
| கத்தரிதம்புள்ள | 80 | 80 | 120 | 80 |
| கீரை - 1 பிடி | 40 | 40 | 50 | 40 |
| தேசிக்காய் | 120 | 100 | 120 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 70 | 60-80 |
| இராசவள்ளி | 300 | 300 | — | — |
| வெங்காயப்பூ | 200 | 250 | — | — |
| முள்ளங்கி | 80 | 100 | 70 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 50 | 30 |
| வல்லாரை | 15 | 80 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | — | — | — |




ஒரு காட்டில் வயது முதிர்ந்த சிங்கம் ஒன்று வசித்து வந்தது. அதற்குத் திடீரென வருத்தம் பிடித்துக்கொண்டது. எழுந்து நடக்கவே முடியவில்லை. குகையில் படுத்திருந்தது.

மிருக இராசாவான சிங்கம் நோயுற்று இருப்பதை அறிந்த காட்டில் உள்ள மிருகங்கள் எல்லாம் அதன் சுகம் விசாரிக்கச் சென்று வந்தன.

ஆனால் நரி மட்டும் அந்தப் பக்கம் செல்லவே இல்லை. இதனை நரியின் பகைவனான ஓநாய் அவதானித்தது. சிங்கத்திடம் நரியைப் பற்றிக் கூறிவைக்க விரும்பியது.

ஒருநாள் சிங்கத்திடம் ஓநாய் சென்றது. சுகம் விசாரித்தது. பின்னர் நரியைப் பற்றிக் கூறத் தொடங்கியது. "அரசே, நான் சொல்வதைச் சற்றுக் கேளுங்கள். நீங்கள் சுகவீனமுற்றிருக்கிறீர்கள். உங்களைப் பார்க்க இந்தக் காட்டில் உள்ள எல்லா மிருகங்களும் வந்து சென்றுள்ளன.

ஆனால் இங்குள்ள நரி மட்டும் வரவில்லை. அது பெருமையுடன் உலாவித் திரிகிறது" என்றது ஓநாய். இதைக்கேட்டதும் சிங்கத்திற்குக் கடும் கோபம் வந்தது.

"நண்பரே, நீர் சொல்வது சரிதான். அந்த நரிக்குப் பாடம் புகட்டுகிறேன் பார். இந்தப் பக்கம் வரட்டும். அதனைக் கொன்று இரத்தம் குடிக்கிறேனா? இல்லையா? இருந்து பாரும்" என்று கர்ச்சித்தது.


சிங்கத்தின் குகைக்கு வெளியே நின்று கொண்டிருந்த நரிக்கு இது நன்கு கேட்டது. "ஓகோ, ஓநாய் என்னைப் பழி தீர்க்க முற்படுகிறது. சரி.சரி பார்த்துக் கொள்வோம்" என்று தனக்குள் நினைத்துக் கொண்டது.

சில நாட்களின் பின்னர் நரி சிங்கத்திடம் வந்தது. நரியாரைக் கண்டதும் சிங்கத்திற்குக் கோபம் வந்தது. "நரியாரே! நான் உன்மீது கோபம் கொண்டுள்ளேன். நீர் ஒரு நாளும் என்னைப் பார்க்க வரவில்லை. நான் உமது அரசன் இல்லை. இன்று உம்மைக் கொன்று இரத்தம் குடிக்கப் போகிறேன். நீர் எனது எதிரி" என்றது.

சிங்கம் கூறியதைக் கேட்டதும் நரிக்குப் பயம் வந்தது என்றாலும் அது மிக்க சாதுரியமாகப் பதில் கூறியது. "கோபம் வேண்டாம் அரசே! நீங்கள் எனது

## வாசிப்பு மாதம் ஒக்டோபர்-2020

# சிறந்த மருந்து



எதிரியல்ல. நீங்கள் எனது உற்ற நண்பர்.

மற்ற மிருகங்கள் தங்களைப் பார்க்க வந்தன. வெறுமனே திரும்பிச் சென்றன. தங்கள் நோய்க்கு அவை மருந்து எதையும் தேடித் தரவில்லை. தங்களுக்கு உதவியும் செய்யவில்லை. யானோ இடத்துக்கிடம் அலைந்தேன். உங்களுக்குத் தகுந்த சிகிச்சையளிக்க வல்ல வைத்தியரைத் தேடி இதனால் இங்கு வரக் காலதாமதம் ஆனது. இன்று காலைதான் நண்பர் ஒருவர் நல்ல வைத்தியர் ஒருவரிடம் என்னை அழைத்துச் சென்றார்" என்றது.

இதனைக் கேட்டதும் சிங்கத்தின் கோபம் தணிந்தது. "வைத்தியர் என்ன சொன்னார்?" என்று சிங்கம் ஆவலோடு கேட்டது. அதற்கு நரி "தங்களுக்கு ஏற்பட்டுள்ள நோய்க்கு ஓநாயின் சூடான இரத்தம்தான் சிறந்த மருந்தாகும். ஒருசில நாட்களில் உங்கள் நோய் குணமாகிவிடும் என்று அந்த வைத்தியர் சொன்னார்" என்றது. சிங்கம் மகிழ்ச்சியடைந்தது. மறுநாளே ஓநாயைக் கொன்று அதன் இரத்தத்தைப் பருகியது.

**தொகுப்பு:-**
**புத்தூர் பொது நூலகம்.**

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## குடி உயரக் கோன் உயரும்



திருத்தக்கதேவர்

திருத்தக்கதேவரால் இயற்றப்பட்ட சீவக சிந்தாமணியும் தோலமொழித் தேவரால் இயற்றப்பட்ட சூளாமணியும் சோழர் காலத்திய இலக்கியங்கள்.

ராஜராஜன் காலத்தில் நாகப்பட்டினத்தில் புத்த விகாரம் கட்டப்பட்டது. சிற்றரசர்களால் சில சமணக் கோயில்களும் கட்டப்பட்டன.

சிவபக்தராக இருந்தாலும் வேறுமதப் பக்தர்களைத் துன்புறுத்தாத அதிசய மன்னராகவே ராஜராஜன் இருந்தார். மன்னருக்கு இணையாக, சோழர் காலத்தில் மக்கள் அனைவரும் கடவுளை நம்பினார்கள். கடவுளின் நம்பகத்தன்மை குறித்துக் கேள்வி கேட்கக்கூடப் பயந்தார்கள்.

கோயில்களில் மூன்று வேளையும் அபிஷேகம் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டன. திருவமுது சமைப்பதில் தேங்காய் பயன்படுத்தப்படவில்லை. அதேபோல இறைவனுக்குத் தேங்காய் படைக்கும் வழக்கமும் அப்போது இல்லை.

திருவையாறு, திருவலஞ்சுழி, திருச்செங்காட்டங்குடி, திருக்கடையூர், திருப்புகலூர், நாகப்பட்டினம், திருக்களூர், திருக்காரவாசல், திருநெடுங்களம், திருமங்கலம், பிரம்மதேசம், எண்ணாயிரம் திருமுக்கூடல், சிவபுரம், அகரம், மரக்காணம், உலகாபுரம், திருமலை, மேல்மாடி போன்ற எண்ணற்ற கோயில்களுக்கு ராஜராஜன் தானம் அளித்திருக்கிறார்.

மேலும் பாண்டிய நாட்டில் திருநெல்வேலி, கங்கைகொண்டான், சேரமாதேவி, அம்பா சமுத்திரம், பிரம்மதேசம், ஆத்தூர் போன்ற கோயில்களிலும் ராஜராஜன் தானங்கள் செய்துள்ளார்.

உலகமாதேவியார் ராஜராஜனின் முதல் மனைவி. இவர் விருப்பத்தில் திருவையாற்றில் கற்கோயில் ஒன்று கட்டப்பட்டு அதற்கு உலகமாதேவீச்சரம் என்று பெயரிடப்பட்டது.

இக்கோயிலுக்கு ராஜராஜன் ஏராளமான தானங்களை அளித்துள்ளார். மற்றொரு தேவியான சோழமாதேவி, தஞ்சை பெரிய கோயிலுக்கு ஆடவல்லான், உமா பரமேசுவரியார், இடபவாகனத்தேவர், கணபதி ஆகிய திருமேனிகளைச் செய்து அளித்ததும் அதற்குரிய நகைகளை வழங்கியதும் கல்வெட்டுக்களில் பொறிக்கப்பட்டுள்ளன.

இத்தேவியின் பெயரால் திருச்சி, திருவெறும்பூர் அருகே சோழமாதேவி என்ற கிராமம் அமைந்துள்ளது. இங்குள்ள கைலாசநாதர் கோயிலின் மீது ராஜராஜசோழன் மிகுந்த ஈடுபாடு கொண்டு நந்தவனம் அமைத்துக் கொடுத்துள்ளார்.

இசைக்கலைஞர்களைக் கொண்டு ஐந்து வகையான இசைக் கருவிகளினால் பஞ்சமகாசப்தம் என்ற இசை வழிபாட்டினைச் செய்யவும் தானம் செய்துள்ளார். (இப்போது இக் கோயிலைத் தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை பராமரித்து வருகிறது.

(தொடரும்)

சினத்தை ஒழிக்க வேண்டும். சினம் ஒழிய மனம் அடையும் நிலைதான் பொறுமை.

– வேதாத்ரி மகரிஷி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## யாழ்.பல்கலைக்கழகம் சுமுக நிலைக்கு வர வேண்டும்

நாடு முழுவதும் கொரோனாத் தொற்றினால் உறைந்து போயுள்ளது.

கம்பஹாவில் ஏற்பட்ட கொரோனாத் தொற்று வீரியம்மிக்கதென்ற மருத்துவர்களின் எச்சரிக்கையும் அடுத்து வரும் நாட்கள் மிகப் பெரும் சவால் நிறைந்ததாக இருக்கும் என்பதாக சுகாதார அமைச்சு விடுக்கின்ற அபாய அறிவிப்புகளும் மனதைப் பதற வைக்கிறது.

கட்டுங்கடங்காமல் கொரோனாத் தொற்றுப் பரவினால், என்ன செய்ய முடியும்? யார் காப்பாற்றுவார்கள்? என்ற ஏக்கம் அனைவரையும் பிய்த்துக் கொண்டிருக்க,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலைப்பீட மாணவர்களிடையே கைகலப்பு என்பதான செய்திகள் மிகுந்த வேதனையைத் தருகிறது.

நாட்டின் சமகால நிலைமைகளைப் புரிந்து கொள்வதற்குக்கூட யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்கள் தயாரில்லையா? என்று எண்ணுகின்ற அளவிலேயே எங்கள் நிலைமையுள்ளது.

கலைப்பீட மாணவர்களிடையே முறுகல் என்றால் இல்லை. அந்த முறுகல் நிலையைக் கடந்து; யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர், விரிவுரையாளர்கள், நிர்வாகத்தினர் மீது மாணவர்களில் ஒரு தரப்பினர் குற்றம் சுமத்தி சமூக வலைத்தளங்களில் கருத்துப் பகிர்வு செய்வதைப் பார்க்கும்போது தலைசுற்றுகிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் என்னதான் நடக்கிறது என்று கேட்பதைத் தவிர, வேறு எதுவும் புரியவில்லை.

தமிழர்களுக்கு நிர்வாகம் நடத்தத் தெரியாது என்ற குற்றச்சாட்டை முன்வைத்து தென்னிலங்கையின் உயர்மட்டம் கடும் பிரசாரம் செய்து வருகிறது.

எதைக் கொடுத்தாலும் தமிழர்கள் போட்டுடைத்து விடுவார்கள். எந்தவித தகவல்களையும் அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள முடியாது எனச் சிங்கள நிர்வாகத் தரப்பு கடுமையான விமர்சனத்தைச் செய்கிறது.

இந்த விமர்சனத்தோடு, காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் தமிழர்களுக்கு வழங்கப்பட்டால், எல்லாம் கந்தறுந்து காவடி எடுப்பதாக நிலைமை ஆகும் என அவர்கள் வெளிப்படையாகக் கூறுகின்றனர்.

நிலைமை இவ்வாறாக இருக்கையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலைப்பீட மாணவர்களிடையே முறுகல் என்பது சமகால சூழலில் முற்றாகத் தவிர்த்திருக்கப்பட வேண்டும்.

மாணவர்களுக்கிடையே ஏற்பட்ட முறுகலை சுமுகப்படுத்த அல்லது கட்டுப்படுத்துகின்ற செயற்பாட்டில் பல்கலைக்கழக நிர்வாகம் வெற்றி கண்டிருக்க வேண்டும்.

இந்த நிலைமைகள் இல்லாமல் போய், மாணவர்கள் நிர்வாகத்தையும் – நிர்வாகம் மாணவர்களையும் மாறி மாறிக் குற்றம் சுமத்துகின்ற செயல்கள் அநாகரிகமானவை.

இவையனைத்தும் உடனடியாக முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஒரு சுமுக நிலையை ஏற்படுத்தி, ஆசிரியர் – மாணவர் என்ற உயர்ந்த பண்பாட்டு உறவைப் பல்கலைக்கழகம் என்றும் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்பதே தமிழ்ச் சமூகத்தின் பேணவா.

# கொழும்புக்கு வரப்போகும் அபாயம் சுகாதாரத்துறை எச்சரிக்கை

(கொழும்பு)

**கம்பஹா மாவட்டத்தில் இருந்து கொழும்பு மாவட்டத்திற்கு வருகை தருபவர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்புடையவர்கள் பி.சி.ஆர். பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு தனிமைப்படுத்தலுக்குட்படுத்தப்பட வேண்டுமென தொற்றுநோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்தார்.**

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துரைக்கும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

கொழும்பு மாவட்டம் தொடர்பில் விசேடமாக கவனம் செலுத்தப்படவில்லை. ஆனால் கொழும்பு நகரை எடுத்துக் கொண்டால் கம்பஹா நகரைப் போன்று மக்கள் தொகை அதிகம் கொண்ட பகுதியாகும்.

அதேபோன்று சன நடமாட்டம் அதிகம் உள்ளது. அத்துடன் கம்பஹா மாவட்டத்தில் இருந்து கொழும்பு மாவட்டத்திற்கு வருகை தருவோரின் எண்ணிக்கை ஏனைய மாவட்டங்களை விட அதிகமாக உள்ளது. அதனால் ஏனைய மாவட்டங்களைவிட கொழும்பு மாவட்டத்தில் அதிகளவிலான கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்படலாம்.

ஆகவே, கம்பஹா மாவட்டத்தில் இருந்து கொழும்பு மாவட்டத்திற்கு செல்பவர்களை அடையாளம் காண்பதுடன் அவர்களுடன் தொடர்புடையவர்களையும் அடையாளம் கண்டு அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகளை முன்னெடுப்பதுடன் தனிமைப்படுத்தலுக்குட்படுத்த வேண்டும். அத்துடன், இரண்டு வாரங்களில் மீண்டும் அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு தொற்றாளர்களை அடையாளம் காண்பதுடன் அவர்கள் வெளியில் செல்வதைத் தவிர்க்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். (ஐ)

## கதிர்காமம் சென்றவருக்கு கொரோனா

(கொழும்பு)

மினுவாங்கொட பிரண்டிக்ஸ் ஆடைத் தொழிற்சாலையின் ஊழியர்களுடன் கடந்த 29 ஆம் திகதி முதல் 4 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கதிர்காமத்திற்கு சுற்றுலா சென்ற ஒருவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கம்பளை உடகல்பாய பிரதேசத்தை சேர்ந்தவருக்கே இவ்வாறு கொரோனா வைரஸ் தொற்றுறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர் சுகயீனம் காரணமாக நேற்று முன்தினம் (வியாழக்கிழமை) இரவு சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

கம்பஹாவிலுள்ள ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரிந்த பெண்ணொருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று அண்மையில் உறுதிப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

## இலங்கையின் அபிவிருத்திக்கு தொடர்ந்தும் ஒத்துழைப்பு-சீனா

(கொழும்பு)

இலங்கையின் அபிவிருத்திக்கான முயற்சிகளுக்கு தொடர்ந்தும் ஒத்துழைப்பை வழங்குவதாக சீனா தெரிவித்துள்ளது.

சீனாவின் முன்னாள் வெளியுறவு அமைச்சர் யாங் ஜெய்சி தலைமையிலான தூதுக் குழுவினர், நேற்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடிய போது இதனைத்தெரிவித்துள்ளனர்.

அத்துடன், இரு நாடுகளுக்கும் இடையிலான நட்பை தொடர்ந்தும் பாதுகாப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் சீன ஜனாதிபதி முன்னுரிமைவழங்குவதாக தூதுக் குழுவினர் இதன் போது சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும், ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் பேரவை உட்பட சர்வதேச அரங்கங்களில், இலங்கையின் சுதந்திரம், இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாடு ஆகியவற்றில் சீனா உறுதியாக நிற்பதாகவும் சீனத் தூதுக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (ஐ-4)

## பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

நாட்டில் தற்போது நிலவும் கொவிட்-19 அசாதாரண சூழ்நிலை காரணமாக சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் பிற்போடப்பட்டுள்ளதாக மேற்படி கல்லூரியின் அதிபர் எம். செல்வஸ்தான் அறிவித்துள்ளார். (5-4-18)

## கற்கை நெறிகள் நடைபெறாது

(யாழ்ப்பாணம்)

வடமாகாண மும்மொழிக் கற்கை நிலையத்தினால் நடத்தப்படும் சகல பயிற்சிநெறி வகுப்புக்களும் இன்று 10 ஆம் திகதி சனிக்கிழமையிலிருந்து மறு அறிவித்தல் வரை நடைபெறமாட்டாது என வடமாகாண மும்மொழிக் கற்கை நிலையப் பதில் பணிப்பாளர் பி.என்.சுதர்ஷன் அறிவித்துள்ளார். (5)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

பரிசுத்தமான மனச்சாட்சி உள்ளவன் அடக்கமாகவும் அமைதியாகவும் இருப்பான்.

-தாமஸ் அகெம்பிஸ்

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## மன உறுதியுடன் இருங்கள்

❖ ஒவ்வொரு மனித இதயத்தின் உள்ளும் மிக ஆழத்தில் ஆதி அந்தமில்லாத இறைவன் ஒளிந்து கொண்டிருக்கின்றான். அவனை உணர்ந்தவனே உண்மையை உணர்ந்தவன் ஆவான்.

❖ தன்னுடைய பலவீனங்கள், குற்றங்கள், பாவங்கள் எல்லாவற்றையும் வேறொருவரின் மேல் சுமத்துவது மனித இயல்பாக இருக்கிறது. நம்முடைய தவறுகளை உணர மறுப்பது தான் இதற்குக் காரணம்.

❖ எத்தனை நல்ல நூல்களை வாசித்தாலும் நம்மால் தூயவராக முடியாது. உண்மையை நாம் உணர வேண்டுமானால், தீவிரமாகச் சிந்திக்க வேண்டும். அப்போது மெய்யுணர்வு நம்முள் மலரத் தொடங்கும்.

❖ உங்களுக்குப் பிடித்ததை கடைப்பிடிப்பதுபோல, மற்றவர்களும் அவரவருக்கு விருப்பமானவற்றை பின்பற்றும் சுதந்திரத்தைக் கொடுங்கள். ஏனென்றால், சுதந்திரம் இல்லாத எதுவும் வளர்ச்சி அடைவதில்லை.

❖ எந்த விடயத்தையும் நன்கு ஆய்ந்து பாருங்கள். கொண்ட கொள்கை மற்றும் குறிக்கோளில் மனவுறுதியுடன் இருங்கள்.

# பந்துவீச்சால் பதம் பார்த்த ரஷித்; பஞ்சாப்பை ஓடவிட்டது ஐதராபாத்

ஐ.பி.எல்.தொடரின்22 ஆவது லீக் ஆட்டம் டுபாயில் நடைபெற்றது. டொஸ் வென்ற ஐதராபாத் பட்டிங் தேர்வு செய்தது. வோர்னர், பேர்ஸ்டோவ் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர்.

ஆரம்பம் முதலே வோர்னர்-பேர்ஸ்டோவ் ஜோடி அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தியது. இருவரும் அரைச்சதம் கடந்த நிலையில் 15.1 ஓவரில் அணியின் ஸ்கோர் 160 எடுத்திருந்த நிலையில் 40 பந்தில் 1 சிக்சர், 5 பவுண்டரி உட்பட 52 குவித்த வோர்னர் ஐதராபாத் அணியின் ரவி பிஷோனி பந்து வீச்சில் வெளியேறினார்.

வோர்னர் அவுட் ஆன சில நிமிடங்களிலேயே 55 பந்துகளில் 7 பவுண்டரிகள், 6 சிக்சர்கள் உட்பட 97 ரன்கள் குவித்திருந்த பேர்ஸ்டோவ் அதே ஓவரில் ரவி பிஷோனி பந்து வீச்சில் வெளியேறினார்.




அடுத்து வந்த வீரர்கள் சொற்ப ரன்களில் வெளியேறியதால் அணியின் ஸ்கோர் வேகம் சற்று குறைந்தது. ஆனால், இறுதி கட்டத்தில் சற்று அதிரடியாக ஆடிய வில்லியம்சன் 10 பந்தில் 1 பவுண்டரி, 1 சிக்சர் உட்பட 20 ரன்கள் குவித்தார். இதனால், 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்த சன்ரைசர்ஸ் ஐதராபாத் 201 ரன்கள் குவித்தது.

202 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பஞ்சாப் அணியின் கப்டன் கே.எல். ராகுல், மயங்க் அகர்வால் தொடக்க வீரர்களாக களமிறங்கினர்.

6 பந்தில் 9 ரன்கள் எடுத்திருந்த அகர்வால் ரன் அவுட் முறையில் வெளியேறினார். அடுத்துவந்த சிம்ரன் சிங் 8 பந்தில் 11 ரன்னுடன் வெளியேறினார். 16 பந்தில் 11 ரன்களை எடுத்த கப்டன் கே.எல்.ராகுல் அபிஷேக் சர்மா பந்து வீச்சில் வெளியேறினார்.

இதனால், 6.4 ஓவரில் 3 விக்கெட்டுகளை இழந்த பஞ்சாப் 58 ரன்கள் எடுத்திருந்தது. அடுத்துவந்த நிக்கோலஸ் பூரன், மக்ஸ்வெல்லுடன் ஜோடி சேர்ந்து அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

12 பந்தில் 7 ரன்களை எடுத்திருந்த மக்ஸ்வெல் ரன் அவுட் முறையில் வெளியேறினார். மற்ற வீரர்கள் அடுத்தடுத்து அவுட் ஆன நிலையில் மறுமுனையில் நிலைத்து நின்று ஆடிய நிக்கோலஸ் பூரன் 37 பந்துகளில் 5 பவுண்டரிகள், 7 சிக்சர்கள் உட்பட 77 ரன்கள் குவித்து ரஷித்கான் பந்து வீச்சில் வெளியேறினார்.


ஐதராபாத் அணியின் சிறப்பான பந்துவீச்சை சமாளிக்க முடியாமலும் பஞ்சாப் அணி 16.5 ஓவரிலேயே அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 132 ரன்கள் மட்டுமே பெற்றது.

இதனால், கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியை 69 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணி அபார வெற்றி பெற்றது.

ஐதராபாத் அணியின் ரஷித்கான் 4 ஓவர்கள் வீசி 12 ரன்கள் மட்டுமே கொடுத்து 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.(4)

# 50 இற்கு மேல் 50 முறை

## வோர்னர் சாதனை




கிங்ஸ்லெவன் பஞ்சாப் அணிக்கெதிராக 52 ரன்கள் அடித்த டேவிட் வோர்னர், ஐ.பி.எல்.தொடரில் 50 முறை 50 ரன்களுக்கு மேல் அடித்து சாதனை படைத்துள்ளார்.

சன்ரைசர்ஸ் ஐதராபாத் - கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் நேற்று முன்தினம் டுபாயில் நடைபெற்றது. டொஸ் வென்று முதலில் பட்டிங் செய்த ஐதராபாத் 201 ரன்கள் குவித்தது.

வோர்னர் - பேர்ஸ்டோவ் ஜோடி 15.1 ஓவரில் 160 ரன்கள் குவித்தது. வோர்னர் 40 பந்தில் 52 ரன்கள் அடித்தார். இதன்மூலம் ஐ.பி.எல்.கிரிக்கெட்டில் 50 முறை 50 ரன்களுக்கு மேல் எடுத்து சாதனை படைத்தார். இதில் நான்கு சதங்கள் அடங்கும்.

விராட் கோலி 5 சதங்களுடன் 42 முறை 50 ரன்களுக்கு மேல் அடித்து 2 ஆவது இடத்தில் உள்ளார். சுரேஷ் ரெய்னா ஒரு சதத்துடன் 39 முறையும், ரோகித் சர்மா ஒரு சதத்துடன் 39 முறையும், ஏபி வில்லியர்ஸ் 3 சதங்களுடன் 38 முறையும் அரைச்சதம் அடித்துள்ளனர்.(4)

# அதிவேக அரைச்சதத்தை பதிவு செய்த பூரன்

சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணிக்கெதிராக அதிரடியாக விளையாடிய நிக்கோலஸ் பூரன் 17 பந்தில் அரைச்சதம் அடித்து சாதனை படைத்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணிக்கெதிராக 202 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் பஞ்சாப் அணி களம் இறங்கியது.

தொடக்க வீரரான மயங்க் அகர்வால் 9 ரன்னில் வெளியேறினார். அடுத்து வந்த சிம்ரன் சிங் 11 ரன்னில் வெளியேறினார். அப்போது பஞ்சாப் அணி 4.2 ஓவரில் 31 ரன்கள் எடுத்திருந்தது.

அடுத்து நிக்கோலஸ் பூரன் களம் இறங்கினார். அவர் சந்தித்த பந்தை பவுண்டரிக்கு விரட்டினார். நடராஜன் வீசிய அடுத்த ஓவரில் ஒரு சிக்ஸ் அடித்தார். அபிஷேக் சர்மா வீசிய 7 ஆவது ஓவரில் 2 சிக்ஸ் விளாசினார். 9 ஆவது ஓவரை அப்துல் சமாத் வீசினார்.

ஓவரின் முதல் பந்தில் சிக்ஸ், 2 ஆவது பந்தில் பவுண்டரி, 3 ஆவது பந்தில் சிக்ஸ், 4 ஆவது பந்தில் சிக்ஸ் அடித்து 17 பந்தில் அரைச்சதம் அடித்தார்.

இந்த ஐ.பி.எல்.தொடரில் இது அதிவேக அரைச்சதம் ஆகும். ஒட்டுமொத்த ஐ.பி.எல்.வரலாறில் 2 ஆவது அதிவேக அரைச்சதம் ஆகும். (4)

# அன்று ரசிகனாக பார்த்தேன் இன்று பந்துவீச்சில் வீழ்த்தினேன்

## வருண் சக்ரவர்த்தி




ஐ.பி.எல்.தொடரில் விளையாடும் சுனில் நரைன், ரஷித்கான் ஆகியோர் மிஸ்டரி பந்துவீச்சாளர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள்.

அந்த வரிசையில் தமிழகத்தின் வருண் சக்ரவர்த்தியும் இணைந்துள்ளார்.

கொல்கத்தா அணியில் இடம் பிடித்துள்ள வருண் சக்ரவர்த்தி இறுதியாக சென்னையுடன் நடைபெற்ற போட்டியில் முக்கியமான தருணத்தில் எம்.எஸ். டோனியை 11 ரன்னில் க்ளீன் போல்டாக்கினார். 4 ஓவர்களில் 28 ரன்கள் மட்டுமே விட்டுக் கொடுத்து 1 விக்கெட் வீழ்த்தினார். எம்.எஸ்.டோனிக்கு எதிராக பந்து வீசியது நம்ப முடியாத தருணம் என வருண் சக்ரவர்த்தி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து வருண் சக்ரவர்த்தி கூறுகையில், "3 வருடத்திற்கு முன்பு சேப்பாக்கம் மைதானத்திற்கு சென்று எம்.எஸ்.டோனியின் ஆட்டத்தை ஒரு ரசிகனாக கூட்டத்திற்கு நடுவில் இருந்து பார்த்து ரசித்தேன்.

தற்போது டோனிக்கு எதிராக நின்று பட்டிங் செய்வதை பார்க்கிறேன். அவருக்கு நான் பந்து வீசினேன். இது எனக்கு நம்பமுடியாத வகையிலான தருணம்.

ஆடுகளம் மிகவும் பிளாட்டாக இருந்தது. இது 180 ரன்கள் அடிக்கக்கூடிய ஆடுகளமாக இருக்கும் என்று நினைத்தேன்.

டோனி சிறப்பாக பட்டிங் செய்து கொண்டிருந்தார். பந்தை சரியான லெந்தில் பிட்ச் செய்தால் விக்கெட் வீழ்த்த முடியும் என்று நினைத்தேன்.

திட்டத்தை சரியாக செயற்படுத்தினேன். போட்டி முடிந்த பின்னர் டோனியுடன் போட்டோ எடுத்துக் கொண்டேன்.

நான் தமிழில் சொல்ல விரும்பும் ஒரே வார்த்தை தல, தலதான்" என அவர் மேலும் கூறினார். (4)

## புலனாய்வு அதி...

வவுனியா, பட்டாணிச்சூர், பட்டைக் காட்டு பகுதியிலே 33 வயது மதிக்கத்தக்க இராணுவ அதிகாரியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா, பட்டாணிச்சூர், பட்டைக்காட்டு பகுதியில் கஞ்சா வியாபாரம் நடைபெறுவதாக நேற்று முன்தினம் மாலை இராணுவ உள்ளக புலனாய்வாளர்களுக்கு இரகசியமாகக் கிடைக்கப் பெற்ற தகவலையடுத்து அங்கு விரைந்த இராணுவ உளவுத்துறை அதிகாரி நீண்ட நேரம் ஆகியும் திரும்பி வராததால் அவரைத் தேடி அப்பகுதிக்குச் சென்ற ஏனைய உளவுத்துறை அதிகாரிகளால் நேற்று அதிகாலை குறித்த இராணுவ அதிகாரி வீட்டுக் கிணறு ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த இராணுவ உளவுத்துறை அதிகாரியின் சடலம் பிரேத பரிசோதனைக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

குறித்த அதிகாரி தேடுதலின்போது தவறுதலாக கிணற்றுக்குள் விழுந்தாரா? அல்லது திட்டமிட்ட கொலையா? என பல்வேறு கோணங்களில் வவுனியா பொலிஸாரும் இராணுவ உளவுத்துறை அதிகாரிகளும் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றார்கள். (ம-3,299)

## புலமைப் பரிசில்...

மிட்டபடி தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை நடைபெறும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

கல்வி அமைச்சு வெளியிட்ட விசேட அறிக்கையில் இது தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை நாளை 11ஆம் திகதி நாடு முழுவதும் உள்ள 2 ஆயிரத்து 936 பரீட்சை நிலையங்களில் நடத்தப்பட உள்ளது.

இந்த நிலையில், குறித்த பரீட்சையில் 3 இலட்சத்து 31 ஆயிரத்து 694 மாணவர்கள் தோற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## யாழ்.பல்கலை...

பெற்ற மோதல் சம்பவம் மற்றும் தாக்குதல்கள் தொடர்பில் சுயாதீன விசாரணைகளை மேற்கொள்வதற்காகத் தனிநபர் விசாரணை ஆயம் நியமனம் இடம்பெற்றுள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை மாலை கூடிய சிறப்புப் பேரவைக் கூட்டத்தில் வைத்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் வணிக முகாமைத்துவ பீடாதிபதி பேராசிரியர் எம். நடராஜசுந்தரம் சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காகப் பேரவையினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், மோதலில் ஈடுபட்ட கலைப்பீடத்தின் இரண்டாம் மற்றும் மூன்றாம் வருட மாணவர்களில் பல்கலைக்கழக நிர்வாகத்தால் அடையாளம் காணப்பட்ட 21 மாணவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்துக்குள் நுழைவதற்கு மறு அறிவித்தல் வரை தடை விதிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த மோதல் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களுக்கு நடவடிக்கை எடுக்கவும் தீர்மானங்களை எடுக்கவும் அதிஉச்ச அதிகாரத்தை துணைவேந்தருக்கு பேரவை வழங்கியுள்ளது. (ம-3)

## கலைப்பீட...

அட்டகாசத்தினால் விரிவுரையாளர் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் நிலைமை உருவாகியுள்ளது என யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கலைப்பீட பீடாதிபதி சுதாகர் தெரிவித்துள்ளார்.

கலைப்பீட அவை சார்பில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை நேற்று ஊடகங்களிற்கு அவர் அறிவித்தார்.

இதன்போது, கலைப்பீட அவை சார்பில் வெளியிடப்பட்ட தீர்மானம் பின்வருமாறு,

யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களிற்குள் இடம்பெற்ற மோதலை தீர்த்து வைக்க முயன்ற துணைவேந்தர், பீடாதிபதி, விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக அதிகாரிகள் ஆகியோர் மோதலில் ஈடுபட்ட மாணவர்களினால் அவதூறிற்கும், தாக்குதலிற்கும் ஆளானமையை கலைப்பீட அவை கண்டிப்பதுடன், உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பல்கலைக்கழக நிர்வாகத்தை கேட்டுக் கொள்கிறது.

கலைப்பீட 2ஆம், 3ஆம் வருட மாணவர்களிடையே இடம்பெற்ற மோதல் தொடர்பில், கலைப்பீட அவை நேற்றுக் காலை கூடி மேற்படி தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றியுள்ளது.

இது தொடர்பில் கலைப்பீட அவை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

கலைப்பீட மூன்றாம் வருட மாணவரொருவரால், இரண்டாம் வருட மாணவரொருவர் பயணித்த மோட்டார் சைக்கிளொன்றின் திறப்பு பலவந்தமாகப் பறிக்கப்பட்டதைத் தொடர்ந்து இருசாராருக்கிடையே முறுகல் நிலை தோன்றியது.

இதன் தொடர்ச்சியாக இரண்டாம் வருட மாணவர்களும் மூன்றாம் வருட மாணவர்களும் பல்கலைக்கழகத்திற்கு உள்ளேயும் வெளியேயும் கடுமையாக மோதிக் கொண்டனர்.

நிலைமையின் தீவிரத்தைத் தொடர்ந்து, ஏற்கெனவே மோதல்களைத் தவிர்ப்பதில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மாணவ ஆலோசகர்களுடன் துணைவேந்தரும் பீடாதிபதியும் விரிவுரையாளர்களும் சம்பவ இடத்திற்கு விரைந்து நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர தீவிர முயற்சிகளை மேற்கொண்டனர்.

இதன்போது, பல்கலைக்கழக மாணவ ஒழுக்காற்று அதிகாரியிடம் முறையிடச் சென்றிருந்த இரண்டாம் வருட மாணவர்கள், மூன்றாம் வருட மாணவர்களால் தாக்கப்படும் ஆபத்து உணரப்பட்டிருந்தது. அதனைத் தடுப்பதில் துணைவேந்தரும் பீடாதிபதியும் விரிவுரையாளர்களும் அச்சத்தில் காணப்பட்ட இரண்டாம் வருட மாணவர்களை சம்பவ இடத்திலிருந்து பாதுகாப்பாக வெளியேற்ற முயன்றபோது, மூன்றாம் வருட மாணவர்கள் துணைவேந்தரையும் விரிவுரையாளர்களையும் தகாத வார்த்தைப் பிரயோகங்களால் அவதூறு செய்தும், பாதுகாப்பாக இரண்டாம் வருட மாணவர்களை வெளியேற்றும் முயற்சிகளைப் பலவந்தமாகத் தடுப்பதிலும் ஈடுபட்டிருந்தனர்.

இதன் ஒரு கட்டத்தில், துணைவேந்தரும் சில விரிவுரையாளர்களும் மூன்றாம் வருட மாணவர்கள் சிலரால் தாக்கப்படக் கூடிய அளவிற்கு நிலைமை தீவிரமடைந்தது. இதன் விளைவாக, குறிப்பிட்ட ஒரு விரிவுரையாளர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும்அளவிற்கு நிலைமை ஏற்பட்டது.

உண்மை நிலைவரம் இவ்வாறிருக்க, மோதலில் ஈடுபட்ட மாணவர்களால் உண்மைக்கு மாறான செய்திகள் ஊடகங்கள் வழியாக வெளியிடப்பட்டன.

சில விரிவுரையாளர்களால் மாணவர்கள் தாக்கப்பட்டார்கள் என்றும், சிலர் தகாத வார்த்தைப் பிரயோகங்களை மாணவர்கள் மீது மேற்கொண்டார்கள் என்றும், மாணவர்களது எதிர்கால கல்வி நடவடிக்கைகள் தொடர்பில் அவர்களால் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டன என்றும் ஊடகங்களுக்கு மாணவர்களால் தெரிவிக்கப்பட்ட தகவல்களில் எதுவித உண்மையும் இல்லை என்பதனைக் கலைப்பீட அவை உறுதியாகத் தெரிவிக்கின்றது.

இதனால், மேற்படி மோதலில் உண்மை நிலைவரத்தை எடுத்துரைக்க கலைப்பீட அவை தீர்மானம் மேற்கொண்டதுடன், பல்கலைக்கழக நிர்வாகத்திற்கும் குறிப்பாக கலைப்பீடத்திற்கும் ஏற்பட்ட களங்கத்தை நீக்குமுகமாகவும் சம்பவங்களைத் தெளிவுபடுத்து முகமாகவும் இந்த ஊடக அறிக்கை வெளியிடப்படுகிறது.

அதேவேளை, மோதலில் ஈடுபட்ட மாணவர்கள் இனங்காணப்பட்டு, அவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், முதற்கட்டமாக உடனடியாக சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கு பல்கலைக்கழகத்திற்குள் நுழைவதற்குத் தடை அறிவிக்கப்பட வேண்டுமெனவும், அதுவரை விரிவுரையாளர்கள் விரிவுரைகளை மேற்கொள்ளப் போவதில்லை எனவும் கலைப்பீட அவை ஏகமனதாகத் தீர்மானம் மேற்கொண்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-3)

## சமூக பரவலாக...

பாராளுமன்றத்தில் நேற்று, எதிர்க்கட்சி பிரதம கொறடாவான லக்ஸ்மன் கிரியெல்லவினால் விசேட கூற்றொன்று எழுப்பப்பட்டு, நாட்டின் கொரோனா தொற்று நிலைமைகள் குறித்து அரசாங்கமும், சுகாதார அமைச்சரும் பொய்களை கூறி வருவதாக சபையில் சாடியிருந்தார்.

இதற்கு சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி பதில் தெரிவிக்கையில்,


கொரோனாத் தொற்றை முழுமையாக கட்டுப்படுத்தியுள்ளோம் எனவும், வைரஸ் சமூக பரவலாக மாறும் நிலைமையை கட்டுப்படுத்திய நாடு இலங்கை எனவும் நான் கூறியதாக லக்ஸ்மன் கிரியெல்ல சபையில் தெரிவித்துள்ளார்.

ஆனால் நாம் கூறிய விடயங்களை இவர்கள் எவரும் முழுமையாக கேட்கவில்லை. கொவிட் வைரஸ் பரவலை சமூக பரவலாக்க விடாது தற்போது கட்டுப்படுத்தியுள்ளோம் என்றே நான் கூறினேன்.

வைரஸ் பரவல் நிலைமைகள் நான்கு கட்டங்களின் அடிப்படையில் கருத்தில் கொள்ளப்பட்டது. இதில் முதலாவது தொற்றாளர் இல்லாத கட்டம், இரண்டாம் கட்டமாக வெவ்வேறு இடங்களில் தனித்தனி நோயாளர்கள் அடையாளம் காணப்படல், மூன்றாம் கட்டமாக கொத்தணிகளாக அடையாளம் காணப்படல்,

24



























# மதுபான சாலைகளை மூடும் நோக்கமில்லை

## கலால் திணைக்களம்

(கொழும்பு)

ஊரடங்குச் சட்டம் இல்லாத பிரதேசங்களில் மதுபான சாலைகளை மூடும் நோக்கமில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

கலால் திணைக்களம் இதுகுறித்த அறிவித்தலினை வெளியிட்டுள்ளது.

எனினும், ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் பிரதேசங்களில் மதுபான சாலைகள் மூடப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-03)

## இலங்கையை...

ஆணையத்தின் இயக்குநருமான யாங் ஜீச்சி (Yang Jiechi) தலைமையிலான ஏழு பேர் கொண்ட குழுவே நேற்று வெள்ளிக்கிழமை ஜனாதிபதி செயல கத்தில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்திருந்தது.

இந்த சந்திப்பிலேயே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். மேலும், இலங்கையின் அபிவிருத்தி முயற்சிகளுக்கு தொடர்ந்தும் உதவியளிப்பதாக சீன உயர் மட்ட குழுவினர் இதன் போது தெரிவித்துள்ளனர்.

சீனா- இலங்கை இருதரப்பு உறவுகள் ஏற்கெனவே மிகவும் திருப்திகரமான நிலையில் உள்ளன. இந்த நட்பைப் பேணுவதும் வளர்ப்பதும் சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங்கின் முன்னுரிமையாகும். ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவை உட்பட சர்வதேச அரங்கங்களில் இலங்கையின் சுதந்திரம், இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாடு ஆகியவற்றில் சீனா உறுதியாக நிற்கிறது என்றும் சீனக் குழு இதன்போது ஜனாதிபதியிடம் தெரிவித்தது.

கடந்த பொதுத் தேர்தலில் ஜனாதிபதி ஷி ஜின்பிங்கின் மகத்தான வெற்றியைப் பாராட்டிய யாங் ஜீச்சி, 35 ஆண்டுகளுக்கு முன்பு சீனக் குழுவுடன் மொழிபெயர்ப்பாளராக இலங்கைக்கு விஜயம் செய்ததை நினைவு கூர்ந்தார்.

தனது நான்கு நாடுகளின் ஆசிய சுற்றுப்பயணத்தில் இலங்கை முதல் நாடு என்றும், சீன ஜனாதிபதி இலங்கையுடனான இருதரப்பு உறவுகளை வளர்ப்பதற்கு அதிக முன்னுரிமை அளித்துள்ளார் என்றும் அவர் ஜனாதிபதியிடம் கூறினார்.

இதேவேளை தற்போதைய சீன- இலங்கை உறவுகளின் நிலையை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வரவேற்றார்.

மேலும் அதிகாரத்தில் உள்ள அரசாங்கங்களை வேறுபடுத்தாமல் இலங்கைக்கு ஆதரவளித்த நீண்டகால நண்பராக சீனாவை ஜனாதிபதி வர்ணித்தார்.

பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பதில் சீனா முக்கிய பங்கு வகித்தது. யுத்தம் முடிவடைந்த பின்னர் இருதரப்பு உறவுகள் ஒரு புதிய நிலையை எட்டின. தீவின் உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு சீனா அளித்த பங்களிப்பை ஜனாதிபதி நினைவு கூர்ந்தார். (ம-03)

## சமூக பரவலாக...

இறுதிக் கட்டமானது நாடு பூராகவும் அளவுகணக்கு இல்லாது நோயாளர்கள் அடையாளம் காணப்படல்.

இந்த கட்டங்களின் அடிப்படையில் இலங்கை எந்தக் கட்டத்தில் உள்ளது என்பதை அவதானித்தால் நாம் ஆரோக்கியமான மட்டத்தில் இருந்தோம். பரிசோதனை செய்து பார்க்கப்பட்டவர்களில் அச்சுறுத்தலான நிலைமைகள் எதுவும் இருக்கவில்லை.

எனவே சில மாத காலங்களாக நாம் நோயாளர் இல்லாத நாடாக செயற்பட்டோம். அதனைக் கருத்தில் கொண்டே நான் அவ்வாறான கருத்துக்களை முன்வைத்தேன்.

ஆனால் வேறு நாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களை அழைக்குமாறு கோரிக்கை விடுத்ததற்கு அமைய அவர்களை வரவழைத்து அதன் மூலம் வைரஸ் தொற்று பரவ ஆரம்பித்தால் நாடு மோசமான விளைவுகளை சந்திக்க வேண்டி வரும் எனவும் நான் கூறினேன்.

எனவே எனது கதையை திரிபுபடுத்த வேண்டாம். இலங்கையில் அச்சுறுத்தல்கள் இருப்பதாக நான் கூறியுள்ளேன். வெளிநாடுகளில் உள்ள சகலரையும் எம்மால் இலங்கைக்குள் வரவழைக்க முடியாது. அது இலங்கையில் நிலைமையை மாற்றும் என தெளிவாக கூறியுள்ளேன் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-03)

**விரைவு பொதிகள் சேவை**
V2 TRAVELS
1150/= Kg
பிரான்ஸ் / ஜெர்மனி
நெதர்லாந்து / சுவிஸ்
0768226240
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம்
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
(C-308)

**அமெரிக்க லொத்தர் விசா**
பதிவுகள் ஆரம்பம் 08-10-2020
நீங்களும் இந்த ஆண்டு அமெரிக்க லொத்தர் விசா அதிஸ்டசாலி ஆகலாம்.
இறுதி நேர ஏமாற்றத்தினை தவிர்த்திட
உடனடியாக கடவுச்சீட்டினை எடுத்து வைத்துக்கொள்ளுங்கள்
என்றும் உங்கள் மீது அக்கறையுடன் V2 TRAVELS
0768226244
(C-308)

**வேலை வாய்ப்பு**
விளம்பரத்துறையில் துண்டுப்பிரசுரம் விநியோகம் மற்றும் பனர் கட்டுதல் போன்ற வேலைகள் செய்ய ஆர்வம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்
நாள் சம்பளம் 1000/=
(30 வயதுக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது)
0768226244
(C-308)

**காணிகள் விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் , இராச வீதி, நவகிரி வங்கி வீதியில் அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை முன்பாக 22 பரப்புக் காணி விற்பனைக்கு.
2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.
1 பரப்பு பின்பகுதி 5 இலட்சம் ரூபாயும் முன்பகுதி 6 இலட்சம் ரூபாயும்
தொடர்பு : 077 805 1655
யாழ்ப்பாணம், ஊரெழு, பொக்கன் வீதியில் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. யாழ்ப்பாணம், கொட்டடி, சீனி வாசகம் வீதியில் 2 பரப்புக் காணியும் உள்ளது.
தொடர்பு : 077 190 4814
யாழ்ப்பாணம், இராச வீதியில் 2 பரப்புக் காணி உள்ளது. யாழ்ப்பாணம், இராச வீதி, தேசிய கல்வியற் கல்லூரி வீதியில் 2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. (4222)
தொடர்பு - குரு
077 468 3354
076 221 2037

**A/L தொழில்நுட்பப் பிரிவு**
S. SHAKTHY B.Sc. (Hons), M.Sc.
T.P : 077 170 3549, 076 170 3542
ZOOM ONLINE CLASSES - இலவச வகுப்புக்கள்
A/L 2021
தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
தரம் 12 இற்கான SFT பாடங்களின் Revision and Past Paper Discussion
திங்கள் முதல் வெள்ளி வரை 5.00 - 6.00 am
Meeting ID : 509 028 7747
Passcode : TWSFT2020
A/L 2021 பிரிவைச் சேர்ந்த எவரும் பங்குபற்றலாம்.
(C-499)

**A/L தொழில்நுட்பப் பிரிவு**
S. SHAKTHY B.Sc. (Hons), M.Sc.
T.P : 077 170 3549, 076 170 3542
ZOOM ONLINE CLASSES - இலவச வகுப்புக்கள்
A/L 2022
தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
விசை
திங்கள் முதல் வெள்ளி வரை 7.30 - 8.30 pm
Meeting ID : 509 028 7747
Passcode : TWSFT2020
A/L 2022 பிரிவைச் சேர்ந்த எவரும் பங்குபற்றலாம்.
(C-499)

**வீடு விற்பனைக்கு**
மானிப்பாயில் 2 1/2 பரப்புக் காணியுடன் நல்ல நிலையில் உள்ள வீடு விற்பனைக்கு உண்டு.
(சனி, ஞாயிறு தினங்களில் பார்வையிடலாம்.)
தரகர்கள் தேவையில்லை
077 778 7545
(C-498)

**பௌதிகவியல்**
T.K. KAJAN B.Sc
077 653 1177
(4218)

**BIOLOGY**
◆2021 - PAPER CLASS
◆அலகுரீதியான மீட்டல்
◆ROYAL EXAM CENTER இன் மாதாந்தப் பரீட்சைகள்
By. K. Sutha B.Sc. with Ed.
T.P : 077 401 2800
(4120)

**PHYSICS ZOOM CLASSES**
ஆரம்பம் - 12.10.2020
2022 - பொறியியல்
2021 - ஈர்ப்புப்புலம்
T.U. JIINTHU
GOLDEN SCIENCE ACADEMY
Navalar Road, Jaffna.
(4215)
இணைய விரும்புபவர்கள் விபரங்களை Viber or Telegram ஊடாக அனுப்பவும்.
T.P. / Viber / Telegram
076 603 4895
தனி மற்றும் குழு வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

**மணமகள் தேவை**
இலங்கையில் பிறந்து Switzerland இல் நிரந்தரமாக வசிக்கும் யாழ். இந்து கௌரவ குடும்பப் பெற்றோர் தமது 48 வயதுடைய சுயதொழில் புரியும் மகனுக்கு நற்பண்புள்ள, அழகிய மணப் பெண்ணைத் தேடுகிறார்கள். மணமகளின் ஜாதகம் மற்றும் சமீபத்திய புகைப்படம் மற்றும் ஏனைய விபரங்களுடன் பின்வரும் மின்னஞ்சலுடன் தொடர்பு கொள்ளவும். (4204)
Jeyaratnam1988@gmail.com 077 219 4331

**அமெரிக்கா லொத்தர் விசா**
2021ம் ஆண்டுக்கான விசா பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.
விசா மற்றும் பொதிகள் சேவை
LANKA CARGO WORLDWIDE EXPRESS
315, Kasthuriyar Veethy, Jaffna. (4391)
Tel : 076 485 4092

**இப்போது யாழ்.நகரிலும்**
இரண்டு மணித்தியாலத்தில்
கணினி திருத்தம்
உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகிறோம். அழையுங்கள்
077 9086737
GUNA BEST PC COMPUTER REPAIR
CCTV Camera
379, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
522 மானிப்பாய் வீதி ஓட்டுமடம் சந்தி யாழ்ப்பாணம்
(4221)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.10.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.